# ஞானச்சுடர்

சித்திரை 2016

220 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த**
**மாசறு காட்சி யவர்.**

**பொருள் :** தெளிந்த அறிவுடையவர் பயனில்லாத சொற்களை மறந்தும் சொல்லார்.

(199)

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்.**

**பொருள் :** சொல்லவேண்டுமாயின் பயனுடைய சொற்களைச் சொல்லுக; பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக.

(200)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



கீரன் சொன்ன வாசகங் கேட்டுப்
பேரன் புற்றுப் பிணியை நீக்கி
மாரனைக் காய்ந்த மறைமுதல் வோனைப்
பூரண மாகப் போற்றுவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 62

கையையுங் காலையு முன்பணிக் காக்கிச்
செய்கை யெல்லாந் திருவடிக் காக்கிப்
பொய்யுங் கொலையும் புலையும் போக்கி
மெய்யன் புடன்மே தினியில் வாழ்வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 63

கொன்றை மத்தம் தும்பை கூன்பிறை
துன்று கங்கை சூடிய சொக்கனை
மன்றுள் மாணிக்க வல்லி மகிழ்நனை
என்று மேத்தி யிறைஞ்சுதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 64

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 220

2016 சித்திரை

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| மண்ணில் நல்ல வண்ணம்... | எம்.பி. அருளானந்தன் | 01 - 02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 - 06 |
| பூவும், நீரும், தீபமும் | கு. சிவபாலராஜா | 07 - 09 |
| சந்தம், இராகம், தாளம்... | மு.க. மாசிலாமணி | 10 - 14 |
| சித்திர புத்திரனாரும்... | ஆர்வீ. கந்தசாமி | 15 - 16 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 17 - 21 |
| புகழ் பூத்த புவனேஸ்வரி... | பு. கதிரித்தம்பி | 22 - 24 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 25 - 28 |
| மனு நீதியின் தோற்றம் | நா. நல்லதம்பி | 29 - 31 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 - 33 |
| கடவுள் நடத்தி வைத்த... | அ. சுப்பிரமணியம் | 34 - 36 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 37 - 39 |
| தானே வந்து... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 40 - 42 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 43 - 44 |
| யாழ்ப்பாணத்திலே நமக்குக்... | செல்வதியம்மா | 45 - 46 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 47 - 51 |
| கடவுளும் நானும் | மு. கணபதிப்பிள்ளை | 52 - 53 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 54 - 55 |
| முற்றிப் பழுத்த முதுமைக்கனி | திருமதி ப. நடராஜா | 56 - 57 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 58 - 60 |

வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

கடந்த 18 வருடங்களாக திங்கள் மலராக வெளிவந்துகொண்டிருக்கும் பங்குனிமாத வெளியீடான ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் வெளியீட்டுரையின்போது சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சகல சமூகப் பணிகளின் பலாபலன்களை எடைபோட்டு தமது மனதில் எழுந்த எண்ணப் பதிவினை மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களுக்கு எடுத்துக் கூறியதுடன் இத்தகைய செயற்பாடுகள் இங்கே இடம்பெறுவதன்மூலம் ஆச்சிரமம் மென்மேலும் பெருமை பெறுகின்றது. இவற்றுக்கு எல்லாம் சந்நிதி வேற்பெருமானது பூரண அருட்கடாட்சம் இங்கே வியாபித்திருப்பதன் அடிப்படையில் சகல விடயங்களும் நடைபெறுகின்றது. இவ்வகையின் காரணமாக நாமும் பங்கு பற்றக் கூடியதாக உள்ளது என்று கூறி தமது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

219ஆவது மலராக வெளிவந்த பங்குனிமாத சுடருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் கவிமணி அன்னைதாசன் எனும் கவித்துவமிக்கவருமாகிய திரு க. ஆனந்தராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் இவ்வகை ஆன்மீகம் சார்ந்த மலர் காலவோட்டத்தில் அடியுண்டு போகாமல் தொடராக வெளிவந்து 219ஆவது மலராக வெளிவருவது ஒரு போற்றுதற்குரிய விடயமாகவே உள்ளது. இம்மலர் தொடராக வெளிவருவதனால் ஆன்மீகம் சார்ந்த ஆக்கங்களை வழங்குவோருக்கும் ஒரு உந்து சக்தியாகவும் அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும் ஒரு காரணியாக அமைகின்றது.

இவை அனைத்திற்கும் மூல காரணமாக விளங்குபவன் சந்நிதி வேலவனது அருட்பொலிவு என்று கூறி மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் சிறப்புப்பற்றி சபையில் கூடியிருந்த அடியார்களுக்குக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

உ



# சுடர் தரும் தகவல்

சந்நிதி வேற்பெருமானது பூரண அருட்கடாட்சத்தோடும், ஆச்சிரம சுவாமிகளது அர்ப்பணிப்புடனான சேவையினூடாகவும் கடந்த பதினெட்டு வருடங்களாக மாதம் ஒரு சுடராக வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரானது எதிர்வரும் புரட்டாதி மாதம் 225ஆவது மாத மலராக வெளிவர இருக்கின்றது. இத்தகு சாதனைக்கு மலருக்கு ஆக்கங்களை வழங்கிக்கொண்டு வரும் ஆன்மீக சிந்தனையாளர்களும், அச்சிந்தனைகளினூடாக உள்வாங்கப்பட்ட வாசக அன்பர்களும், சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல சமூகப் பணிகளுக்கு உந்துசக்தியாக விளங்கும் ஆச்சிரமம் சார்ந்த அன்பர்களும் உரித்துடையோராக விளங்கி வருகின்றனர்.

இதனடிப்படையில் 225ஆவது மலராக வெளிவர இருக்கும் புரட்டாதி மாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டினை ஒரு காத்திரமான செயற்பாடாக செயற்படுத்த வேண்டும் என்னும் பேரவாக்கொண்டு எம்மனதில் தோன்றிய எண்ணக்கருத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

இக்கருத்தினை வலியுறுத்தும் வண்ணம் 225ஆவது சுடரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவருகின்ற பலவித சமய சமூகப் பணிகளை முதன்மைப்படுத்தியும், ஞானச்சுடர் மலரின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரையுள்ள வளர்ச்சி பற்றியும் தமது எண்ணக் கருத்தினை ஆக்கங்களாக எழுதுவதன்மூலம் 225ஆவது மலர் ஆச்சிரமம் சார்ந்த ஒரு ஆவண மலராக வெளிவர இருக்கின்றது. அம்மலருக்காக கிடைக்கப்பெறும் ஆக்கங்களின் தராதரம் பரிசீலிக்கப்பட்டு மலரில் இடம்பெறச் செய்வதோடு அவ் ஆக்கங்களை வழங்கியோருக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட உள்ளது என்பதை மனநிறைவோடு உங்கள் முன் வைத்துள்ளோம்.

ஆகையால் 225ஆவது புரட்டாதி மாத மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் மேற்கூறிய விடயம் சார்ந்ததாகவே அமைய வேண்டும். அவ்வகையில் எதிர்வரும் ஆடிமாத நடுப்பகுதிக்கு முன் தத்தமது ஆக்கங்களை வழங்குவதன்மூலம் இம்மலர் வெளியீட்டினைச் சிறப்படையச் செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

உ



# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## I. காப்புப் பருவம்

(தொடர்...

### வீரபத்திரர், பத்திரை, திருமகள், வாணி, சூரியன், சந்திரன், சாலினி, தருமக்கடவுள்

அருளாளர் வீரபத்
திருடன் பத்திரையை
அன்னைதிரு வைவாணியை
அகிலமுந் தன்னொளிக்
கதிர்க்கரத் தால் தீண்டும்
ஆதித்தனைத் திங்களை
ஒரு விண்மீ னெனவானில்
திகழ்கின்ற சாலினியை
ஒப்பில் தருமக் கடவுளை யென்
உளம் வாக்குக் காயத்தால்
நலம் மேவ எந்நாளும்
உணர்ந்து பணிந் தேத்துவேனே
திருவயரும் ஆறுபடை
வீட்டில்நல் வீறுத்தில்
சிறந்தகதிர் காமத்திலும்
திகழ்மாவை கந்தவனம்
இணையில் மண் டூரிலும்
சிறப்புடன் வீற்றிருக்கும்
பெரும் மாயன் மருமகன்
சிவஞானக் குருபரன்
பிரிய வள்ளி தெய்வானை
பெட்புடைய மணவாளன்
நட்புடனே சந்நிதிவாள்
பெருமானைக் காக்க வென்றே.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

திருமதி S. சிவக்கொழுந்து
(சிரேஷ்ட முகாமையாளர், நிதிப்பிரிவு ம.வ தலைமை அலுவலகம், கொழும்பு)
திருமதி புரந்தகி சுபதேவன்
(முகாமையாளர் மக்கள் வங்கி சுதுவெல்ல, கொழும்பு)
திருமதி எழில்மதி ஜெயநாதன்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)
திருமதி சோபனா முகுந்தன்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, நாரகென்பிட்டி)
திருமதி G. பாலமதி
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, செட்டித்தெரு, கொழும்பு)
திருமதி S. லோஜினி
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
திருமதி S. சாஜிசுதா
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி வெள்ளவத்தை)
திருமதி T. நாராஜனி
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
S. சிந்துவர்மன்
(உத்தியோகத்தர் மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)
நா. குகன்
(குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை)
பொ. பாலசிங்கம்
(பத்தமேனி, அச்சுவேலி)
இராசையா சற்குணதாஸ்
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
திருமதி ஸ்ரீனிவாசன்
(பழம்றோட், கந்தர்மடம்)
Dr R. பாக்கியநாதன்
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)
திருமதி சிவராஜா
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)
க.வ. இரவீந்திரநாதன்
(விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்)
செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்
(யாழ்ப்பாணம்)
வீ. கிருஷ்ணராஜா
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சி. கனகசபாபதி
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)
மா. குலநாதன்
(நாதன் கராஜ், அச்சுவேலி)
மனோகரி
(சுண்ணாகம்)
ஐயாத்துரை முருகதாசன்
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)
செ. சிவராசா
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
S. தர்மபாலகிருஷ்ணன்
(தும்பளை பருத்தித்துறை)
த. நடேசன்
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
க. கிரிதரன்
(திரு இல்லம், கரவெட்டி)
வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
க.கு. கிருபாகரராசா
(பிரதானவீதி, ஆவரங்கால்)
இ. மனோகரன்
(மனோ லைற், கோப்பாய்)
சி. நந்தகுமார்
(வங்கி ஊழியர், உரும்பராய்)
ச. கனகராசா
(யாழ்ப்பாணம்)
சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
வ.க. சாம்பசிவம்
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
சி. அமிர்தசாகரன்
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
தி. பாலசிங்கம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
சி. சுகிர்தலிங்கம்
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
T. இரவீந்திரதாஸ்
(சாமியன் அரசடி, கரவெட்டி)
சி. குமாரவேல்
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)

உரிமையாளர்
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
க. ஞானச்சந்திரன்
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
ஐ. வேலாயுதர்
(வேல்வாசம், கோப்பாய்)
ஐ. நற்குணநாதன்
(உடுவில், சுண்ணாகம்)
இ. ஸ்ரீஸ்கந்தராம்
(உப தபாலதிபர், உரும்பராய்)
இரா. சிவலிங்கம்
(கேசரிவிலா, கரவெட்டி)
வே. சந்திரசேகரம்பிள்ளை
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
K. இராமச்சந்திரன்
(சங்கானை)
த. இராஜசிங்கம்
(நீர்வேலி)
ம. புலேந்திரன்
(கரணவாய், கரவெட்டி)
கி. தவராசா
(காந்தியூர், புலோலி)
உரிமையாளர்
(அரவிந் போட்டோ, ஆனைப்பந்தி)
ஐ. சத்தியபாலன்
(பலாலி வீதி, உரும்பராய்)
க. இராஜேஸ்வரி
(சுண்ணாகம்)
செ. ஸ்ரீனிவாசன்
(அல்வாய்)
செல்வி சந்திரலிங்கம் மாதுமை
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
சுப்பிரமணியம் சுரேஸ்குமார்
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
க. கணேசதேவா
.(மாதகல்)
அதிபர்
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
வி. செல்வரெத்தினம் J.P
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)

ஐ. குகேந்திரராணி
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
N. பாலசுப்பிரமணியம்
(நீர்வேலி வடக்கு)
ம. கந்தையா
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
க. மகேந்திரன்
(சங்கத்தானை, சாவகச்சேரி)
தங்கராசா கலாஜோதி
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
செல்வி பாலாம்பிகை கந்தசாமி
(கட்டைவேலி, கரவெட்டி)
A. தயாவதி
(வேம்படி, வல்வெட்டித்துறை)
S. தங்கேஸ்வரா
(காட்டுப்புலம்)
ம. சிவானந்தம்
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
எஸ்.ரி. குமரன்
(மல்லாகம்)
பொ. காசிலிங்கம்
(கொக்குவில்)
கா. செல்லத்துரை
(உடுவில், சுண்ணாகம்)
வீ. புஸ்பநாதன்
(உரும்பராய் வடக்கு)
சந்திரசேகரம் மகிந்தன்
(சிறுப்பிட்டி மேற்கு)
தர்சினி பகீரதன்
(உப தபாலதிபர், நீர்வேலி)
கு. குணரூபன்
(மீசாலை கிழக்கு)
வ. ஆறுமுகம்
(இளை. அதிபர், ஆவரங்கால்)
கி. வரதராசன்
(அச்சுவேலி தெற்கு)
அ. சந்திரகுமாரன்
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
வி. நாகம்மா
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ மலர்ந்துள்ள 'துர்முகி' ஆண்டு வழிகாட்டட்டும்

– திரு காரை எம்.பீ. அருளானந்தன் அவர்கள் –

இறைவனை ஒளிவடிவத்தில் வழிபடுவது ஆலய வழிபாடாகும். மேடம் முதல் மீனம் வரை பன்னிரண்டு ராசிகள் உள்ளன. ஒவ்வொரு ராசியும் முறையே சித்திரை முதல் பங்குனி வரை ஒவ்வொரு மாதத்தைக் குறிக்கிறது. மேடம் முதலாவது மாதமாகக் கொள்ளப்படுகிறது. முதலாவது இராசியான மேடத்தில் சூரியன் புகும் தொடக்க நாள், சித்திரை முதல் நாளாகும். இந்த நாளே புத்தாண்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்துக்கள் சித்திரை முதலாம் திகதியன்று புதுவருடப்பிறப்பினை பண்டிகையாகக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

சூரியன் நிற்கும் நிலையைக் கொண்டு பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன. இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவகாலங்கள் ஒரு வருடத்தில் ஏற்படுகின்றன. வசந்தருது எனும் இளவேனிற் காலம் உயிரினங்களுக்கும் இதமான, சுகமான காலம். மிதமான காலநிலை, பதமான இயற்கைச்சூழல், பூத்துக் குலுங்கும் மலர்களின் மலர்ச்சி, அறுவடைக்குப் பின்னர் தானிய விருத்தி போன்றன இளவேனிற் காலத்து இலட்சணங்கள். இந்த மகிழ்ச்சியும், பூரிப்பும் நிறைந்த பொன்னெழில் கொண்ட வசந்தருதுவின் தொடக்கத்தில் புது வருடமும் மலர்கிறது.

புதுவருடப் பிறப்பைத் தொடர்ந்து வருகின்ற இளவேனிற் பருவத்தை ஆடல், பாடல், விளையாட்டுக்கள், மங்களகரமான காரியங்கள், விருந்துண்ணல் என்பவற்றில் மக்கள் ஈடுபாடு கொண்டு இன்பமாகக் களிப்பர். இத்தகைய இன்பமான, சம்பிரதாயமான, மரபுவழியான விளையாட்டுக்களும் பொழுது போக்குகளும் மலர்கின்ற புத்தாண்டை அலங்கரிக்கின்றன. உலகியல் இன்பங்களை ஆன்மீகத்துடன் இணைத்து, ஆன்மீக ஒப்புதலுடன் அனுபவிக்கும்போது அதனால் கெடுதல் இல்லை என்பதை இந்துக்கள் புதுவருடத்தை கொண்டாடி மகிழும் நெறிமுறைகளைப் பார்க்கும்போது புரிந்துகொள்ள முடிகிறது. அதனால் வருடப் பிறப்புப் பண்டிகை, அதைத் தொடரும் பல்வேறு நிகழ்ச்சிகள் யாவும் சமயத்தோடு தொடர்புபடுத்தி இறை சிந்தனையுடன் ஆற்றவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது.

புதுவருடப் பண்டிகை ஒரு சமூக விழாவாக மாத்திரம் அமையாது, சமய விழாவாகவும் விளங்குவதில் அதன் சிறப்புத் தங்கியுள்ளது.

புதுவருடம் பிறப்பதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியை புண்ணிய காலம் என்பர். இப்புண்ணிய காலத்தில் இறைவனை நினைத்து சங்கற்பித்து மருத்துநீர் தலையில் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து, திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று இயன்ற தான தர்மங்களைச் செய்தல் வேண்டும்.

புதுவருடம் பிறக்கும் நேரத்தைச் சோதிடர்கள் கணித்துக் கூறுவர். குறித்த அந்த வேளையில் குத்துவிளக்கு ஏற்றி, நிறைகும்பம் வைத்து புத்தாண்டை வரவேற்பது மரபு. அதிகாலையில் நித்திய, நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துத் தம் இல்லங்களில் குடும்பத்தவர் சகிதம் சூரியனுக்குப்

*இன்பம் வந்தபோதும் இறைவனை மறவாதே.*

பொங்கல் பூசைகள் செய்வது இந்துக்களின் வழக்கம்.

**கைவிசேஷம்:**

நல்ல சுபநேரத்தில் கைவிசேஷம் நடைபெறும். "கைவிசேஷம்" என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சையரிசியிட்டு அதன்மீது காசு பணம் வைத்து குடும்பத் தலைவன் தமது குடும்பத்தவருக்கு வழங்குதல் என்பதைக் குறிக்கும்.

கைவிசேஷத்தைப் பெரியவர்களிடம் பெற்ற பின்னரே கொடுக்கல், வாங்கல் ஏனையவர்களிடம் செய்யப்படும்; விருந்துண்ணல், குரு, பெரியவர்கள், நண்பர்கள் தரிசனம் என்பன வியாழன், செவ்வாய் தவிர்ந்த நாட்களில், திதி, நட்சத்திரம், யோகம் என்பன சுபமாகவுள்ள வேளையில் நிகழ்த்தப்படும்.

எந்த வேலையையும் நல்ல நாள் மூகூர்த்தம் பார்த்து சுபவேளையிலேயே புது வருடத்தில் தெய்வத்தை நினைத்துத் தொடங்கும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இவை அனைத்தும் வெறும் சம்பிரதாயங்கள், அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதிவிடக் கூடாது. இவற்றுக்குப் பின்னால் பல அர்த்தங்கள் உண்மைகள் உண்டு. இவை வீணானவை என்றால் எப்பொழுதோ மறைந்திருக்கும். ஆனால் இன்றுவரை நிலைத்திருக்கின்றன. இவற்றால் மனிதர்கள் புத்துணர்வும், மகிழ்ச்சியும், புதுத்தென்பும் பெறுகின்றார்கள்.

வாழ்க்கையில் பிடிப்பும், நம்பிக்கையும், திருப்தியும் அடைகிறார்கள். இவையே இதற்குச் சான்று கூறப் போதுமல்லவா? புது வருடத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களும், நல்லெண்ணங்களும் வாழ்வில் அமைதியையும், சாந்தியையும் தரும் என்பது திண்ணம். எல்லோரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் சமாதான வாழ்வைச் சந்திக்கவும் மலருகின்ற துர்முகி வருடம் வழிகாட்ட வேண்டுவோமாக.

### முத்துச் சிரிப்புடன்
### சித்திரத் தேர் ஏறி வருகிறான்

ஆற்றங்கரை அன்னதானக் கந்தன்
அல்லல்கள் அழிப்பவன் ஆறுதல் தருபவன்
ஏழைகளுக்கு இன்பம் அளிப்பவன்
ஏற்றம் மிகக் கொண்டவன்
ஏறுமயில்வாகனன் சேவற்கொடி உடையவன்
வேலுண்டு பயமில்லைஎன அபயங்கூறி
வேற்றுமை கொண்ட சூரனை அழித்து
மங்கல வாத்தியங்கள் முழங்க முத்துச்சிரிப்புடன் சித்திரத்தேரேறி
வீதிஉலா வருகின்றான் சந்நிதி முருகன்.

-க. சரவணபவன்-

*ஈன்றவள் திருவடியே இறைவன் இருக்கும் இடம்.*

# திருச்சதகம் (தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 2. அறிவுறுத்தல்

15. நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

**ப.உரை:**

ஆடகம் சீர் மணி குன்றே- மாற்றுயர்ந்த பசும் பொன்னில் அமைந்த சிறப்பினையுடைய மாணிக்க மலை போன்றவனே, எம் உடையானே- எம்மை அடிமையாக உடையவனே, நான் உன் அடியார்போல் நாடகத்தால் நடித்து- யான் உன் அடியவர் போல உருவங் கொண்டு நாடகம் ஆடி, நடுவே வீடு அகத்தே புகுந்திடுவான்- அந்நடிப்பளவிலேயே நின்றுகொண்டு இடையில் வீட்டு நிலையிற் புகுவதற்கு, மிக பெரிதும் விரைகின்றேன்- அளவின் மிக்க விரைவோடு முற்படுகின்றேன்; உனக்கு இடைஅறா அன்பு- ஆதலால் உன்னிடத்தில் இடைவிடாமல் நிகழும் மெய்யன்பு, என் அகத்து ஊடு நின்று உருக தந்தருள்- என் உள்ளத்தினிடத்து நிலைபெற்று ஆதலால் உள்ளம் உருகும் படி அடியேனுக்குத் தந்தருள்வாயாக.

மணிக்குன்றே உடையானே, நான் உன் அடியார்போல் நடித்து அந்நடிப்பளவிலேயே நின்றுகொண்டு இடையில் வீட்டு நிலையிற் போதற்கு மிகப் பெரிதும் விரைகின்றேன்; ஆதலால் உன்னிடத்து இடையறாமல் நிகழும் மெய்யன்பு என் உள்ளத்தினித்தே நிலைபெற்று அதனால் உள்ளம் உருகும்படி அடியேனுக்குத் தந்தருள வேண்டும் என்பதாம்.

நாடகத்தால் நடித்தல்- கூத்தாடுவார் எடுத்த கூத்திற்கு இயைந்தவர்களின் வேடம் தாங்கி நடித்தல். யான் மெய்யுணர்வினை அடைந்தும், என் உள்ளத்தில் மெய்யன்பு நிகழாமையால் அதனைப் பிறர் அறியாதவாறு உன் மெய்யடியார்போல் நடிப்பேனாயினேன் என்பார். "நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து" என்றார். அவ்வளவிலும் அமையாது இந்நடிப்பு நிலையிலேயே நின்றுகொண்டு இடையில் மெய்யன்பர் பெறத்தக்க வீட்டு நிலையிற் புகுதற்கு மிகமிக முற்படுகின்றேன் என்பார். "நான் நடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்" என்றார். புகுந்திடுவான், வான் ஈற்று வினையெச்சம்.

ஆடகம்- பொன். "ஆடக மாட நெருங்குங் கூடல்" என்னும் தேவாரத்தும் இப்பொருட் டாதல் காண்க. ஆடகச்சீர் மணிக்குன்றே என்றது மாற்றுயர்ந்த பொன்னின் பசுமையும் மாணிக்க மணியின் வண்ணமும் கலந்த அம்மையப்பரது திருவுருவைக் குறித்தது. "மாசற்ற

*பக்தி பகட்டில் இல்லை பணிவில் இருக்கிறது.*

மணிக்குன்றே" (சதகம் 24) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. "மற்றவரறியா மாணிக்க மலையை" எனச் சேந்தனார் திருவிசைப்பாவில் (திருவீழிமிழலை2) வருதலும் ஈண்டறியற்பாலது. மணி என்றது ஈண்டு மாணிக்கம், 'அக்கு மரவு மணி மணிக்கூத்தன்' (திருக்கோவை 103) என்புழிப்போல. குன்றே என்றார் அளக்கலாலா அளவும் பெருமையுமுடைய இறைவன் பேரூழிக் காலத்தும் தாள் ஒடுங்குதலின்றி அசைவற்ற இயல்புடையவனாதலன்.

"வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு"

(தெள் 18)

என அடிகள் அருளியமையுங் காண்க.

வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேனாதலின் அது கைகூடுதற்கு என் உள்ளத்தில் இடையறா மெய்யன்பு நிலைபெறவும், அவ்வன்பினால் உள்ளம் உருகவும் செய்தருள வேண்டும் என்பார். "இடையறா அன்புனக் கென்னூடகத்தே நின்றுருகத் தந்தருள்" என்றார். அடிகள் இறைவன்பால் அன்பையே வேண்டுதல்.

"உன்றன வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமா யருளாய்"
சத 6.

"நின்கழற்கணே, மெய்கலந்த அன்ப ரன்பெனக்கு மாகவேண்டும்"
சத 73.

"வேண்டு நின்கழற்கண் அன்பு" சத 74.

"மெய்யன்பை உடையாய் நான் பெறவேண்டும்" பிரார்த் 3.

"அணியா ரடிய ருனக்குள்ள அன்புந் தாராய்" பிரார்த் 8.

என வருஉம் திருவாக்குகளானுமறிக.

இதன்கண் உன்னடியார்போல் நடித்து வீடகத்தே புகுதிடுவான் விரைகின்றேன். அங்ஙனமாயினும் அது கைகூடும் வண்ணம் இடையறா அன்பு தந்தருள் என வேண்டிக் கொள்ளப்படுதலின் அறிவுறுத்தல் என்றாலும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 1

16. யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

**ப.ரை:**

யான் பிறப்பு ஏதும் அஞ்சேன்- யான் பிறப்பதற்கு ஒரு சிறிதும் அஞ்சுவேனல்லேன்; இறப்பதனுக்கு என் கடவேன்- அப்பிறப்பின் பின்வரும் இறத்தற்கு யாது செய்யவல்லேன்; வானேயும் பெறில் வேண்டேன்- விண்ணுலக அரசு எனக்கு எளிதிற் கிடப்பதாயினும் அதனை விரும்பேன்; மண் ஆள்வான் மதித்தும் இரேன்- விண்ணுலக அரசை விரும்பாத யான் மண்ணுலகத்தை ஆளுதற்கு நெஞ்சத்தால் நினைத்தும் இருக்கமாட்டேன்; தேன் ஏயும் மலர் கொன்றை சிவனே- தேன் பொருந்திய கொன்றை மலர் மாலையையுடைய சிவபெருமானே,

எம்பெருமான்- எங்கள் தலைவனே, எம்மானே- எம்முடைய இறைவனே, உன் அருள்பெறும் நாள்- நினது திருவருளைப் பெறுதற்குரிய காலம், என்று என்று வருந்துவன்- எப்பொழுது வாய்க்கும் என்று நினைந்து வருந்துவேன்.

யான் பிறத்தற்குச் சிறிதும் அஞ்சுவேனல்லேன்; ஆனால் பிறப்பின் பின்வரும் இறத்தற்கு யாது செய்ய வல்லேன்; விண்ணுலக அரசு எனக்கு எளிதிற் கிடைப்பதாயினும் அதனை விரும்பேன்; மண்ணுலகத்தை ஆளுதற்கு நினைத்தும் இருக்க மாட்டேன்; கொன்றைமலர் மாலையையுடைய சிவனே, எம்பெருமானே, எம்மானே, நினது திருவருளைப் பெறுதற்குரிய நாள் எப்பொழுது வாய்க்கும் என்று நினைத்து வருந்துவேன் என்பதாம்.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன் என்றது பிறப்பும் இறப்பும் அஞ்சுதற்குரியனவாயினும் பிறக்குங் கால் உயிர் உணர்வு விளக்கம் முழுவதும் எய்தாமையின் அப்பிறப்பின்கண் உண்டாகும் துன்பம் புலப்படாமை பற்றியும், இறக்குங்கால் உணர்வு விளக்கம் மிக்கவிடத்து இறப்புத்துன்பம் மிகப் புலப்படுதல் பற்றியுமாகும். அங்ஙனம் கொள்ளினும் அடிகளின் நோக்கம் பிறப்புக்கும் இறப்புக்கும் அஞ்சுவேன் என்பதாம். "பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்... வெண்ணீ றணிகிலாதவரைக் கண்டால் அம்மநா மஞ்சுமாறே" (அச்சப் 5) என்னும் அடிகள் திருவாக்கு ஈண்டு உணரத்தக்கது. ஏதும்- சிறிதும். "யாதோ வறிகுவதேது மரிது" என்னும் திருக்கோவையாரினும் (2) இப்பொருட்டாதல் காண்க.

"வானேயும் பெறில் வேண்டேன்; மண்ணாள்வான் மதித்து மிரேன்" என்றது யான் எவ்வளவு அஞ்சினும் என் வினை அறாதபோது பிறப்பும் இறப்பும் உளவாகும். பிறந்து மண்ணாள்வான் கருதியுமிரேன்; இறந்து தேவவடிவடைந்தபோது வானாட்சி கிடைப்பினும் அதனையும் விரும்பேன் என்றவாறு, வானேயும் என்பதில் ஏ, பிரிநிலை; வானேயும் பெறில் என்பது வானே பெறினும் என உம்மை பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

தேனேயும் மலர்க்கொன்றை- தேன் பொருந்திய கொன்றை மலர்" "தேனார் மலர்க் கொன்றை" (அம் 16) "தேனாடு கொன்றை" (பூவல் 5) தேனக் மாமலர்க் கொன்றை (பொற் 17) என இத்திருவாசகத்தும் "தேன்திகழ் கொன்றையும்" "தேனுடைக் கொன்றை" (நாவு 107:10; 104:4) எனத் தேவாரத்தும் வருவன காண்க. மலர் மாலைக்கு ஆகுபெயர். இறைவற்குக் கொன்றை மலர் சிறந்த அடையாளப் பூவாகும்.

"தேனேறு மலர்க்கொன்றைக் கண்ணியான் காண்"
நாவு 237:2

"கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும்" நாவு 225:4

"வண்டார் கொன்றைத், தாரன் மாலையன் தண்ணறுங்
கண்ணியன்" நாவு 126:7

எனத் தேவாரத்தும்,

தேனொருபால் திகழ் கொன்றை யணிசிவன்" (275)

எனத் திருமந்திரத்தும்,

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" கடவுள் 1-2

என அகநானூற்றினும்,

*பெரியோர் போதனையை மரியாதையாய்க் கொள்.*

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை"

கடவுள் எனப் புறநானூற்றினும் வருவன காண்க.

ஏயும்- பொருந்தும். "முகிழ்சூழ் இலையும் முகைகளும் ஏயுங் கொல்" (11-ந் திரு. திருப்பண்ணி 25) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. எம்மான்- எம்முடைய இறைவன். "இகல்குன்ற வில்லிற் செற்றேனென்றில்லை யீசன் எம்மான்" என்னும் திருக்கோவையார் (4) உரையில் எம்மான் என்பதற்கு "எம்முடைய விறைவன்" எனப் பேராசிரியர் பொருளுரைத்தமை யுங் காண்க.

"அருள்பெறு நாள் என்று" என்ற குறிப்பு என் உள்ளத்து மெய்யன்பின்மையாலும் அதனால் உள்ளம் உருகாமையாலும் நின் அருளைப் பெறுதல் அரிதாகின்றது என அருள்பெறு தற்குரிய சாதனமின்மைபற்றி வருந்தியமையைப் புலப்படுத்தி நின்றது, என்றே என்பதில் ஏ தேற்றம்.

இதன்கண் என் உள்ளத்தின்கண் மெய்யன்பின்மையாலும் அதனால் உள்ளம் உருகாமையாலும் யான் நின்பாற் பெறவேண்டிய அருளைப்பெற மாட்டாதவனாயிருக்கின்றேன் என இறைவனிடத்து முறையிடும் குறிப்பினால் உள்ளத்திற்கு அறிவுறுத்தல் பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க. 12.

(தொடரும்...

**இறைவனின் இருப்பிடம்**

மனிதனைப் படைத்த சிறிது காலத்துக்குள்ளேயே, அவனை ஏன் படைத்தோம் என்றாகிவிட்டது கடவுளுக்கு. காரணம், மனிதர்கள் ஏதாவது ஒரு கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டு, கடவுளைத் தொல்லைப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

கடவுள், தேவர்களை அழைத்து, "எங்கே போய் ஒளிந்து கொள்ளலாம்" என ஆலோசனை கேட்டார். "இமய மலையின் உச்சிக்குப் போய்விடுங்கள்"

"எவரெஸ்ட் சிகரத்திலே காலடி வைத்து விட்டவர்கள், அங்கே என்னைத் தேடிக் கொண்டு வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?"

"பசிபிக் மகா சமுத்திரத்தின் அடியில் போய் ஒளிந்து கொள்ளுங்களேன்". "அதன் ஆழத்தையும் கூட அளக்க ஆரம்பித்து விட்டார்களே" என்றார் கடவுள்.

சந்திர மண்டலம், செவ்வாய் மண்டலம் என்றெல்லாம் யோசனை சொன்னார்கள் தேவர்கள். அதெல்லாம் கூட மனிதர்கள் வரக்கூடிய இடங்களே என்று அச்சப்பட்டார் கடவுள். தேவர்களில் ஒருவர், கடவுளின் காதில் ரகசியமாகச் சொன்னார், "மனிதனின் மனதில் போய் ஒளிந்து கொள்ளுங்கள். அவன் தேடிப் பார்க்காத இடம் அது ஒன்றுதான்". கடவுளும் அவ்வாறே செய்தார்.

இன்றும், மனிதன் தன் மனதைத் தவிர, வேறு எல்லா இடங்களிலும் கடவுளைத் தேடிக்கொண்டிருக்கின்றான்.

-பக்தி-

*மிகச் சிறந்த வழிகாட்டி உன் மனச்சாட்சியே.*

# பூவும், நீரும், தீபமும்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

பூவும், தண்ணீரும் இட்டு இறைவழிபாடு செய்யும் மரபு சைவர்கள் மத்தியில் நீண்டகால வழக்கமாக இருந்துள்ளது. இத்துடன் இறைவனுக்கு தீபம் ஏற்றி வழிபடுதல் இதன் வழிவந்த வழிபாட்டு முறையாகும். இவ்வழிபாட்டு முறைகள் கிரியைத் தொண்டுகள் என சைவசமயத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ளன. கோவில்களில் கருவறையில் வீற்றிருக்கும் மூர்த்தி உருவங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு நீரினால் குடமுழுக்கு செய்யப்படுதல் சிறப்பான வழிபாட்டு மரபாகும். நாம் கோவில்களுக்குச் செல்லும்போது பூவும், தீபம் ஏற்றுவதற்குத் தேவையான பொருட்களும் (கற்பூரம், எண்ணெய் அல்லது நெய், விளக்கு (சுட்டி முதலியன) குங்கிலியம் அல்லது சந்தணக் குச்சு முதலியன) எடுத்துச் செல்லுதல் வேண்டும். நீரானது, கோவில் தீர்த்தக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரினை கோவிலில் பாவிக்கிறார்கள். ஆகவே இவ்வித வழிபாடானது உண்மையான, மனத்திருப்தி மிக்க வழிபாடு ஆக அமைகிறது. இவற்றில் ஒன்று குறையினும் அவ்வழிபாடு பூரணம் பெறுவதில்லை.

அப்பரடிகளார் தமது தேவாரத்தில்,

"சலம் பூவொடு தீபம் (தூபம்) மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

எனக் குறிப்பிட்டுள்ளார். இது மிகச் சிறந்த இலகுவான மரபுவழி தவறாத உண்மையான வழிபாடாகும். சுவாமிக்கு அர்ச்சிக்கும் மலர்கள் தூய்மை கருதி நீரினால் சுத்திகரிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒரு பொருளை இறைவனுக்கு நிவேதிக்கும் பொழுது, சுத்தமான ஜலத்தினையும் (நீரினையும்) நிவேதிக்க வேண்டும். இம்முறை சமர்ப்பணம் செய்தலுக்கு ஓர் அடையாளமாகும்.

நாம் செய்த தீவினையை வீழ்த்த நாம் இறைவனை வழிபடுகிறோம். பூவும், நீரும் அர்ச்சித்து தீபமும் ஏற்றினால் தீவினை அகலும். ஞானசம்பந்தப் பெருமான் "பூவொடு நீர் சுமக்கும் அடியவர்களின் துயரைக் களைந்து விடுவாய்" என சிவனை வேண்டுகின்றார்.

"பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர் களைவாய் நெடுங்கள மேயவனே"

"இறைவனை நாவாலும் பூவாலும் வழிபடல் வேண்டும்" என்கிறார் அப்பரடிகள்.

"பூக் கை கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக் கை கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கு இரைதேடி அலமரந்து
காக்கைக்கு இரையாகிக் கழிவரே" என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு.

பூவில்லாது விட்டால் அதற்குப் பதிலாக பசுமை (பச்சைநிறம்) நிறைந்த இலைகளையும் இறைவனுக்கு அர்ச்சிக்கலாம்.

"யாவர்க்குமாம் ஒரு பச்சிலை" என்கிறார் திருமூலர். நாம் எவ்வித வழிபாடுகளை எப்படி எப்படியான முறை தவறாமல் செய்தாலும், அவ்வித வழிபாடுகளால் கிடைக்கும் பலா

*சொல்லினுஞ் செய்கை பயன் தரும்.*

பலன்கள் பூக்கொண்டு வழிபாடு செய்யாதோருக்கு கிடைக்காது என்பது கருத்தாகும். பூவையும் நீரையும் இறைவன் கண்டதும் நாணமடைந்து ஒதுங்கி நிற்பான் என்று அப்பரடிகள் கூறியுள்ளார்.

"பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பவர் அவர் தமை நாணியே"

பூவும் நீரும் இட்டு வழிபடுவதற்கு நமக்கு இம் மனிதப் பிறவி கிடைத்திருப்பதை நாம் தக்கவாறே பயன்படுத்தினால் முத்தியடைய முடியும். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று சம்பந்தப் பெருமான் அருள் வாக்குரைத்தார்.

சிவனது பூஜைக்குரிய மலர்களில் "தாழம்பூ" தவிர்ந்த மலர்களாம் என்பது விதி. எல்லாவித பூக்களும் இறைவனுக்கு சாத்துவதற்கு உகந்தனவல்ல. இவற்றுள் தவிர்க்கப்பட வேண்டிய பூக்கள் பலவாம். இன்றைய உலகில் பலர் இறை வழிபாட்டுக்கு உகந்தது அல்லாத பூக்களையும் கோவிலுக்கு எடுத்துச் செல்ல முற்படுகின்றனர். அத்துடன் இறைவனுக்குச் சூட்டுவதற்கென (அர்ச்சனைக்கு) ஆகாத பூக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் நாள் பறிக்கப்பட்ட மலர்கள் (வாடிய பூக்கள்), பூ மரத்தின் கீழ் விழுந்து கிடந்த பூ, அலர்ந்த பூ, உதிர்ந்த பூ, மொட்டு (அரும்பு), இரவில் பறித்த பூ, புழுக்கடித்த பூ, சிலந்தி வலையுள்ள பூ, மயிர்க்கொட்டிப் புழுவுள்ள பூ, முகர்ந்த பூ, நீராடாதவர் எடுத்த பூ, சிவதீட்சை பெறாதவர் எடுத்த பூ, ஆமணக்கம் இலையில் பொதிந்த பூ முதலானவை இறை அர்ச்சனைக்கு ஆகாவாம். பைரவருக்கு நந்தியாவட்டம் பூ பூசனைக்கு ஆகாது.

ஏனைய பூக்களால் பைரவரை அர்ச்சிக்கலாம். பூமாலை சாத்தி இறைவனை வழிபடுதல் சிறப்புடைய வழிபாடாகும். பூமாலையில் கட்டப்படும் பூக்கள் இறைவனுக்குரிய பூக்களாகவே இருத்தல் வேண்டும். பச்சைநிற இலைகளும் பூமாலையில் சேர்க்க முடியும். ஆனால் கண்ட கண்ட இலைகளைத் தவிர்த்து, சிவனுக்குரிய பூ மரத்தின் இலைகளையே பாவிக்க வேண்டும். நீரானது கோவில் தளங்களையும், கோவில் பாத்திரங்கள் மற்றும் பொருட்களையும் சுத்திகரிப்பதற்கு, உதவும். கோவிலில் வீற்றிருக்கும் திருவுருவங்களை அபிஷேகம் செய்வதற்கு நீர் உதவும். மேலும் தீர்த்தத் திருவிழா கோவில்களில் செய்யப்படும் சிறப்பான திருவிழாவாகும். இங்கு சுவாமி நீரில் இறங்கித் தீர்த்தமாடுதலை இது சிறப்பித்துக் கூறும். சுவாமி தீர்த்தமாடியபின் அந்நீர் "தீர்த்தம்" என்னும் சிறப்புப் பெயர்பெற்று, அடியவர்களால் அமுதாகப் பருகப்படுகின்றது. கோவில் வழிபாட்டுக்காக அங்கு வரும் அடியவர்கள், முதலில் நீரில் நீராடிய பின்பே கோவிலுக்குச் செல்லுதல் மரபு. நீராடாதவர் கோவிலுக்குச் செல்லக்கூடாது. கோவிலில் கால் கழுவிய பின்பே உள்ளே செல்லுதல் வேண்டும். வீடுகளில் வைத்து வழிபட்டு வரும் சுவாமிப் படங்களின் முன்பாக சிறு பாத்திரம் ஒன்றில் தூய நீர் நிரப்பப்பட்டு, அங்கு அப்பாத்திரம் பூசனை புரிவதற்காக வைக்கப்படுதல் சிறப்பு. அங்கு, இறைவனை அபிஷேகம் செய்ய முடியாதவிடத்தும் நீர் வைத்து வழிபடுகின்றோம். அத்துடன் அங்கு பூவும் வைத்து தீபமும் காட்டப்படும். இம்முறை சிறந்த இறை வழிபாட்டு முறையாகும்.

தீபம் ஏற்றுதல் கோவில் வழிபாட்டு முறைகளுள் பிரதானமானது. "அக்கினி வழிபாடு" முன்னைய காலங்களில் பிரசித்தமானது.

இந்து சமயத்தின் சின்னமாக விளங்குவது "தீப ஒளி"யாகும். தீபத்தின் மத்தியில் இந்துக்கள் இறைவனைக் காண்பர். தீப ஒளியில் கருவறையில் வீற்றிருக்கும் இறைவனின் திருவுருவம் நமக்குத் தெரிகின்றது. கற்பூர தீபமேற்றி வழிபடுகின்றோம். பலவகை விளக்குகளை (குத்துவிளக்கு முதலியன) ஏற்றி இறைவனை வழிபடுகின்றோம். "கார்த்திகை தீபம்" சிறப்பானதொரு வழிபாடாக விளங்குகின்றது. சர்வாலய தீபம், குமாராலய தீபம், விஸ்ணுவாலய தீபம் என்பவை கார்த்திகை மாதத்து விசேட தீபாராதனை வழிபாட்டு முறைகளாகும்.

**புத்தாண்டே வருக!**

அன்பு நெறி அறநெறியை மறந்தே இந்த
அகிலத்தில் அமைதியிலா நிலையை உருவாக்கி
வன்முறைகள் பலவிற்கும் வழிகள் கோலி இம்மனித
வாழ்வை இங்கு அழித்தொழிக்கும் வீணர்தம்மால்
துன்ப நிலை தொடர்வதனைத் தடுத்தே நல்ல
தொழில் வளங்கள் பெருக்கி வீண் பகைமை போக்கி
இன்பமுடன் வாழ வழி காட்டவாராய்!
இதயங்கள் ஏத்துகின்ற இனிய ஆண்டே!

இனத்தாலும் மதத்தாலும் மொழியினாலும்
இங்கு தினம் பிரிவினைக்கு தூபமிட்டு
மனங்களிலே வேற்றுமையை வளர்த்துப் பொல்லா
மாக்களிலும் கீழாக நடந்துகொண்டு
சினம் கொண்டு போர் புரிந்து மனித வாழ்வைச்
சீரழிக்கும் தீயவர்கள் திருந்தி வாழ
தினமும் எமை வாட்டும் பசிப் பிணிகள் ஓய
தெய்வீக மணம் கமழ வாராய் ஆண்டே!

மனிதரெலாம் ஒருகுலமே என்ற கூற்றை
மறந்தவராய் மண்ணுலகில் பிறந்து வாழ்ந்த
புனிதர்களாம் இயேசு புத்தன் காந்தி சொன்ன
போதனைகளை சற்றும் புரியாதோராய்
தனி மனித நலத்தினையே கருத்தாய்க் கொண்டு பிறரை
தாழ்த்த நினைப்போர் கொட்டம் அடங்கிப்போக
இனிய புத்தாண்டே நீ வருகை தாராய்! நாங்கள்
ஈடேற வழி வகைகள் காட்டி வாராய்!

-கி. குலசேகரன்-

மனிதனின் ஆசைக்கும் ஆற்றலுக்கும் அளவேயில்லை.

# சந்தம், இராகம், தாளம் அனைத்தும் நிறைந்த இசைக் கருவூலமே அருணகிரிநாதரின் திருப்புகழ்

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

முருகனைத் தமிழ்க் கடவுள் என்ற உரிமையுணர்வோடு தமிழ் மக்கள் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே வழிபட்டு வருகின்ற மரபினையுடையவர்கள் என்பதனைச், "சேயோன் மேய மைவரை உலகமும்" எனப் பாடும் பேரிலக்கண நூலான தொல்காப்பியமும் ஏனைய சங்க நூல்களும் பேசுகின்றன. ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் முருகனை மதுரை நகர் மக்கள் வழிபட்டுப் பேறுபெற்ற வகையினைச் சங்க நூலான பரிபாடல் விபரிக்கும். பத்துப் பாட்டு நூல்களில் முதலாவதாக அமைந்து ஒரு இலக்கிய நூலாகவும் பதினோராந் திருமுறையில் அடக்கப்பட்டு வழிபாட்டிற்குரிய ஒரு தோத்திர நூலாகவும் விளங்கும் திருமுருகாற்றுப்படை அதன் ஆசிரியர் நக்கீரர் போன்றோரும் செந்தமிழ்க் கடவுளாம் கந்தக் கடவுளைத் தம் சொந்தக் கடவுள் என்ற பக்தியுணர்வோடு வழிபட்டுப் பெற்ற பெரும் பேறுகளின் சிறப்பினைக் கூறும். ஆனால் "ஆறுமுகனே ஆதிப்பரம் பொருள் கந்தனே தனிப்பெருங் கடவுள்" என்ற இறை தத்துவ உணர்வுடன் "கௌமார நெறியில் அல்லும் பகலும் அனவரதமும் முருகனை வழிபட்டு அவன் புகழையே பாடும் பணியாகக் கொண்டு கந்தக் கடவுளின் பேரருளுக்காளாகி சகல கலை ஞானமும் அட்டமா சித்திகளும் கைவரப்பெற்ற தவராஜயோகி அருணகிரிநாதரே.

நினைக்க முத்தி தரும் தலமாகிய திருவண்ணாமலையில் கி.பி. 15ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்தவராகக் கொள்ளப்படும் இவர் இளமையிலேயே தமிழ், வடமொழிகளிலுள்ள அருளற நூல்களைத் துறைபோகக் கற்றதுடன் இயல்பாகவே கவிபாடும் புலமையும் கைவரப் பெற்றவர். வாழ்க்கையின் ஆரம்ப காலங்களில்- அவரின் பாடல்களில் வரும் கூற்றுக்களை அகச்சான்றாகக் கொண்டு நோக்கும்போது- இளமையில் உலகியல் வாழ்க்கையில் சிக்கிப் பல்வேறு துன்ப துயரங்களுக்காளாகி வாழ்க்கையில் வெறுப்புற்று விரக்தியின் விளிம்பிற்கே சென்ற நிலையில் முருகனே குருவாகத் தோன்றிச் "சும்மா இரு சொல்லற" எனப் போதித்ததுடன்

"செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே" -திருப்புகழ் 3.

எனத் தன் புகழைப் பாடுமாறு முருகனே தன்னைப் பணித்ததாகவும் நன்றியுணர்வோடு பாடும் அருணகிரிநாதர்,

"அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளும்
அறியென விமைப் பொழுதின் வாழ்வித்த வேதியனும்"
-திருவகுப்பு 12.

*நல்ல நண்பனின் செய்கையில் நம்பிக்கை வேண்டும்.*

என அவ்வாறு முருகன் புகழைப் பாடுவதற்குரிய அறிவு, ஆற்றல்களையும் சகல கலை ஞானங்களையும் தந்து,

"முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண"

-திருப்புகழ் 6.

என அடியெடுத்துக் கொடுத்தும் தன்னை வழிநடாத்தியதாகவும் மிகக் குதூகல உணர்வுடன் முருகனை வாயாரப் புகழ்ந்து பாடுகின்றார்.

இறைவனின் பெரும் புகழைப் பாடுதல் என்ற பொருளில்

"முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்" -சுந்தரர் தேவாரம்.

எனத் திருப்புகழ் என்ற சொல் திருமுல்லைவாயில் திருத்தலப் பதிகத்தில் முதலில் சுந்தரரால் எடுத்தாளப்பட்டுள்ளதாயினும்

"நானுனை நிகர் சந்தத் தமிழ் சொரிந்து
பாடவு மருள் தாராய்"

(திருப்பந்தணை நல்லூர். திருப்புகழ்)

என முருகனையே சந்தத் தமிழால் பாடும் பணியை வரமாகக் கேட்டுப் பெற்றுக்கொண்ட அருணகிரிநாதர் நாவில் சந்தத் தமிழ் வெள்ளம் பெருக்கெடுக்க

"வாக்கிற் கருணகிரி வாதவூரர் கனிவில்
தாக்கிறிரு ஞான சம்பந்தர் - நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்திற்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கு அப்பர்"

எனப் பழம் பாடலொன்று கூறுவதுபோல் வாக்கு வல்லமை கைவரப்பெற்ற அவர் அறுபத்து நான்கு கலைகளில் முதன்மையானதான இசைக்கலை மூலம் கந்தக் கடவுளின் பெரும் புகழைப் பெருங் கருணையைப், பேரருளாற்றல்களைச் சந்த இசை பொங்கிப் பிரவாகிக்கத் "திருப்புகழ்" என்ற இறை புகழ்பாடும் இலக்கிய வடிவத்தினை அதியற்புதமாகக் கையாண்டு பக்திப் பாசுரங்கள் பல நூற்றுக்கணக்கில் பாடித் "தமிழ் பக்தியின் மொழி" என்ற கருத்துக்கு வலுச்சேர்த்த - தமிழ்ப் பக்தி இலக்கியத்திற்கு வளஞ்சேர்த்த பேருளாளர்கள் வரிசையில் சமய குரவர் நால்வருக்குப்பின் தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் பெருங் கவிஞர் அருணகிரிநாதரே.

சிவனுக்குப் பன்னிரு திருமுறைபோல் முருகனுக்கும் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, மயில் விருத்தம், வேல் விருத்தம், சேவல் விருத்தம் எனத் திருமுறைகளுள்ளன என நிறுவுவதற்கு ஆதாரமாக முருகன் புகழ் பாடும் பல ஆக்கங்களைத் தமிழிற்கு அளித்தவர் அருணகிரிநாதர். அவற்றுள் திருப்புகழே பெரியது. அவர் பாடியவை 16000 திருப்புகழ்கள் எனக் கூறப்பட்டாலும் இப்போ கிடைப்பவை 1330 வரையான பாசுரங்களே.

பாரதநாடு முழுவதும் சிறப்பாகத். தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாமுள்ள சிவத் தலங்களுக்குத் தலயாத்திரையாகச் சென்று பண்ணிசைத் தமிழால் சிவன் புகழ் பாடிய சமயகுரவர்போல் அருணகிரிநாதரும் 200 வரையான முருகத்தலங்களுக்குத் தலயாத்திரையாகச்

*தன்னம்பிக்கை இல்லாதவன் நினைப்பதெல்லாம் சாதிக்க முடியாது.*

சென்று சந்தத் தமிழால் முருகன் புகழ் பாடியுள்ளார். இவர் பாடிய தலங்களிற் பல நாயன்மார்களாலும் பாடப்பட்டவை. ஈழத்திலுள்ள கதிர்காமத்திற்குப் 13 பாடல்களும் திருக்கோணமலைக்கு ஒரு பாடலும் பாடியுள்ளதுடன் குறிப்பிட்டு எந்தத் தலம் என்றில்லாது 320 திருப்புகழ்ப் பாசுரங்களையும் பாடியுள்ள அவர் பழனி, சிதம்பரம், திருவண்ணாமலை, திருச்செந்தூர் முதலான ஆறுபடை வீடுகள் ஆகிய தலங்களுக்கு அநேக பாடல்களைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நான்கடி, எட்டடி கொண்ட திருப்புகழ்களைப் பாடிக்குவித்த அருணகிரிநாதர் 48, 72, 96 அடிகளைக் கொண்ட மிக நீண்ட திருப்புகழ்களையும் விராலிமலை, சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய தலங்களுக்குப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. உதாரணத்திற்கு சிதம்பரம் தலத்திற்குப் பாடப்பட்ட "மருவு கடல் முகிலனைய குழல் மதி..." எனத் தொடங்கும் 96 அடிகளைக் கொண்ட மிக நீண்ட திருப்புகழ் அவரின் அசாதாரண கவித்துவ ஆற்றலின் கொடுமுடியாக அமைந்து பாடல்கள் இயற்றுவதில் அவரடைந்த மேதகைமையினைக் காட்டுகின்றது.

பிரம ஞானியான அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாசுரங்கள் மனுக்குலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டுமென்ற பெரு நோக்கில் பாடப்பட்டனவாதலால் உலகுக்கு நல்லனவற்றை உபதேசிக்கும் போக்கு அவற்றில் நிறைவாகக் காணப்படுவதனை அவற்றினை மனம் ஒன்றிக் கற்போர் எளிதில் விளங்கிக் கொள்வர். அனேகமான திருப்புகழ்ப் பாசுரங்களின் முதற் பகுதி பரத்தமை என்ற கூடாவொழுக்கத்தில் சிக்கி அதனால் தீராத நோயாளிகளாகி அடையும் அவலங்களையும் அனுபவிக்கும் துன்ப துயரங்களையும் அவர்களைப் பீடித்து வருத்தும் கொடிய நோய்களையும் அந்நோய்களின் பெயர்களையும்கூட மிக விபரமாகக் கூறி வியப்பளிப்பதுடன் அத்தீய செயல்களுக்கெல்லாம் காரணமானவர்களையும் பலவாறு கண்டித்துத் திட்டித் தீர்க்கின்ற பகுதிகள் பாடல்களில் நிறைவாகவுள்ளன. கால வெள்ளத்தில் அழிந்து போகாது நீடு நின்று நிலைத்து சமூகத்திற்குக் கற்பகதருபோல் பயன்தரும் சாவா இலக்கியங்கள் உயரிய சிந்தனைகளை நிறைவாக உபதேசிப்பவையாகவிருக்க வேண்டும். வையத்தில் வாழ்வாங்கு வாழும் வழிவகைகளை வான்புகழ் வள்ளுவர்போல் நல்லதைச் செய் அல்லாததைச் செய்யாதே என வெளிப்படையாக வெட்டொன்று துண்டு இரண்டென்பது போல் நேரடியாகவும் கூறலாம். ஆயின் இறையருள் பெற்ற அருளாளர்களான நாவுக்கரசர், மணிவாசகர் போன்றோர் பூவுலகில் நிகழும் தவறுகளைத் தாம் செய்தனவாகவே கூறி இறையருளுக்கு மன்றாடுவதனைத் தேவார திருவாசகங்களில் நிறையக் காணலாம். வாழையடி வாழையென அத்தகைய பேரருளாளர்கள் மரபில் வந்த அருணகிரிநாதரும் சமூகம் செய்யும் அத்தனை தவறுகளையும், தன் தலையில் போட்டுத் தானே செய்தவையாகவும்,

"அவகுண விரகனை வேதாள ரூபனை..." எனத் தொடங்கும் சிதம்பரம் திருப்புகழில் தொடர்ந்து "ஆசார ஈனனை, மோடாதி மோடனை, வீணாதி வீணனை, மூதேவி மூடிய கலியனை... அறிவுரை பேணாத மானுடகசனியை மாபாதனாகிய கதியிலிதனை அடிநாயேனை யாளுவ தெந்நாளோ..."

(சிதம்பரம் திருப்புகழ். 638)

எனத் தவறேதுமில்லாத உத்தமரான அருணகிரிநாதர் "மறவேனே, புகல்வாயே, பெறுவேனோ, வரவேணும், தருவாயே, அருள்வாயே, அருள் பகர்வாயே" போன்ற வேண்டுகோள்களைத் திரும்பத் திரும்ப அடிக்கடி

*குற்றத்தை ஒப்புக்கொள்வது நேர்மையின் முதற்படி.*

தன் பாடல்களிற் கையாண்டு முருகனிடம் விண்ணப்பிப்பதனை நோக்கும்போது இவ்வுல கில் பாவங்கள், தீவினைகள் புரிபவர்களுக் கும் இறைவனுக்குமிடையில் ஒரு இணைப் பாளராகவிருந்து உலக மக்களின் உய்விற் காகவே முருகனிடம் இரந்தும் இறைஞ்சியும் உள்ளம் நெகிழ்ந்து வேண்டுகின்றார் என் பதனை விளங்கிக் கொள்ளவேண்டும். அருண கிரிநாதர் தன் பாடல்களில் குறிப்பிடும் எண் ணரிய குற்றங்களை வாழ்நாளில் ஒருவர் செய்திருக்க வாய்ப்பில்லாத அத்தனை குற் றங்களையும் தானே செய்தனவாகத் தன் னையே மிகக் கீழ்த்தரமான சொற்பிரயோகங் களால் குற்றம் கூறியும் அத்தகைய ஈனப் பிறவியான தன்னை ஆண்டருளுமாறு முரு கன் அருள்வேண்டியும் பல திருப்புகழ்களில் இரந்து பாடுவதனை அவதானிக்கும்போது தவறான வழியில் பயணிக்கும் சமூகம் தம் தவறுணர்ந்து ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகவிருக்கும் அத்தீய பழக்கங் களிலிருந்து முற்றுமுழுதாக விடுபட்டுத் திருந் தும் என்ற சமூக சீர்திருத்த நோக்கிலேயே அவை பாடப்பட்டன என்பதனையும் திருப் புகழ் சஞ்சீவிபோல் மனுக்குலத்தைச் சீரமை யான நெறியில் எக்காலமும் வழிநடாத்தும் என்பதனையும் உணரலாம்.

அருணகிரிநாதர் சில திருப்புகழ்களில் உலக நிலையாமையினை மிக அருமையாக விளக்கி முருகனிடத்தில் பற்றுக் கொள்ள ஆற்றுப்படுத்துகின்றார்.

''அறுகு நுனிபனியனைய சிறிய துளி...'' எனத் தொடங்கும் திருவிடை மருதூர்த் திருப்புகழில் மனித வாழ்க்கையின் பிறப்பிலிருந்து இறப்புவரை வாழ்க்கை நிலை யாமையின் அவலங்களை மிக ஆழமாக நயத்துடன் விரிவாகப் பிறந்து கொழுகொழு வென வளர்ந்து செல்வச் செழிப்பில் மிதந்து அதனால் தீயவழியில் சென்று நோய்க் காளாகி உற்றார் உறவினர் வெறுத்தொதுக்க காடு வாவாவென வீடு போபோவென ஆவி போகு நாள் வர எல்லோரும் கதறி அழ இறுதியில் எரிதனில் இடும் வாழ்வே இவ் வாழ்க்கை என விளக்கிப்,

"பாசநாசனே இருவினைமுமலமுமற.... ஏக போகமாய்
நீயும் நானுமாய் இறுகும் வகை பரமசுகமதனையருள்..."

எனத் தீயவழி செல்லாது வாழ்க்கையை நல்வாழ்க்கையாக வாழுமாறு முருகனிடம் ஆற்றுப்படுத்தும் அருணகிரிநாதரின் நல்லுபதேசம் மனிதருக்கு நல்வழி காட்டும் ஔடதமாகும்.

இன்னொரு பாடலில் அளவுக்கதிகமான ஆசைதான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்பதனை "தலைமயிர் நரைக்கிறது பற்கள் ஈடாடுகின்றன; உடம்பு நோய்வாய்ப்பட்டுச் சீரழிகின்றது; பெண்கள் நையாண்டி செய்கிறார்கள்; நினைவு செயலிழக்க, வைத்தியரும் வெறுக்க, இனசனத்தவர் சொத்துக்குச் சச்சரவுப்பட" இவ்வாறு நிலையாமையின் அவலத்தை ஒரு படம் பார்ப்பதுபோல் அழகாகச் சித்தரித்து அவ் அவலங்களிலிருந்து விடுபட ஒரே வழி முருகனின் திருவடிகளில் பூரண சரணாகதி அடைதலே உகந்த வழி என்கிறார்.

இறைவன் பெயரினால் நிகழ்த்தப்படும் ஆடம்பர வழிபாடுகள், உடம்பை வருத்தும் விரதங்கள், மிருக வதைகள், சமயத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் சண்டை சச்சரவுகள் என்பவற்றையெல்லாம் தன் பாடல்களில் கண்டிக்கும் அருணகிரிநாதர் வெளிவேசமற்ற விசு வாசமான பக்தி, தியானம் மூலமே இறையருளுக்கு ஆளாகமுடியும் சுயநலமற்ற தூய்மையான இதயத்தில் இறைவன் குடியமர்வான் என்றுங்கூறி இறைவன் பெயரில் வெளிப்பகட்டுகள் செய்வோரைக்,

*வஞ்சகர்களுடன் சேர்ந்தால் நாம் மடிவது திண்ணம்.*

"காவியுடுத்துந் தாழ்சடைவைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொறுத்துங்
காசினி முற்றுந் திரியாதே"

எனச் சிதம்பரம் திருப்புகழில் நையாண்டி செய்வதுபோல் உண்மையினை உணருமாறு அறிவுறுத்துகின்றார். உண்மையான பக்தன் ஒருமுறை முருகா என்று சொன்னாலே

"ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்காவெனவோத அருள் தாராய்
முருகா வெனவோர் தரமோதடியார்
முடிமேலிணைதாள் அருள்வாயே..."

என்கிறது திருவீழிமிழலை திருப்புகழ்.

முருகன் காட்சி கிடைக்குமென்றும் முருக நாமத்தின் மகிமையினை விளக்கி ஆணவம் நீங்கினாலன்றி வினை தீராதென்றும் வினையே விதியாகும்; விதியைத் தாண்டுவதே கதி; அந்த நற்கதியை எய்தவேண்டுமாயின் முருகனிடம் விசுவாசமான பக்தி செய்தலும் முருக நாம பாராயணமுமே வழி என்கிறார்.

(தொடரும்...

## எது கூட வரும்?

ஒரு பெரிய பணக்காரரிடம் நிறையப் பணம் இருந்தது. பணத்தாலே எதையும் சாதிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார் அவர். அந்த ஊருக்கு மகான் ஒருவர் வந்தார். அவரை விருந்துக்குக் கூப்பிட்டார் பணக்காரர். விருந்து முடிந்ததும், "இந்த ஊரிலேயே பெரிய பணக்காரன் நான்தான். உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? எவ்வளவு செலவானாலும் செய் கிறேன்" என்றார் அந்தச் செல்வந்தர்.

"நீங்கள் கேட்பதனால் சொல்கிறேன்" என்று, அந்தச் செல்வந்தரிடம் ஓர் ஊசியைத் தந்து, "இந்த ஊசியை பத்திரமாக வைத்திருந்து நாம் இறந்த பிறகு இன்னொரு உலகத்தில் சந்திக்கும்போது இதை என்னிடம் கொடுங்கள். அதுதான் நீங்கள் செய்ய வேண்டிய உதவி" என்றார் மகான்.

"அது எப்படி? இறந்த பின்னர் எப்படி இந்த ஊசியை இன்னொரு உலகத்துக்கு எடுத்துவர முடியும்? அது முடியாத செயலாயிற்றே!" என்றார் செல்வந்தர். அதற்கு மகான், "ஒரு சின்னப் பொருளைக்கூட இந்த உலகத்தை விட்டு நாம் போகும்போது எடுத்துக்கொண்டு போக முடியாது எனும்போது உங்கள் செல்வத்தையெல்லாம் எப்படி அங்கே எடுத்துக்கொண்டு வரப் போகிறீர்கள்?" என்றார்.

மகானின் வார்த்தைகளைக் கேட்ட செல்வந்தரின் செல்வச் செருக்கு அடங்கியது.

-பக்தி-

*உண்மை ஒருவனைச் சொர்க்கத்துக்கே அழைத்துச் செல்லும்.*

# சித்திர புத்திரனாரும் சித்திரா பூரணையும்

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

சித்திரை மாதம் சைவத் தமிழ் மக்களின் புத்தாண்டு ஆகும். சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும். அன்று சித்திரகுப்தனின் விரதம் நோற்பார்கள். தமது தாயை இழந்தவர்கள் தமது தாயை நினைவுகூர்ந்து அன்னையின் ஆத்மா சாந்தி அடையப் பிராமணருக்குத் தான தருமஞ் செய்து விரதம் அனுஷ்டிப்பார்கள்.

சித்திரா பூரணை எமது தலைவிதியை நிர்ணயிக்கும் வாழ்நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்மராசனின் கணக்குப்பிள்ளை ஆகிய சித்திரபுத்திரன் திரு அவதாரம் செய்த நன்னாளாகும். அந்த நாளில் ஆலயங்களில் மக்கள் பொங்கலிட்டுத் தெய்வங்களை வழிபட்டு விழாவாற்றி வந்தார்கள். ஏழைகட்கு கஞ்சி காய்ச்சிக் கொடுப்பார்கள். இதற்குச் சித்திரைக் கஞ்சி எனப் பெயர் சூட்டியுள்ளனர். ஆலயங்களில் சித்திரகுப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் அனைவரும் கேட்டு அனுபவிப்பார்கள்.

தோடு என்னும் காதணி அணிந்து உமாதேவியரைத் தம்முடைய இடப்பாகத்தில் கொண்டவரும், ஒப்பற்ற அழகும் தூய்மையும் உடைய, வெண்பிறையைத் தமது சடாமுடியில் அணிந்தவரும் சுடுகாட்டுச் சாம்பலைத் தன் திருமேனியில் பூசியவருமான பரம்பொருளாகிய சிவபெருமான் உலக உயிர்களின் பாவ புண்ணியக் கணக்குகளைப் பதிவதற்கு ஒருவரை நியமிக்க திருவுளம் கொண்டார்.

ஒரு பொற்பலகையில் ஓர் அழகான உருவத்தை வரைந்தார் எம்பெருமான். வரைந்த அந்த அழகான உருவம் உயிர் பெற்று சித்திரத்திலிருந்து வெளியே வந்தது. அதற்குச் சித்திர புத்திரன் எனப் பெயர் உண்டாயிற்று. பரமேஸ்வரன் ஒருநாள் சித்திர புத்திரனை அழைத்து, ''மகனே சித்திர புத்திரா! உன்னை நான் உருவாக்கியது இந்த மூன்று உலகங்களிலும் வாழ்பவர்களுடைய பாவ புண்ணியங்களை எழுதுவதற்காகும். ஆனால் தேவலோக அதிபதியாகிய இந்திரனும் அவர் மனைவியும் என்னை நோக்கி கடும் தவம் புரிகின்றார்கள்.

இந்திரனுடைய மாளிகையில் காமதேனு, காராம்பசு உருவத்தில் வாழ்ந்து வருகின்றது. நீ அதனுடைய வயிற்றில் மூன்றே முக்கால் நாழிகை மட்டும் தங்கியிருந்து குழந்தையாகப் பிறந்து வருவாயாக. நீ பெரியவனாக வளர்ந்து வந்ததும், கயிலாயத்திற்கு வந்து உயிர்களின் பாவபுண்ணியத்தை எழுதி வரவேண்டும் எனப் பணித்தார்.

பரமேஸ்வரன் சொன்னதற்கு அமைய இந்திரன் மாளிகையில் வளர்ந்து வருகின்ற காராம்பசுவின் வயிற்றில் மூன்றேமுக்கால் நாழிகை தங்கிப் பிறந்த சித்திரகுப்தனின் கையில் ஏடும் எழுத்தாணியும் அமைந்திருந்தன. தேவேந்திரனும் மனைவியும் அக மகிழ்ந்து ஆனந்தமடைந்து வளர்த்து வருவராயினர். சித்திரபுத்திரன் பெரியவனாக வளர்ந்ததும் பழைய பிறப்பு ஞாபகத்திற்கு வரவே, தனது படைப்பின் காரணத்தைத் தேவேந்திரனுக்கும், இந்திராணிக்கும் கூறிவிட்டுக் கைலாயம் சென்று பரமேஸ்வரனை வணங்கி நின்றார். சித்திரபுத்திரா! இன்று முதல் நீ உலக உயிர்களின் பாவ புண்ணியங்களின் கணக்கை

*ஒரு நல்ல காரியத்தில் எப்போதும் உற்சாகத்துடன் ஈடுபட்டிருப்பது நல்லது.*

எழுதி வருவாய் என்று பணித்து ஆசீர்வதித்தார் எம்பெருமான். அன்றிலிருந்து சித்திர புத்திரனார் தனது கடமையைச் செய்து வருகின்றார். இவரே இயமனின் கணக்குப் பிள்ளையாவார்.

இப்படியாக ஒரு கதை அவரைப் பற்றி வழங்கி வருகின்றது. வேறு விதமாகவும் இரு கதைகள் உள்ளன. பிரம்மாவின் உடலில் இருந்து தோன்றியதால், உடலுக்கு காயம் என்று பொருள் உண்டு. காயத்தில் இருந்து வந்தபடியால் அவருக்கு காயஸ்தன் என்றும் ஒரு பெயரும் உண்டு. சூரிய பகவானுக்கும் நிலாதேவிக்கும் பிறந்தவர்தான் சித்திரபுத்திரனார் என்று ஆதித்திய புராணக் கதைகளும் உண்டு.

சித்திரா பூரணை அன்று பூசை அறையில் கோலம் இட்டு கும்பம் வைத்து சித்திரபுத்திரனின் விரதம் அனுஷ்டிக்கலாம். சித்திரபுத்திரர் காராம்பசுவின் வயிற்றிலிருந்து பிறந்தபடியால் அன்றைய தினம் பால், தயிர், நெய் என்பனவற்றைப் பயன்படுத்தக் கூடாது என முன்னோர் கூறுவர்.

சித்திரகுப்தருக்கு காஞ்சிபுரத்தில் தனி ஆலயம் உண்டு. திருவண்ணாமலையில் ஒரு சந்நிதியும் உண்டு. வேறு எங்கும் ஆலயங்கள் கிடையாது.

அவருடைய வலது கையில் எழுத்தாணியும் இடது கையில் பனை ஓலை ஏட்டையும் கொண்டு மக்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

இவ்வாலயங்களில் சித்திரைமாத பௌர்ணமியன்று விசேட சிறப்புப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. சித்திரா பௌர்ணமி அன்று ஆலயங்களில் "சித்திரபுத்திரனார்" கதை படிக்கப்படும். இவருடைய விரதம் அனுஷ்டிப்பதால் பாவதோஷம் நிவர்த்தியாகும். மாங்கல்ய பலம் கிடைக்கும். நீண்ட ஆயுள் போன்ற பலன்களும் கிடைக்கும்.

**சந்நிதி வேலன் கோயில்**

**சஞ்சீவி மருந்தே ஆகும்**

சந்நிதி வேலன் கோயில்
சஞ்சீவி மருந்தே ஆகும்
வந்திடும் வினைகள் தீர்க்கும்
வைத்தியன் வேலன் தானே
மந்திரம் ஏதும் இல்லை
மாயமோ தானும் இல்லை
சிந்தையில் வேலன் தன்னை
தினம்தினம் நினைத்தால் போதும்.

*-வ. யோகானந்தசிவம்-*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்
## அருளிய
# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## ஐந்தாம் அதிகாரம்
## அருளுரு நிலை

**கட்டு:**

நாம் உடம்போடு கூடிப் பிறப்பெடுத்து வாழ்கிறோம்; “உடம்பிற்கு வேறு நான்” என்பதை அறியாமல் “உடம்பே நான்” என்று கருதி வருகிறோம்; இவ்வுடம்பிற் கட்டுண்டு நிற்கிறோம்; ‘கட்டுண்டிருக்கின்றேன்’ என்பதையும் அறியாமல் இருக்கிறோம்.

உடம்பில் உள்ள ஐம்பொறிகள் நம்மை வசப்படுத்தியுள்ளன. இயல்பிலே நமக்கு விரிந்த அறிவுண்டு. நமது விரிந்த அறிவை இவ்வைம் பொறிகள் கட்டுப்படுத்தி நிற்கின்றன. வலிய வேடர்கள் வழிச் செல்வோரை மறித்து அவர்களிடமுள்ள செல்வத்தைக் கவர்ந்து சிறுமைப்படுத்தியுள்ளன. இப்படிப்பட்ட ஐம்பொறிகளோடு கூடி “அவையே நாம்” என்று இருக்கிறோம். அவற்றினிடத்தில் கட்டுண்டிருக்கிறோம். அவ்வாறு கட்டுண்டிருக்கிற நமது நிலையையும் அறியாமல் இருக்கிறோம்.

இவ்வாறே மண், பொன் முதலிய உலகப் பொருள்களும் நம் அறிவைத் தம் வசப்படுத்தியுள்ளன. அந்தப் பொருள்களின் கவர்ச்சியில் மயங்கி அவற்றையே விடாமல் பற்றி நிற்கிறோம்.

சுருங்கக் கூறினால், உடம்பும் உடம்பிலுள்ள கருவிகளும், உலகமாகிய இடமும், அங்குள்ள நுகர்ச்சிப் பொருள்களும் ஆகிய யாவும் நம் அறிவை மீளவிடாமல் பிணித்துள்ளன எனலாம். அதுபற்றியே இவை கட்டுக்கள் எனப்படுகின்றன.

கட்டு என்பது துன்பத்தைத் தருவது. ஒருவனது கையிலும், காலிலும் விலங்கு இட்டுத் தளைப்படுத்தினால் அக்கட்டு அவனுக்குத் துன்பத்தைத் தரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அவ்வாறே நாம் உடம்போடும் உலகத்தோடும் தொடர்புபட்டு துன்பப்படுகிறோம்.

**கட்டிற்குக் காரணம்:**

இக்கட்டு நிலையும், துன்பமும் ஆகியன அறியாமையால் ஏற்படுவன. நாமல்லாத உடம்பை நாம் என்று கருதுவது அறியாமைதானே. எல்லாப் பொருள்களும் இறைவனது உடைமையாய் இருக்க, அவற்றை “எனது எனது” என்று கருதுவது அறியாமைதானே. எல்லாச் செயல்களும் இறைவன் செயலாய் இருக்க, “என் செயல் என் செயல்” என்று

நன்றாக நடத்தினாலும்கூட தீயவர்கள் தீயதையே செய்வர்.

கூறுவது அறியாமைதானே. உயிர்க்குயிராய் உள்நின்று இயக்குபவன் அவனாய் இருக்க, "நானே எல்லாம்" என்று எண்ணுவது அறியாமைதானே.

அறியாமை என்பது இவ்விடத்தில் தவறான அறிவை- மயக்க அறிவைக் குறிக்கும். இதனை "விபரீத ஞானம் என்பர்". இதுவே கட்டு நிலைக்கும் துன்பத்திற்கும் காரணம்.

**ஞானம் ஒன்றே வழி:**

கட்டு நிலையிலிருந்து நீங்க வேண்டுமானால் அதற்குக் காரணமாகிய அஞ்ஞானம் நீங்க வேண்டும். அஞ்ஞானம் என்பது தவறான அறிவு எனப் பார்த்தோம். தவறான அறிவு எப்பொழுது நீங்கும்? உண்மையறிவாகிய ஞானம் வரும்போது தவறான அறிவு நீங்கி விடும்.

அஞ்ஞானம் இருள் போன்றது. ஞானம் ஒளி போன்றது. ஒளி வந்தாலன்றி இருள் விலகாது. அதைப்போல ஞானம் தோன்றினாலன்றி அஞ்ஞானம் நீங்காது. கட்டு நிலையும் போகாது. எனவே கட்டிலிருந்து விடுபடுவதற்கு ஞானம் ஒன்றே வழி என்பது இதனால் விளங்கும்.

ஞானமாவது மெய்யறிவு. அஃதாவது பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணர்தல். பொருள்களாவன கடவுள், உயிர், உலகு என்பன. இம்மூன்றின் இயல்பையும் நாம் உள்ளவாறு உணர்தல் வேண்டும்.

"நான் அறிவுப் பொருள். ஆயினும் அறிவற்ற உலகத்தோடு கூடி வாழ்கிறேன். இவ்வுலகச் சார்பு எனக்கு இயற்கையன்று. இஃது இடையில் வந்தது; இடையில் நீங்கக் கூடியது. எனக்குரிய உண்மையான சார்பு- என்றைக்கும் உள்ள நிலையான சார்பு- இறைவனாகிய சார்பேயாகும். அவனே எனக்கு வாழ்முதல். அவனே எனக்குப் புகல். அவனை அணைந்து இன்புறுதலே பிறவியெடுத்ததன் பயன்".

இவ்வாறு உலக நிலையையும், நமது இயல்பையும், தலைவனாகிய இறைவனது இயல்பையும் உள்ளவாறு உணர்தலே ஞானமாகும்.

**ஞானத்தைத் தரும் ஆசிரியர்:**

எந்த ஓர் அறிவையும் அதனை உடையவர்பால் பெறுவதே உயிரின் இயல்பாக இருக்கிறது. அம்முறையில், ஞானமாகிய மெய்யறிவை யாரிடம் பெறுவது? என்ற வினா எழுகிறது.

அறிவைத் தரும் ஆசிரியர்மார் பலதிறத்தினர். எழுத்து சொல் ஆகியவற்றை வடிவு அளவில் கற்பிப்பவர் கணக்காயர் எனப்படுவர். செய்யுட்களையும் நூல்களையும் பொருள் உணர்வு தோன்றக் கற்பிப்பவர் "வித்தியாகுரு" எனப்படுவர்.

சமயம், விசேடம் ஆகிய தீக்கைகளைச் செய்வித்து சிவ வழிபாட்டினைப் பிறருக்கு அளிப்பவர் "கிரியாகுரு" எனப்படுவர்.

சிவ வழிபாட்டினை எவ்விதப் பயனும் கருதாது உண்மையான அன்போடு செய்துவரின் உலகியலில் உவர்ப்புத் தோன்றும். சிவனையே பற்றாக உணரும் நிலை உண்டாகும். அப்படிப்பட்ட பக்குவம் வந்த மாணாக்கர்க்கு உயிர்ச்சார்பும் பொருட்சார்பும் ஆகிய தளைகளின் இயல்பைத் தெளிவித்துப் பாசத்தை அறுத்துச் சிவனது திருவடி ஞானத்தை உணர்த்துவோர் "ஞானகுரு" என்றும், "ஞானாசிரியர்" என்றும் சொல்லப்படுவர். இவரே ஏனை ஆசிரியர் யாவரினும் மேலானவர்.

*நல்லொழுக்கம் இல்லாதவனை வேதங்கள் புனிதமாக்கிவிடாது.*

**ஞானாசிரியர் சிவமே:**

ஞானாசிரியராய் வருபவர் சிவமே என்று சித்தாந்தம் கூறும். நாட்டவருள் உள்ள ஒருவர் போலத் தோன்றுகிற ஞானாசிரியர் உண்மையில் சிவமே என்பது எவ்வாறு பொருந்தும் என்ற ஐயம் எழுவது இயல்பு. இதனைத் தெளிய விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஆணவமலம் உயிரை வன்மையாய் பிணித்துள்ள வரையில், அந்த உயிர் உலக வாழ்வையே பெரிதாகக் கருதும்; உலகப் பொருள்களின் பின்னேயே ஓடி ஓடித் திரியும். திருவருள் நாட்டம் சிறிதும் வராது. இப்படிப்பட்ட உயிருக்கு ஞானத்தைப் பெற வேண்டும் என்ற வேட்கை தோன்றாது என்பது வெளிப்படை.

இறையருளால், உயிரைப் பற்றியுள்ள ஆணவ மலத்தின் சக்தி தேயும் காலம் வரும்பொழுது அந்த உயிருக்கு இது வரையில் இனியனவாய்த் தோன்றிய உலகப் பொருள்களின் மீது வெறுப்புத் தோன்றும். ஒப்பற்ற கடவுட் பொருளை உணரவேண்டும் என்ற விருப்பம் உண்டாகும். அவ்வாறு ஆணவ மலம் தன் வலி குன்றி நீங்கும் நிலையை எய்துதலே மலபரிபாகம் எனப்படும். மலபரிபாகம் சிறிது சிறிதாக வரவர, அதற்கேற்ப அந்த உயிர் உலகத்தை விடுத்து இறைவனது திருவருளை நோக்கத் தலைப்படும். திருவருளை நோக்கும் நிலையே சத்திநிபாதம் எனப்படும்.

மலபரிபாகமும், சத்திநிபாதமும் நிகழ்ந்த இந்த நிலைதான் உயிரின் பக்குவநிலை என்று சொல்லப்படுகிறது; ஞானத்தைப் பெறுதற்கு ஏற்றநிலை என்று கொள்ளப்படுகிறது.

இந்தப் பக்குவநிலை ஒருவர்க்கு வந்துற்றது என்பதை எப்படி அறிய முடியும்? "பக்குவம் என்பது உயிரில் நிகழ்வது; அது வெளியே புலனாவதன்று. சில பொய்ம்மையாளர்கள் பக்குவம் உடையவர்போல நடிப்பார்கள்; மெய் எல்லாம் நீறுபூசித் திகழ்வார்கள். ஆனால், செய்வதெல்லாம் ஊரை ஏமாற்றுகிற செயலாக இருக்கும். அவர்களது வெளித்தோற்றத்தைப் பார்த்து, "என்ன பக்தி! என்ன பணிவு!" என்று உலகோர் வியப்பார்கள். ஆனால் அவர்களது அகம் எவ்வளவு இரக்கமற்றது என்பதை அறியமாட்டார்கள்.

இதனால், வெளித் தோற்றத்தைக் கொண்டு ஒருவரது பக்குவத்தை அறிய முடியாது என்பது விளங்கும். உள்ளே நிகழ்வதாகிய பக்குவத்தை அறியும் தகுதி உலகத்தவர்க்கு இல்லை என்றே சொல்லி விடலாம். அப்படியானால் வேறு யார் தாம் அறியவல்லார்? உயிர்க்கு உயிராக இமைப்பொழுதும் நீங்காமல் இருக்கின்ற இறைவன் ஒருவனே அவ்வுயிரின் பக்குவத்தை அறியவல்லான். இது பற்றியே, ஆணவ மலம் தேய்ந்த நிலையையும், ஞானத்தில் வேட்கை ஏற்பட்ட நிலையையும் பார்த்தருளி இறைவனே குருவாக வந்து ஞானத்தை உணர்த்துவான் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது:

**குரு வடிவம்:**

இறைவன் குருவாகி வருவான் என்றால், நமக்கு உள்ளது போன்ற மாயா காரியமாகிய மானுட உடம்பை எடுத்து வருவானா? என்று கேட்கலாம். அவ்வாறு அவன் மானுட உடம்பை எடுப்பான் எனில் உயிர் இனத்தவன் ஆகி விடுவான். இறைவன் ஆகான். ஆகவே அவன் மானுட உடம்பெடுத்து வருவான் என்றால் பொருந்தாது.

இனி இறைவன் எவ்வாறு குருவடிவம் கொள்கிறான் என்பதை நோக்குவோம். மலமாகிய மாசு தீர்ந்து வாழும் தூய அறிவினராகிய ஆன்மாவைச் "சுத்தான்மா" என்பர். அவர்

*செல்வம் வளரும் அளவு அதன்மீது பற்றும் வளரும்.*

தற்போதம் இழந்து நிற்பவர்; அ..தாவது, நான் என்ற உணர்வு சிறிதும் இல்லாதவர். அவரிடத்தில் இறைவன் தயிரில் நெய்போல இனிது விளங்கி நிற்பான். (நம்மிடத்தில் பாலில் நெய்போல மறைந்து நிற்பான்) அவ்வாறு விளங்கி, அவரது இயல்புகளைக் கீழ்ப்படுத்தித் தன்னியல்பு மேம்பட நிற்பான். ஓர் எடுத்துக் காட்டுக் கூறினால் இது விளங்கும். பேயால் பிடிக்கப்பட்டவரிடத்தில் அவரது இயல்புகள் கீழ்ப்பட்டு நிற்பதையும் பேயின் இயல்புகளே நிகழ்வதையும் காணலாம். அதுபோல இறைவன் சுத்தான்மாவிடத்தில் அவரது இயல்பைக் கீழ்ப்படுத்தித் தன்னியல்பு மேம்பட்டுத் தோன்ற நிற்பான். இவ்வாறு நிற்பது "ஆவேசித்து நிற்றல்" எனப்படும். பேய் ஆவேசிக்கப்பட்டாரது செயல்களெல்லாம் அவர் செயல் ஆகாது பேயின் செயலே ஆவதுபோல, சுத்தான்மாவின் செயல்கள் யாவும் சிவனாகிய இறைவன் செயலேயாம்.

சுத்தான்மாவாகிய அவரே ஞானகுரு ஆவார். சிவன் அவரை ஆவேசித்து நின்று பக்குவமுடைய மாணவர்க்கு ஞானத்தை உணர்த்துவான். இதனால் ஞானகுரு நம்மவருள் ஒருவரல்லர் என்பதும். அவர் சிவனே யாவர் என்பதும் விளங்கும்.

**அதிகார வைப்பு முறை:**

ஞானாசிரியர் நிலை பற்றிக் கூறுவதாகிய இந்த அதிகாரத்தை அருளது நிலைக்கு அடுத்தபடியாக வைத்த பொருத்தம் நோக்குதற்குரியது.

முன்னை அதிகாரத்தில் அருளினது இயல்பும் உயிர்கள் அதனை உணரவேண்டியதன் இன்றியமையாமையும் கூறி முடித்தார் ஆசிரியர். அந்த அருளை எவ்வாறு பெறுவது? உயிர் தனது முயற்சியினால் அருளைப் பெறுதல் என்பது இயலாது. ஞானாசிரியர் வழியாகவே அதனை உணர்ந்து பற்ற முடியும். ஆதலால் அருளது நிலையை முன்னே கூறி, அருளை உணர்தற்கு வாயிலாகிய ஞானாசிரியர் பற்றிக் கூறுவதாகிய இந்த அதிகாரத்தை அடுத்து வைத்தார் என்பது அறிதற்குரியது.

**கூறப்பட்டுள்ள கருத்துக்கள்:**

இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பின்வருமாறு மூன்றாய் வகுத்துக் காட்டலாம்.

1. ஞானகுருவாலேயே ஞானத்தை அடைய முடியும்.
2. ஞானகுரு சிவமேயாவர்.
3. ஞானகுருவை உலகம் உணர மாட்டாது.

**தொகுத்துக் காணுதல்:**

உயிர் அறியாதவாறு உள் நின்று உணர்த்தி வந்த முதல்வனே அவ்வுயிரின் பக்குவ நிலையைப் பார்த்தருளிக் கண்ணாற் காணும் குரு வடிவம் தாங்கி வந்து ஞானத்தை உணர்த்துவான். ஆதலால் ஞானத்தைத் தரும் ஆசிரியரை இறைவன் என்றே தெளிந்து வழிபடுதல் வேண்டும்.

ஒரு வீட்டில் ஒருவர் உற்ற நோயை அவ்வீட்டில் அவருடன் வாழ்வோரே அறிந்து தீர்க்க முடியும். அதுபோல உயிருக்கு உற்ற ஆணவ மல நோயை உயிரோடு உடனிருக்கும்

இறைவனே அறிந்து தீர்க்க முடியும். அவனே குருவாக வெளிவந்து தனது அருள் மொழியாலும், செய்கையாலும் அம் மல நோயை நீக்குவான்.

மானைக் காட்டி மானைப் பிடித்தல் என்பார்கள். இறைவனும் அச்செயலையே செய்கிறான். பக்குவ ஆன்மாவாகிய மாணவரை ஆட்கொள்ளுதற்கு அவரைப் போன்ற மக்கள் வடிவில்- குரு வடிவில் வருகிறார். மானிட வடிவில் தன்னைக் காட்டி மாணவரை வசப்படுத்துகிறார்.

எந்த ஒரு கலையையும் ஒருவர் தாமாகப் பயிலுதல் இயலாது. எக் கலையை அறிய விரும்பினாலும் அக்கலையில் வல்ல ஆசிரியரை நாடியே அதனை அறிந்து கொள்ள முடியும். ஞானத்திற்கும் இது பொருந்தும். ஆன்மா தனது உண்மை இயல்பை உணர்வது ஞானம். இறைவனை உள்ளவாறு உணர்வது ஞானம். இந்த ஞானத்தை ஒருவர் தாமே முயன்று பெற முடியாது. ஞானாசிரியரை நண்ணியே அதனைப் பெற முடியும். அஃதாவது, ஞானாசிரியர் உணர்த்தவே ஆன்மாவினது உண்மையியல்பும், தலைவனாகிய இறைவனது இயல்பும் உள்ளவாறு விளங்கும்.

இந்த ஞானத்தை இறைவன் உயிர்க்குயிராய் உள்ளிருந்தே உணர்த்தினால் என்ன? குருவாக வெளிவந்துதான் உணர்த்த வேண்டுமா? என்று கேட்கலாம். உயிரினது அறிவு படிமுறையில் விளங்கும் அறிவாகும். ஒருமுறை உணர்த்தினால் போதாது. பலகாலும் உடனிருந்து உணர்த்துதல் வேண்டும். அவ்வப்போது எழுகின்ற ஐயங்களை உடனிருந்து களைதல் வேண்டும். திருநோக்கம், பரிசம் முதலிய செய்கைகளால் பாசப் பற்றை அறுத்தல் வேண்டும். ஞானப் பொருளைக் கேட்பித்தும், சிந்திப்பித்தும், தெளிவித்தும் மாணவரை நெறிப்படுத்தல் வேண்டும். இவற்றின் பொருட்டே இறைவன் குருவடிவம் கொள்கிறான். இங்ஙனம் தோன்றி வந்து உடனிருந்து உணர்த்தித் தெளிவித்தாலன்றி உயிர் திருவருளைத் தெளியமாட்டாது.

ஒருவரைப் பாம்பு கடித்து விட்டது. நஞ்சை எப்படி இறக்குவது? பாம்புக்குப் பகையாகிய கீரியை அழைத்து வந்து அவன்மேல் விழுந்து புரளும்படி செய்தாலும் நஞ்சு இறங்காது. ஆனால், கீரிக்கு உரிய மந்திர பாவனையுடையோன் வந்து நோக்கிய மாத்திரத்தில் நஞ்சு இறங்கிவிடும். அதுபோல இறைவன் உயிர்க்குயிராய் உடனிருந்தாலும் உயிரிலுள்ள ஆணவ மலமாகிய விடம் நீங்குவதில்லை. அவன் ஞானாசிரியராக வந்து தனது அருள் நோக்கால் மாணவனைப் பார்த்த அளவில் அவனிடமுள்ள மலமாகிய விடம் நீங்கிவிடும்.

இவ்வாறு இறைவன் குருவாய் வரவில்லையென்றால், ஞானத்தை யார் உணரவல்லார்? சூரியனது முன்னிலையில் சூரிய காந்தக் கல்லிடத்தே நெருப்புத் தோன்றும். அதுபோல ஆசான் மூர்த்தியின் முன்னிலையில் மாணவனது அகத்தே ஞானம் தோன்றும்.

இத்தகைய ஞானகுருவினது பெருமையை உலகத்தார் சிறிதும் உணரமாட்டார். அவர்களது அறிவுதான் ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டுள்ளதே. அவர்களுக்கு உண்மை எங்கே தெரியப்போகிறது! பக்குவம் இல்லாத அவர்கள் திருவருளாகிய ஞானத்தையும் அறிய மாட்டார்; அந்த ஞானமேயான குரு வடிவையும் அறிய மாட்டார். இவ்வாறு இவ்வதிகாரக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறலாம்.

(தொடரும்...

*தைரியமே உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது.*

# புகழ்பூத்த புவனேஸ்வரி அம்மன் புகழ் போற்றுவோம்

- திரு பு. கதிரித்தம்பி அவர்கள் -

ஈழத்திருநாட்டின் தலைபோல் விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாண்த்தின் வட எல்லையில் பாக்குத் தொடுவாய் அண்மையில் அமைந்த இரு புகழ் பூத்த தலங்களாக விளங்குவன (1) தொண்டைமானாறு செல்வச் சந்நிதி (2) இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் ஆலயம். செல்வச்சந்நிதி ஆலயத்தின் தென் மேல் திசையில் முக்கால் கிலோமீற்றர் கண் பார்வையில் அமைந்த தலம்தான் புவனேஸ்வரி அம்மன் ஆலயம். இத்தலத்தில் புவனேஸ்வரி அம்மாள் கிழவி வடிவில் வந்து காட்சி கொடுத்து விரும்பி உறைந்தாள் என்பது தல வரலாற்று உண்மையாகும்.

யாழ் குடாநாட்டில் புகழ்பூத்த பல அம்மன் ஆலயங்கள் உள. அவற்றுள் நயினை நாகபூஷணி அம்மாள் ஆலயம், தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், புகழ் பூத்த தலங்களோடு இன்னும் பல அம்மன் ஆலயங்கள் விளங்குவதைக் காணலாம். அந்த வகையில் இடைக்காடு புவனேஸ்வரி அம்மனும் புகழ் பூத்த தலமாக விளங்குவதைக் காணலாம். இத்தலம் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டதென்பதை வரலாற்றுச் சான்று பகருகின்றது. ஒரு மாலை வேளையில் சூரியன் மறையும் நேரத்தில் ஒரு வயோதிப மாது, ஆடு மேய்க்கும் வாலிபன் முன்தோன்றி "தம்பி எனக்கு நன்றாகப் பசிக்கின்றது உணவு கொடுக்க முடியுமா?" என்று கேட்டாள். "அம்மா கொஞ்சம் பொறுங்கள் அந்த ஊர்மனையில் சென்று உணவு வாங்கி வருகிறேன்" என்று சொல்லி விரைவாக நடந்தான் அந்த வாலிபன். உணவை வாங்கிக் கொண்டு விரைவாக வந்தான். கிழமாதைக் காணவில்லை. அங்கும் இங்கும் ஓடோடிப் பார்த்தான். எங்குமே காணாது திகைத்து நின்று இது என்ன அதிசயம் என்று பலவாறு சிந்தித்து ஆடுகளை நல்லிகப்பன் வயலில் அடைத்து விட்டு வீடு நோக்கிச் சென்றான். மனைவிக்கு நடந்த விடயத்தைக் கூறினான். இரவு உணவை உண்டுவிட்டு ஆடு அடைத்த நல்லிகப்பன் வயலுக்குச் சென்று, உறங்கும் தொட்டில் ஏற்படுத்தினான். யாரோ கதைப்பதுபோல் குரல் கேட்டது. படுக்கையில் இருந்தபடி குரலை உற்றுக் கேட்டான். "தம்பி நீ கொண்டு வந்த உணவை நன்கு சுவைத்து உண்டு விட்டேன்; நீ என்னை ஆதரி; நான் வேண்டிய எல்லாம் தருகிறேன்" என்ற அசரீரி வார்த்தை கேட்டது. திடீரென எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தான். யாருமே அவன் கண்ணில் தென்படவில்லை. திரும்பவும் தொட்டிலில் ஏறிப் படுத்தான். அதே வார்த்தை திரும்பவும் ஒலிக்கின்றது. அவனுக்குப் பயம் ஏற்பட தனது வீட்டை நோக்கிப் புறப்பட்டான். நடந்ததை மனைவிக்குக் கூறினான். மணிக்கூடு இல்லாக் காலம் நட்சத்திரங்களைக் கொண்டு நடுச் சாமம் எனக் கணக்கிட்டான். அன்று இரவு

போரின் லட்சியம் அமைதி, வியாபாரத்தின் லட்சியம் ஓய்வு.

முழுவதும் அவனும் மனைவியும் தூங்காதிருந்து காலையில் அயலவர்களுக்குக் கூறினான். அயலவர்கள் "நீ கூறுவதைப் பார்த்தால் அது ஒரு தெய்வமாக இருக்க வேண்டும் என்று கூறி, நல்லிகப்பன் வயலில் ஒரு சிறு குடிசை அமைத்து ஒரு கல் வைத்து வழிபடத் தொடங்கினான். மக்களும் வழிபடத் தொடங்கினர். அவ்வூரில் தோட்டங்களில் பயிர்கள் செழித்து வளர்ந்து பெரு விளைச்சலைக் கொடுத்து, மக்களும் நோய் இல்லாது சந்தோஷமாக வாழ்ந்தனர். இதனால் ஊர் மக்கள் ஓர் கோயிலை குடிசையின் வடக்குப் பக்க வயலில் கட்டினர். குடிசையின் மேற்குப் பக்கத்தில் ஒரு வேம்பும் ஒரு அரசும் ஒன்றோடு ஒன்று பிணைந்து வளர்ந்து பெரு விருட்சமாக இன்று காட்சியளிப்பதை நாம் காண்கின்றோம். சக்தியும் சிவனும் ஒன்றென உணர்த்தி மக்களுக்கு வரங்களையும் அளிக்கத் தொடங்கினாள்.

எமது ஊரிலுள்ள படித்த கணவனும் மனைவியும் (பொறியியலாளர் - வைத்தியர்) வெளிநாட்டில் வசித்து வந்தனர். பிள்ளையின்மையினால் மிகவும் வருந்தி, விடுமுறையில் ஊருக்கு (இடைக்காடு) வந்தவிடத்து, அம்மன் ஆலயம் வந்து வழிபட்டு, வேம்பு அரசு இரண்டையும் மூன்றுமுறை வலம் வந்து நேர்த்தியும் வைத்தனர். என்ன அதிசயம் ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தனர். அதற்குக் கைம்மாறாக தமது தோட்டக் காணியை அம்மன் கோவிலுக்கு கையளித்ததை எமது ஊரவர் நன்கு அறிவர். இன்னுமொரு அன்பர் அம்பாளை வழிபட்டு இடமாற்றம் கிடைத்தது மாத்திரமன்றி பெற முடியாதிருந்த சம்பள நிலுவையும் பெற்றுக் கொண்டதை அவர்கள் வாயிலாக அறிகின்றோம். இன்னும், அயல்கிராமம் கதிரிப்பாயில் ஒருவருக்குப் பிள்ளைப்பேறு கொடுத்ததையும், நேர்த்திக்கடன் செய்ததையும் பரிபாலன சபைத்தலைவர் மூலம் அறிகின்றோம். செல்வச்சந்நிதிக்கு வரும் அடியவர்கள் இங்கு வந்து வழிபட்டுச் செல்வதையும், வேம்பு அரசு விருச்ச நாகதம்பிரானை வழிபட்டு அருள் பெற்றதாகவும் அறிகின்றோம்.

இவ்வாலயம் சித்திரை மாதப் பூரணையில் தீர்த்தம் காண்கின்றது. பத்து நாட்கள் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி விழா நிறைவில் அன்னதானம் வழங்குவது நெடுங்கால மரபாகும். பதினொராம் நாள் பூங்காவனமும், அடுத்தநாள் வைரவர் சாந்தியும் நடைபெற்று இனிது முடிவுறுவது வழக்கம். மாதந்தோறும் பூரத்திருவிழாவும், அபிராமிப்பட்டர் பெருவிழாவும் நடைபெற்று வருவதுடன் நவராத்திரி, திருவெம்பாவை, தை வருடப்பிறப்பு விழாக்களும் நடைபெற்று வருகின்றன. இன்னும் செல்வச்சந்நிதியான் விழாக் காலத்தில், அம்மன் கோவில் முகப்பிலுள்ள வீதியில் அரசமரத்தடியில், ஆலமிலையில் பிரசாதம் வழங்குவது பெருந்தொண்டென பரிபாலன சபையினர் நினைக்கின்றனர்.

இக்கோவிலின் நித்திய பூசை காலையும், மாலையும் நடைபெறுகின்றது. விசேட அபிசேகங்களும், நேர்த்திக்கடன் தீர்த்தலும் மாதந்தோறும் தவறாது நடைபெற்று வருகின்றன. அடியார் வருகை கருதி கோயிலுக்கு செல்வதற்கு ஒரு சிறந்த பாதை எடுப்பதற்கு பெரு முயற்சி நடைபெற்று வருகின்றது. சுற்றுப் பரிவாரங்களுடன் அமைந்த இவ்வாலயத்தில் நவக்கிரக பூசையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பெரிய தேர்முட்டி கட்டப்பெற்று, தேர்த்திருவிழாவும் பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. வெளிநாட்டு மக்களின் உதவியினால் கோவில் புனரமைப்புச்

*இரப்பவன் தன்னைத்தானே விலைப்படுத்திக் கொள்கிறான்.*

செய்வதுடன், ஒழுங்காக பூசை நடைபெறுவதற்கும் மின்சாரத் தேவைக்கென ஒரு இயந்திரமும் பெறப்பட்டுள்ளது. அம்மன் தீர்த்தத் திருவிழாவுக்கு, மக்கள் கட்டிக்கொடுத்த அலங்காரக் குளம் பாவிக்கப்படுகின்றது. நாள், கிழமை, மாதம் அர்ச்சனை பதியப்பட்டு பற்றுச்சீட்டுமூலம் அர்ச்சனை நடைபெறுகின்றது. எந்நேரமும் கோவிலைச் சென்று வழிபட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வாகனங்கள் தங்கிச் செல்ல வசதிகள் உள்ளன. பிரதான வீதியில் அமைந்துள்ள இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் புகழ் எங்கும் வீசி, இன்பம் சூழ, எல்லோரும் வாழ்க என வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

## மலையக மண்சரிவின்போது மரணித்த ஆத்மாக்களின் ஆசீர்வாதம் வேண்டி

ஜென்மம் நிறைந்து சென்றவர் வாழ்க!
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க!
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையுமில்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை.

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துளாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்ற சாம்பலும் எங்கே?

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர
எலும்பு சதை கொண்ட உடம்புகள் சேர
எச்சங்களால் அந்த இந்நுயிர் வாழ்க.

பிறப்பு இல்லாத நாள் ஒன்றும் இல்லை
இறப்பு இல்லாத நாள் ஒன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை!

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரகை அழுவதுமில்லை
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க.

-திருமதி த. வசந்தகுமாரி-

*தற்பெருமை இன்றித் தமது பலத்தை நம்ப வேண்டும்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 03

## உண்மையின் துறவு மனப்பாண்மை

### 5. கீதாசாரியன் ஒரு மிகப்பெரிய உளவியலாளன்.

ஆன்மிகம் என்ற வார்த்தையின் உண்மையான கருத்தில் பகவத்கீதை பிரதானமாக ஓர் ஆன்மிகச் செய்தியையே தருகின்றது. ஆன்மிகம், சமயம் என்ற வார்த்தைகளுக்குப் பொதுவாகக் கொள்ளப்படும் கருத்துக்களில் இருந்து நாம் எமது மனத்தைத் திருத்தித் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். பகவத்கீதை போன்ற யோகப் பாடநூல்களை நாம் எடுத்துக்கொள்ளும்போது முதலில் எமது மனங்களை மாற்றி அமைத்துக் கொண்டு, போதிப்பவனது சொந்த நோக்கம் எவையும் அதில் இல்லாத போதனை ஒன்றை ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு நாம் எம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் எமக்கென்று சொந்த நோக்கம் உள்ளவர்களாக இருக்கின்றோம். ஆனால் பகவத்கீதை தனக்கென ஒரு நோக்கம் அற்றது. பகவத்கீதையை நடைமுறை வாழ்வில் பயன்படுத்தும்போது பல்வேறு கட்டங்களிலும் அதன் போதனை வெளிப்படும். இறுதியாக அது முற்றும் தனிப்பட்ட ஆளுமையற்ற, யாரையும் சாராத போதனையாக ஆகிவிடுகின்றது.

முன் எப்போதும் அவ்வாறான ஆளுமைகள் இருக்காததுபோல, யாரையும் சாராத போதனையைப்போல அது ஆகிவிடுகின்றது. ஆனால் நாங்கள் முற்றும் தனிப்பட்டவர்களாக இருக்கிறோம். எமது ஆளுமை எமக்கு உண்மையானதாகத் தோன்றுகிறது. எனவே எமது இந்தத் தனிப்பட்ட நிலையை இறுகப் பிடித்துக்கொண்டு பகவத்கீதையின் போதனைக்குப் பின்னாலுள்ள மிகப்பெரிய பிரபஞ்ச உள்நோக்கத்தை எமது மனங்களால் ஏற்று மெச்சிக் கொள்வது எமக்கு இலகுவானதாக இருப்பதில்லை. இந்த உளவியலைக் கீதாசிரியன் நாம் என்றுமே கற்பனை செய்யமுடியாத மிகப்பெரிய உளவியலாளருள் ஒருவன் ஆவான் என்று கூறலாம். இதனால் அவன் மிகவும் சாதாரண மனிதனின் நிலையில் இருந்து தனது போதனையை ஆரம்பிக்கின்றான்.

### 6. நாம் வாழ்வுக்கலை தெரியாதவர்கள்.

கீதாசாரியன் தனது போதனையைக் கையாளும்போது மனித உணர்ச்சிகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுகின்றான். தனிப்பட்ட மனிதர்களின் உணர்வுகள்தான் செயல்களுக்குக் காரணமாக அமைகின்றன. நாம் உலகத்தை எதிர்கொள்ளும்போது அல்லது உலகில் எந்தக் கடமையையும் செய்யும்போது ஒரு குறித்த திசையில் எங்களை வழி

*தினமும் ஜபம் செய்பவர்களிடம் பாவம் இருக்காது.*

நடத்துவது எமது உணர்வுகளே ஆகும். நாம் சிறுவர்களாக இருக்கும்போதும், பின் இளைஞர்களாக இருக்கும்போதும் இளமைக்கே உரிய உற்சாகத்தோடு எம்மிடம் பெரிய ஆற்றல்கள் உண்டு எனப் பெரும் நம்பிக்கை உள்ளவர்களாக நாம் எம்மைக் கற்பனை செய்கின்றோம்.

எமது எதிர்கால வாழ்க்கைக்கு என ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆக்குகின்றோம். வாழ்க்கையில் "எனது சாதனை இதுவாகத்தான் இருக்கவேண்டும்" என்று கருதுகின்றோம். ஆனால் அந்த உற்சாகம் நாம் வாழுகின்ற சூழலின் தன்மையைப் போதிய அளவு புரிந்து கொள்ளாததனால் தொய்ந்து போகின்றது. அந்த உண்மையை ஒருவர் மேலும் மேலும் முதிர்ச்சி அடைந்து செல்லும்போதுதான் படிப்படியாக உணர்ந்துகொள்ளுகின்றார். அந்த இளம் உற்சாகம் மெதுவாகக் குறைந்து போகிறது. முதுமை வித்தியாசமான ஒரு மொழியில் பேச ஆரம்பிக்கின்றது. அம்முதுமை இந்த உலகம் முழுவதுமே வேறொரு வகையில் உருவாக்கப்பட்டிருப்பதைக் கூறுகின்றது. வாழ்க்கைக் கலையைப் பற்றிப் போதிய அளவு கற்றிருக்காத போது முன்பு நாம் கற்பனை செய்திருந்த உலகத்தைவிட இந்த உலகம் வேறு வகையில் உருவாக்கப்பெற்றிருப்பதை அறிய வருகின்றோம்.

### 7. அருச்சுனன் மனிதனின் பிரதிநிதியே.

அருச்சுனனும் வாழ்க்கைக் கலையைப் போதிய அளவு கற்றிருக்காத ஒரு மனிதனே ஆவான். அவன் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த ஒரு மனிதனுக்கும் சான்றான ஓர் அடையாளமாகவே தோன்றுகின்றான். அவன் தனது பலங்களோடும், பலவீனங்களோடும் கூடிய ஓர் எளிமையான ஆளுமையின் உருவமாகவே காட்சி அளிக்கின்றான்.

ஒரு சராசரி மனிதனிடமுள்ள பலத்தையும் பலவீனத்தையும் அருச்சுனனிடம் காணலாம். நாம் எங்கிருந்தாலும், ஒவ்வொருவரும் பலமும், பலவீனமும் உள்ளவர்களே. மேற்கூறிய இந்தக் கருத்துக்களை எல்லாம் நாம் எமது மனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எமது பலங்களைப் புறக்கணித்துவிட்டுப் பலவீனங்களை மட்டும் தேவை இல்லாத அளவுக்கு நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அதேபோல எந்தக் குறைபாடும் இல்லாத பலமானவர்களாகவும் நாம் எம்மைக் கற்பனை செய்துகொள்ளக் கூடாது.

### 8. முக்குணங்களும் பிணக்கும்.

பிணக்குகள் உள்ள, இராசத ஆற்றல்கள் உள்ள ஓர் உலகில் நாம் வாழுகின்றோம். அந்த இராசத ஆற்றல்கள் எம்மைக் காலம், இடம், பொருள்கள் என்ற திசைகளில் புலன்களின் வழியே வெளிப்புறமாக இழுக்கின்றன. அதேவேளை சத்துவம் எமது சொந்த நிலையையும், அக ஒருமைப்பாட்டையும் வைத்திருக்கச் செய்கின்றது. எமது ஆளுமையின் உறுதி எம்மிடமுள்ள சத்துவத்தினால் பேணப்படுகின்றது. இராசதத்தின் காரணமாக எமது பல கிளைகளான புறநோக்கு அமைகிறது. ஓரளவில் ஒரே வேளையில் இரண்டுமே எம்மிடம் காணப்படுகின்றன. தாமதத்தின் விளைவாகச் "செய்த வேலை போதும், எதிலும் அர்த்தமில்லை, வாழ்வில் இளைப்பு உணர்வு தெரிகிறது" என்கின்றோம். இவை யாவுமே எல்லா நேரங்களிலும் எம்மிடம் காணக்கூடியனவாக உள்ளன. ஒவ்வொரு கணமும் நாம் சத்துவம் உடையோராயும், இராசதம் உடையோராயும், தாமசம் உடையோராயும் இருக்கின்றோம். ஆனால் ஒரு நேரம் ஏனைய

*ஞானியின் உள்ளத்தில் இன்பமும் துன்பமும் ஒட்டுவதில்லை.*

இரண்டும் குறைவாயும் ஒன்றுமட்டும் மேலோங்கி உள்ளதாயும் உள்ளோம். அதனால் குறிப் பிட்ட ஒரு நேரத்தில் குறிப்பிட்ட ஒரு மனப்பாங்கு உடையவர் ஆகின்றோம். எமது மனப்பாங்கு மாறலாம்; எண்ணங்கள் மாறலாம்; எமது நோக்குக்கூட முற்றாக மாறலாம். அது அந்த முக்குணங்களின் இயல்புக்கு ஏற்ப அமைவதை எம்மால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாது. அந்த முக்குணங்கள் தனிப்பட்ட ஆட்களைப் பொறுத்தவை; உளவியல் ரீதியானவை; பிரபஞ்ச ரீதியானவையும் ஆகும்.

முக்குணங்களும் வெவ்வேறு வழிகளில் செயற்படுகின்றன. இவை புலன்பொருள்களில் தூலமாகவும், எமது உடலுள் உளவியல் அங்கமாயும் உள்ளன. கீதை இந்த முக்குணங்களின் சேர்க்கை இன்றி எங்கும், எதுவும் இல்லை என்று ஓர் இடத்தில் கூறுகின்றது. இந்தப் பூமியிலும் சரி, வானத்திலும் சரி, முக்குணங்களின் கூட்டல் விருத்தியாகவும், பெருக்கல் விருத்தியாகவும் உள்ள சேர்க்கைகளே அன்றி வேறேதும் இல்லை. ஒருவர் வானத்துத் தேவதையாகவோ பூமியிலுள்ள உயிராகவோ இருந்தாலும் எல்லாம் முக்குணங்களால் ஆக்கப்பட்டவையே. எனவே மனித சூழ்நிலையில் உள்ள ஒரு மனிதன் இந்த மூன்று ஆற்றல்களினால் ஆன பிணக்குச் சூழ்நிலையிலேயே தன்னைக் காண்கின்றான். இதனால் மனித வாழ்க்கை இந்த மூன்று ஆற்றல்களின் செயல், பிரதிச் செயல் என்பவற்றின் ஒரு களமாக அல்லது ஒரு போராட்டமாகத் திகழ்கின்றது.

**9. கொள்கையும் எதிர்க் கொள்கையும்.**

மகாபாரதப் போராயினும் சரி, வேறெந்தப் போராட்டமாயினும் சரி, அகப்போராட்ட மாயினும் சரி, புறப்போராட்டமாயினும் சரி பிரபஞ்ச வளர்ச்சியின் பொருட்டு இந்த மூன்று ஆற்றல்களும் ஒன்றோடொன்று கலக்கும் நிறங்களும், வடிவங்களுமே ஆகும். அவை ஒன்றோடொன்று மோதுகின்றன. ஒரு கொள்கை, அதன் எதிர்க்கொள்கை என்ற வகையில் இந்த மோதல் ஓர் உயர்ந்த நோக்கத்திற்காக நிகழ்கின்றது. பின் இவை இரண்டும் சேர்ந்து ஒரு புதிய கொள்கையாக வளர்ந்து தனக்கு எதிரான ஓர் எதிர்க்கொள்கையை உருவாக்கு கின்றது.

பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தின் சூழ்நிலை இந்த இரண்டு கொள்கையையும் உடைய இரண்டு படைகளின் உணர்வுகளைக் கொண்ட ஒரு சூழ்நிலை ஆகும். ஒவ்வொரு படையும் மற்றப் படையை வெற்றிகொள்ளுவதற்குக் கற்பனை செய்கின்றது. ஒவ்வொரு படையும் தன்னிடமுள்ள எல்லா ஆற்றல்களையும் வரப்போகின்ற யுத்தத்தில் பயன்படுத்த ஆயத்தமாக உள்ளது. தனிப்பட்ட ஒவ்வொருவரும் செயல், பிரதிச்செயல் என்ற தளத்தில் ஒரு போராட்டமாகவே தனக்குமுன் தோன்றும் உலகத்தைக் காண்கின்றனர். ஒரு குழந்தை தனது சொந்த நோக்கங்களுக்காக தனது புத்திக்கூர்மையற்ற உற்சாகத்தால் இந்த உலகில் தான் எதனையும் செய்ய முடியும் என்றும், இந்த உலகத்தைத் தானே வைத்திருக்கலாம் என்றும், அதனைத் தானே அனுபவிக்கலாம் என்றும், அதனைத் தான் வெற்றி கொள்ளலாம் என்றும், அதனைத் தான் உபயோகிக்கலாம் என்றும் கற்பனை செய்கின்றது.

நாம் வயதில் முதிர்ச்சி அடையும்போது உலகம் அப்படியொன்றும் சிறியதல்ல என்ற உண்மையை உணரவருகின்றோம். கடற்கரையில் நின்று கடலைப் பார்க்கும்போது

அது எவ்வளவு பயங்கரமாகத் தோன்றுகிறதோ அதுபோல இந்த உலகத்தின் அளவும் எம்மை மிரட்டுகிறது. எமக்குமுன் தோன்றும் உலகத்தினது அளவின் பிரமாண்டத்தினால் நாம் பயப்படுகிறோம். இந்தப் பிரபஞ்சத்தின் பரப்பளவு எவ்வளவு விரிவானது. இந்த முழு இயற்கையாகவும் உள்ள ஐம்பூதங்களின் ஆற்றல்களையும் சிந்திப்பது எவ்வளவு கடினம்!.

**10. மனித உறவு.**

ஐம்பூதங்களின் ஆற்றல்கள் மட்டுமன்றி நாம் தொடர்பு கொண்டுள்ள வேறு விடயங்களும் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை எமது சமூக உறவுகள் ஆகும். சமூக உறவுகளைவிட இயற்கையின் அமைப்பு வேறொரு விடயம் ஆகும். அதுபற்றிக் கீதை ஆய்வில் பின்பு ஒருசமயம் எடுத்துக்கொள்வோம். ஆனால் எமது கவனத்தை அதிகம் ஈர்க்கின்ற மிக ஆபத்தான உடனடிப் பிரச்சினை இயற்கையின் ஆற்றல்களை விடவும் மனித உறவுகளே ஆகும். நாம் புவிஈர்ப்பு ஆற்றலுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றோம். நாம் குளிரையும் வெப்பத்தையும் உணரலாம். மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம் பூதங்கள் எம்முன்னால் பயங்கரமான ஆற்றல்களாகத் தோன்றலாம். சந்தேகத்திற்கு இடமின்றி அவை எமது உடனடியான கவனத்துக்கு எடுக்கப்படவேண்டிய விடயங்கள் அல்ல.

நாம் காலையில் விழித்து எழும்போது எங்கள்முன் ஐம்பூதங்களும் ஆற்றலுள்ள எதிரிகளாக இருந்தாலும், வழமையாக அவைபற்றிச் சிந்திப்பதில்லை. பதிலாக உடனடியான மனித உறவுகளைப் பற்றியே முதலில் சிந்திக்கின்றோம். எமது ஆளுமை, எமது உணர்ச்சிகள் என்பவற்றோடு தொடர்புபட்ட அன்றாட விடயங்களைப் பற்றியே சிந்திக்கின்றோம். எமது வாழ்வின் உடனடிப் பார்வைக்குள் மனித சமுதாயத்தோடு தொடர்புபட்ட விருப்பு, வெறுப்புக்கள் பற்றியே அதிகம் சிந்திக்கின்றோம். நாம் பழகுகின்ற மனிதர்கள் மத்தியில் இருக்கும்போது இந்த உறவுகளின் இரகசியங்களுக்குள்ளே ஆழமாகத் தகுந்த முறையில் போகக்கூடிய நிலையில் இருப்பதில்லை.

(தொடரும்...

**கடவுள் தண்ணீரைப் போல...**

உபன்யாசகர் ஒருவர் சொற்பொழிவின்போது, "கடவுள் தண்ணீரைப் போல" என்றார். "ஆமாம்... ஆமாம்... பணம் உள்ளவனுக்கு லாரியில் தண்ணீர் கிடைப்பது போல, காசு உள்ளவனுக்கே தரிசனம் என்ற ரீதியில் எல்லாமே அமைந்துவிட்டது" என்று கிண்டல் செய்தான் ஓர் இளைஞன். உபன்யாசகர் சிரித்தார். "தம்பி! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. தண்ணீர் மேகங்களில் இருந்து பூமியை நோக்கிக் கீழே வருகிறது. கடவுளும் அப்படித்தான் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து கீழே இறங்கி வந்து தன்னைத் தேடும் மனிதரைத் தானும் தேடிப் பிடிக்கிறான். தண்ணீருக்கு ஏழை என்றும், பணக்காரன் என்றும், உயர்ந்தவன் என்றும், தாழ்ந்தவர் என்றும் எந்தப் பேதமும் இல்லை. அதேபோலத்தான் இறைவன் நிலையும் தண்ணீருக்கு எந்த நிறமும் இல்லை. தனித்துவ குணமும் இல்லை. அதுபோலவே. கடவுளையும் அவன் இப்படிப்பட்டவன் என்று யாராலும் கூற இயலாது. நீ எந்தப் பாத்திரத்தில் தண்ணீர் எடுக்கிறாயோ அந்தப் பாத்திரத்தின் அளவு மட்டுமே தண்ணீரானது நிறையும். இதுபோலத்தான் இறைவன் தன்மையும். நீ செய்யும் பக்தி எந்த அளவுக்கு உள்ளதோ அந்த அளவுக்குத்தான் இறைவனின் கருணையும் நிறைந்திருக்கும். தண்ணீர் இந்த உலகம் முழுவதும் வியாபித்து நிற்கிறது. அதுபோலவே கடவுளும் எல்லா இடத்திலும் வியாபித்திருக்கிறான்" என்று அவர் கூற இளைஞன் வெட்கத்தில் முகம் தாழ்த்திக் கொண்டான்.

-பக்தி-

# மனு நீதியின் தோற்றம்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

திருவாரூரிலே, புகார்ப்பட்டினத்திலே அநபாயன் என்ற சோழன் மரபிலே வந்து பிறந்தவன் மனு என்னும் வேந்தன்.

இந்தப் புகார்ப்பட்டினத்திலேதான், சிலப்பதிகாரக் கண்ணகியும் அவதாரஞ் செய்தாள் என்பது குறிப்பிடத்தக்கது. கண்ணகி, பாண்டியன் சபையிலே வழக்குரைத்த வேளையில் தனது ஊரின் நீதிமுறை பற்றி இப்படிச் சொல்கிறாள்.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க;
ஆவின் கருமணி உகுநீர் நெஞ்சு சுடத்
தான், தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என்பதியே!" (சிலப்பதிகாரம்)

"நான் பிறந்த ஊர் புகார்ப்பட்டினம். அங்கே அரண்மனை வாயிலில் அரசன் மணி ஒன்றினைக் கட்டி வைத்திருக்கிறான்; அரசனிடம் முறைப்பாடு சொல்ல வேண்டியிருந்தால், அந்த மணியை அடிக்க வேண்டியதுதான். அரசன் அதற்கான நடவடிக்கையை எடுத்து நீதி வழங்குவான்" என்று கண்ணகி பெருமையாகச் சொல்லித், தான் அங்கு வழக்குரைக்க வந்தமையைக் குறிப்பிடுகின்றாள்.

இந்த நீதிமுறை மனு என்கின்ற வேந்தனால் தோற்றம் பெற்றது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சோழ மன்னனான இந்த மனு என்பானுக்கு ஒரு மகன் பிறந்து வளர்ந்து, தந்தையைப் போலவே பெயர் பெற்று கற்பவை கற்று இளவரசு என்னும் பட்டம் பெறுவதற்கேற்ற குண நலம் வாய்ந்து விளங்கினான்.

"தோன்றின் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (என்பது குறள் 236)

ஒரு நாள் அரசகுமாரன் அவனையொத்த வேறு குமாரர் சேர்ந்து வரத் தேரில் ஏறிப் போனான். அப்பொழுது பசுக்கன்று ஒன்று, துள்ளிக்கொண்டு வந்து, இந்த அரசகுமாரனது தேர்க்காலில் அகப்பட்டு இறந்து விட்டது. இதனைக் கண்ட தாய்ப்பசு ஓடிவந்து பார்த்துக் கதறியது. அரச குமாரனும் தேரினின்றும் குதித்துப் புலம்பினான். உயிர்க்கொலை நடந்து விட்டது; அதுவும் பசுக்கொலை ஆனதே என்ற எண்ணம் மனு வேந்தன் மகனை வருத்தியது. தந்தையின் நற்பெயருக்குத் தன்னால் களங்கம் ஏற்பட்டதே என அழுதான். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்! அல்லவா? கன்றை இழந்த பசு ஓடிப்போய் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த மணியைத் தன் கொம்பால் அசைத்து ஒலிக்கச் செய்தது.

வாயில் மணியோசையைச் செவிமடுத்த அரசன் திடுக்குற்றான். காவலரை அழைத்து விசாரிக்கச் சொன்னான். அப்பொழுது அமைச்சர் ஒருவர் வந்து,

*அறிவு ஆழமான கடல்போன்று அமைதியாய் இருக்கும்.*

"வளவ! நின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில் தேர்ச் சேனை சூழ
அரசுலாம் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால்
இடைப் புகுந்து இறந்தது ஆகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்தது இத்தன்மை என்றான்"

இதனைக் கேட்ட மன்னன் துயரத்தில் ஆழ்ந்தான். இதற்கு என்ன கழுவாய் செய்யலாம் என்று மந்திரிமாரைக் கேட்டான்.

வேதமுறை உணர்ந்த அந்தணர் கூறும் வழியில் பிராயச்சித்தம் செய்யலாம்; நின் மகனைத் தண்டிக்கலாம் என்று தமது கருத்தை மந்திரிமார் கூறினார்கள். ஆனால் மனு வேந்தனுக்கு அந்த யோசனை திருப்தி தரவில்லை.

பசு துயரப்படுவது போலத் தானும் துயரப்பட வேண்டும். அதுதான் நீதி என்று எண்ணிய வேந்தன், ஒரு அமைச்சரைக் கூப்பிட்டுத் தன் மகன்மீது தேரைச் செலுத்தும்படி கேட்டான்.

இந்த இக்கட்டான நிலையில், அந்த அமைச்சன் தானே தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.

இதோ, அதனை நானே செய்கிறேன் என்று சொல்லி மனு வேந்தன், தன் மகனை வீதியிலே கிடத்தி, மார்பின்மீது தேர்ச்சக்கரம் உருளும்படி தேரைச் செலுத்தினான்.

ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான்என் பதும் உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன்
மருமம்தன் தேர்ஆழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ தான்.

இதுகண்ட வீதிவிடங்கப் பெருமான், விண்ணோரும் மண்ணோரும் காணப் பிரத்தியட்சமாகத் தோன்றியருளினார்.

தண்ணளி வெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர் கண் மழை பொழிந்தார்
வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணல் அவன் கண்ணெதிரே
அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழ நின்றான்
வீதிவிடங்கப் பெருமான்.

வீதிவிடங்கப் பெருமான், மனுவேந்தனுடைய செயற்கருஞ் செயலைக் கண்டு காட்சி கொடுத்தருளினார்.

அப்பொழுது தேர்க்காலில் அகப்பட்டு உயிரிழந்த ஆன்கன்றும், அரசனது மகனும், அரசன் ஆணைக்கு உடன்படாமல் உயிர்நீத்த மந்திரியும் உயிர்பெற்று எழுந்தனர்.

*அதிகம் பேசுபவர்கள் செயல் புரிவதில்லை.*

"முன்னவனே முன்னின்றால், முடியாத பொருள் உளதோ?" என்கிறார் சேக்கிழார் பெருமான்.

மனு வேந்தனின் நீதி நெறியை மேற்கோள் காட்டி, அந்தச் சோழ மன்னனால் ஆளப்படும் புகார் தனது ஊர் என்று பெருமையாகக் கூறியதாகக் கண்ணகியைக் காட்டிய இளங்கோவடிகளை முன்னர் காட்டினோம்.

இராமாயணத்தில் வாலி, இராமனை இகழ்ந்து பேசியதைக் கம்பர், கூறும்போது,

"அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல்
அதற்கு வேறு ஓர்
குரங்கினத்து அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற்று உண்டோ?"

என மனுநெறியை மேற்கோள் காட்டுவதுங் காண்போமாக.

கோலமயிலில் குணதிசைக் கதிராய்
எந்நிதியும் தரும் சந்நிதியானின்
சந்தக் கவிதை சிந்தையில் வளர
சந்தச் சரமருள் சிந்தாமணியாய்
சங்கரன் மைந்தா சரவணன் சோதரா.

செல்வநகர்வளர் சந்நிதி அரசே
சீலம் நிறைந்த சீரலை வாயுறை
செம்பொன் மயிலோய் சிந்தை நிறைபொலி
திருவருளமுதம் தந்தருள் வேலா
அன்பர்க்கடியாய் அடியார்க்கரசே.

சந்தக் கவியால் சிந்தைச் சலிப்பை
சாற்றிட முடியாசிற்றறி யேனை
ஆற்றுப்படுத்தி அடைக்கலமருளி
சோதிலா அன்பைக் குறைவிலா தருள்வாய்

கோளின் துன்பமும் கொடிய பகையும்
குடவரையாகக் கொலுவீற்றிருப்ப
அண்டப் பிறவியில் பிண்டத் துழலும்
ஆறறிவுடைய அற்ப பிராணி
மலிந்த இடர்களை மாற்றிடவாவா
வள்ளி மணாளா வரமருள் நாளும்
சூர குஞ்சரி கணவா குகனே சரணம்
சரணம் சரணம் சந்நிதியரசே
எந்நிதியும் தரும் இளவேலவனே
சரணம் சரணம் நின்தாள் சரணம்.

-தி. பரமேஸ்வரி-

*முடிவே இல்லாத வியாதி பேராசை.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| ந. குகசங்கர் | கொழும்பு | 1000. 00 |
| இ. இரத்தினவேல் குடும்பம் | உரும்பராய் | 5000. 00 |
| தி. பாலசுப்பிரமணியம் | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| கு. ஞானவேல் (சந்திரன்) | கனடா | 15000. 00 |
| அமரர் குமாரசாமி நினைவாக | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| அமரர் பாலசுப்பிரமணியம் நினைவாக | கொழும்புத்துறை | 10000. 00 |
| S. சுதாகரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மனோகரன் பிரவீன் | சித்தங்கேணி | 15450. 00 |
| ச. டிலக்ஷன் | கைதடி கிழக்கு | 5000. 00 |
| கி. தங்கராசா | கரவெட்டி | 1000. 00 |
| சு. முத்துலிங்கம் குடும்பம் | கோண்டாவில் | 2000. 00 |
| தி. கமலம் | காரைநகர் | 3000. 00 |
| திரு சுப்பிரமணியம் குடும்பம் | நெல்லியடி | 2000. 00 |
| சீ. தங்கருபன் | பருத்தித்துறை | 5000. 00 |
| மு. செந்திராசா | சோழங்கன் | 5000. 00 |
| ந. சிவகுமார் குடும்பம் | லண்டன் | 30000. 00 |
| செ. செல்வக்குமார் | வவுனியா | 5000. 00 |
| க. பிரணவன் | காரைநகர் | 5000. 00 |
| திரு. இராஜேந்திரா | சண்டிலிப்பாய் | 10000. 00 |
| திரு. சந்திரருபன் | கொடிகாமம் | 1000. 00 |
| திருமதி சு. சறோஜாதேவி | கந்தரோடை | 1000. 00 |
| S. மதியழகன் | சங்கானை | 500. 00 |
| தம்பையா சிவசுப்பிரமணியம் | ஏழாலை | 1000. 00 |
| முத்தையா அன்னமுத்து | கோப்பாய் | 1மூடை அரிசி, மரக்கறி |
| ம.இ. சுப்பிரமணியம் | சுழிபுரம் | 4000. 00 |
| நிமலன் தேவமாலினி | கரவெட்டி கிழக்கு | 10000. 00 |
| ம. நாகேஸ்வரி | நவிண்டில் | 2000. 00 |
| வா. மனோராஜி | லண்டன் | 20000. 00 |
| செ. செந்தூரன் | ஆனைக்கோட்டை | 10000. 00 |
| திரு தம்பிராசா குடும்பம் | கரவெட்டி | 1மூடை அரிசி 5000. 00 |
| கு. ஞானவேல் நினைவாக சந்திரன் மூலம் | வல்வெட்டித்துறை (கனடா) | 15000. 00 |
| வல்லிபுரம் இராசநாயகம் | கரவெட்டி கிழக்கு | 10000. 00 |

அளவுக்கு அதிகமான ஓய்வு வேதனையைத் தரும்.

| | | |
|---|---|---|
| கனகரெத்தினம் செல்வமதி | தெல்லிப்பழை | 8000. 00 |
| சி. செல்வேந்திரராஜா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| கு. பாலசிங்கம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. மங்கையற்கரசி | கொக்குவில் மேற்கு | 5000. 00 |
| R. கோபாலசிங்கக் குருக்கள் | மட்டக்களப்பு | 5000. 00 |
| வே. அருணாசலம் | கொழும்பு- 6 | 2000. 00 |
| திரு இராசகுலசூரியன் | பருத்தித்துறை | 5000. 00 |
| சிவரூபன், பாமினி, அகிஷன், ரூபகௌரி | பருத்தித்துறை | 3000. 00 |
| மு. யதுஷனா | பண்ணாலை | 5000. 00 |
| A. துரைசாமி ஐயர் | மல்லாகம் | 3000. 00 |
| அ. நடராசா | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| சகுந்தலநாயகிமூலம் அ. சின்னாச்சிப்பிள்ளை நினைவாக | வவுனியா | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் குடும்பம் | பருத்தித்துறை | 3000. 00 |
| லிங்கம் கூல்பார் | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| திருமதி சந்திரலீலா நாகராசா | கல்வியங்காடு | 2000. 00 |
| இ. சிவராசா | கரவெட்டி | 10000. 00 |
| S. கலாவதி | நுவரெலியா | 1500. 00 |
| வி. ஸ்ரீதரன் | அளவெட்டி | 5000. 00 |
| க. சரவணபவன் | மட்டுவில் தெற்கு | 1000. 00 |
| அ. ஞானக்குமார் | கொழும்புத்துறை | 5000. 00 |
| கி. கானவி | இணுவில் | 10000. 00 |
| அபிராமி சியாமளாமூலம் மல்லிகா ராஜரட்ணம் நினைவாக (நல்லூர்) | லண்டன் | 10000. 00 |
| Dr T. கோணேஸ்வரன் | வவுனியா | 3000. 00 |
| கார்த்திகேயாயினிமூலம் T அம்பா நினைவாக | இந்தியா | 2000. 00 |
| R. சுதர்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| செ. கதிரவேலு (ரத்தினம்) நினைவாக | கோப்பாய் | 10000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | பத்தமேனி | 2000. 00 |
| சி. பாஸ்கரன் | துன்னாலை வடக்கு | 2000. 00 |
| செ. சிவஞானம் தோப்பு | அச்சுவேலி | 2000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| ஆன்றா அச்சகம் கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| வை. சின்னத்தம்பி | பண்ணாலை | 5000. 00 |
| நா. குகதாசன் | லண்டன் | 10000. 00 |

(தொடரும்...

அன்புடை மாந்தர் மனிதருள் தெய்வம்.

# கடவுள் நடத்தி வைத்த கல்யாணம்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

இது பரஞ்சோதி முனிவர் பாடியுள்ள திருவிளையாடற் புராணத்தின் திருவாலவாய்க் காண்டத்தில் 64ஆம் படலத்து வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலமாகும். இங்கு கடவுள் என்பது மதுரைச் சோமசுந்தரப் பெருமானையே குறிக்கும்.

கும்பகோண மாவட்டத்துள் புதுக்கோட்டையில் ஒரு காலத்தில் "கோவில் காடு" என்று அழைக்கப்பட்டு வந்த ஊர்மக்களுக்கெல்லாம் திருமண வரம் அருளிய காரணத்தால் "திருமணஞ் சேரி" என்றானதாகத் தலவரலாறு கூறுகிறது. இங்கு பெருஞ் செல்வந்தராய வணிகர் பலர் வாழ்ந்தனர். அவருள் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர் நிறை செல்வமும் கற்பு நெறி தவறாத மனையாளும் வாய்க்கப்பெற்றும் குழந்தைப் பேறின்மையால் நொந்து சோம சுந்தரப் பெருமானை வேண்டுதல் செய்ய அவரருளால் ஒரு பெண் மகவு பெற்று மகிழ்தலோடு மகள் பருவம் எய்தியதும் தனது தங்கையின் மகனுக்கே மணம் முடித்து வைப்பதாக உறவினரிடம் கூறி இருந்தான். ஊழ்வினை வசமாகி நோயுற்று மரணமடைந்தான். மனைவியும் அக்கணமே உயிர் நீத்தாள். பருவ மங்கையோ செய்வதறியாது பதறினாள். உறவினர் முன் வந்து இருவருக்கும் ஈமக்கடன்களைச் செய்து பெரு வணிகரின் தங்கை மகன் மதுரையிலே மனையறம் பூண்டிருந்தவனுக்குத் தகவல் கொடுத்தார்கள். கடிதம் கண்ட மருகன் அழுது புலம்பி வந்து அழைத்துச் சென்று சுற்றம் சூழ மணமுடிக்க எண்ணினான்.

தன்னுடன் வந்தவர்களை முன்செல்ல விடுத்து இருவரும் நடந்து செல்லும்போது காடு குறுக்கிட்டது. அங்கே வன்னிமரமும் கிணறும் தென்பட்டது. அம்மர நிழலில் அழகிய சிவலிங்கம் ஒன்றையும் கண்டனர். அதனை வணங்கி இருவரும் இரவு வர; மரத்தின்கீழ் சமைத்து உண்டு உறங்கினர். அவ்விரவு "திருப்புறம்பயம்" என்னும் கோவிலருகில் உறங்கிய வனை உறக்கமின்றி வந்த கொடிய நாகம் சினந்து கடிக்க விடம் தலைக்கேறி வணிகன் மாண்டான். இது கண்ட மங்கையர் மார்பிலடித்து அரற்றினர். வணிக மங்கை அம்புபட்ட மயில்போல் வீழ்ந்து மயங்கினாள். கண்கள் செருகின. இடியால் தாக்குண்டு வீழ்ந்தவள்போல் வீழ்ந்து கிடந்தாள். அதுகண்டு பதறிய மங்கையர் ஐயகோ! அருமைத் தங்கையும் உயிர் துறந்தனளோவென வாரியெடுத்து மடிமீதிருத்தி முந்தானையால் விசிறி உயிர்ப்பித்தனர்.

உயிர் பிழைத்த வணிக நங்கை ஆண் அன்றிலை இழந்த பேடறன்றில் போலப் புலம்பியது கேட்டு வந்த ஆளுடைய பிள்ளையார்,

"கன்னி நீ யாரை? யுற்றதென்னெனக் கன்னிதாழ்ந்து
தன்னரு மரபு மீன்றார் தம்மையு மருகற் கென்றே
உன்னினர் மன்றல் பேசியிறந்தது முயிரன்னாரோ
இந்நெறி யடைந் தீங்குற்ற நிகழ்ச்சியும் எடுத்துச் சொன்னாள்"

-திருவிளையாடற் புராணம் 3280.

"தந்தையும் தாயுமன்னார் தமியளாய் இரங்கும் பேதைப்
பைந்தொடி யாவி காப்பான் பாம்புகோட் பட்டான்மாடே

படைகளைவிட எண்ணங்களே வலிமை பெற்றவை.

வந்தவனாக மெல்லா மருந்துரு வாகும் வண்ணஞ்
சிந்தையே செய்தருட்கண் வைத்தார் குதித்தது தீவாய் நஞ்சம்"
-திருவிளையாடற் புராணம் 3281.

ஞானசம்பந்தப் பெருமானது அருளினாலே இறந்து கிடந்த வணிகன் உறக்கத்திலிருந்து விழித்தாற்போல் எழுந்து நின்றான். சுற்றி நின்றோர் மகிழ்ந்தனர். வணிக மங்கை ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். அவள் காதல் மிக்க மாமன் மகளாயிருந்தும் தலைவன் இறந்த காலத்தும் உயிர்பெற்றபோதும் அவனது மெய்தீண்டாதிருந்த தன்மை கண்டு வியந்த பிள்ளையார் வணிகனை நோக்கி "உன் மாமன் மகளாகிய இப்பெண் திருமகள் போன்றவள். எனவே இவளைத் திருமணம் முடித்துச் செல்வாய்" என்றார். அதுகேட்ட வணிகன் ஐயனே! "பிரமன் படைத்த நான்கு வருணங்களையும் பாதுகாப்பவரே, இங்கு எம் குல வணிகரும் பிற சான்றுகளும் இல்லாமல் எவ்வாறு மணம் முடிப்பேன்"? என்றான். அதுகேட்ட ஆளுடைப் பிள்ளையார் "உனதன்பு மாமன் இம்மங்கையைப் பெற்றவுடன் உனக்கே மணம் செய்வேன் என்று கூறியதை உறவினர் அறிவர். அன்றியும் இந்த வன்னி மரமும் கிணறும் சிவலிங்கமும் சாட்சிகளாகும். எனவே இங்கேயே திருமணம் செய்வாய்" என்றருளினார். அதுகேட்ட வணிகன் பெருமானை வணங்கி "தேவரீரே நீவிரே, ஆசானும் கடவுளும் உறவினரும் ஆவீர்" என்று கூறி முறைப்படி திருமணம் முடித்து மணம் முடித்த மங்கையுடன் சீர்காழி வள்ளலை வணங்கி ஆசீர்வாதம் பெற்று மதுரையம்பதியை அடைந்து சுற்றம் சூழ உறவு பாராட்டி மகிழ ஏறுபோல் பீடுநடை போட்டு அறநெறி வழுவாது இல்லறமே நல்லறமாக வாழ்ந்து இன்புற்றிருந்தான்.

இவ்வரலாற்றை வேறு வகையாக உரைப்பதும் கண்கூடு. உணவுண்டு உறங்கியவனை நாகம் தீண்டி இறக்கக் கண்ட வணிக மகள் "கடவுளே! எனக்கேன்? இப்படியெல்லாம் கொடுமைகள்! பெற்ற தந்தை தாயை இழந்தேன். இன்று துணையென நம்பியவரும் இறக்கப் பாவி யான் எவ்வாறு வாழ்வேன்" எனக் கதறித் துடித்தாள். அப்போது சோமசுந்தரப் பெருமான் அங்கு முதியவர் வேடம் தாங்கி வந்து மடைப்பள்ளிச் சாம்பருடன் எதிரே கிணற்றில் எடுத்த தண்ணீரையும் கலந்து இறந்த வணிகனது உடலின்மீது தெளித்தார். உடன் வணிகன் உயிரெழக்கண்ட வணிக மங்கை அதிசயித்து நிற்க, அங்கிருந்த சிவலிங்கம், கிணறு, வன்னிமரம் ஆகியவற்றையே சாட்சியாகக் கொண்டு இருவரையும் திருமணம் செய்து கொள்ளும்படி" அம்முதியவர் கூற, அவ்வாறே வணிகன் மங்கையின் கழுத்தில் மங்கல நாண் பூண்டனன். வந்த முதியவர் சிவ பார்வதியர்க இடபாரூடராகக் காட்சிதந்து ஆசீர்வாதம் தந்தருளினார். அதுமட்டுமன்றி அவர்களின் கல்யாணத்துக்கு மதுரையில் சாட்சியளித்தார் என்றும் தலவரலாறு கூறுகிறது. இதனால் கோயில் "திருமணஞ்சேரி" என்றும் கடவுள் "திருமணநாதர்" எனவும் அழைக்கப்படுகிறார்.

இவ்வாறு கடவுளே செய்து வைத்த கல்யாணத்தின்மூலம் இன்புற்ற வணிகன்,

"தன் பெருந் தனமு மாமனீட்டிய தனமும் ஈட்டி
மன்பெரு நிதிக்கோனென்ன வாணிகம் பெருக்கி நாயகன்
இன்புறு காதலார்க ளிருவரு மீன்ற காதல்
நன்பொருண் மகிழ்ச்சி செய்யநலம் பெற வாழுநாளில்"
-திருவிளையாடற் புராணம் 3289.

*ஒரு மனிதனுக்கு ஆகாயத்தைவிட உயர்ந்தவர் அவனது தந்தை ஆவார்.*

இந்நிலையில் மூத்தாளின் மூர்க்க குணம் படைத்த புதல்வர் நால்வரோடு சாதுவான இளையாளது மைந்தன் விளையாடும்போது அவனை மூத்தாளின் புதல்வர் அடித்தனர். அது கண்ட இளையாள் மூத்தாளின் புதல்வரைத் திட்டினாள். அது கண்ட மூத்தாள் "இகழ்ந்து ஊர்பேர் தெரியாது சாட்சி சடங்கு சம்பிரதாயம் இன்றி என் கணவனை மயக்கி மணம் முடித்த காமப் பேயாகிய உனக்கு இந்த வாய்க்கொழுப்பு ஏன்? என்று வசை பாடினாள். அத்தோடு திருமணத்துக்குச் சாட்சி இருந்தால் காட்டு" என்று சவால் விட்டாள். இதுகேட்ட இளையாள் "என் கணவன் பாம்பு தீண்டி இறந்தபொழுது அவருக்கு உயிர் தந்த சீர்காழிப் பிள்ளையாரின் ஆணையால் எம் தலைவன் திருப்புறம்பயத்தில் எழுந்தருளி யுள்ள சிவலிங்கமும் வன்னிமரமும் கிணறும் காணத் திருமணம் புரிந்தனன். அம்மூன்று சாட்சிகளும் உள்ளன என்றாள். அது கேட்ட மாற்றாள் நகைத்து "சாட்சிகள் இங்கு வருமாயின் உன் திருமணமும் உண்மையே" என்றாள்.

அது கேட்டு கலங்கிய இளையாள் சோமசுந்தரப் பெருமானை நினைந்து "ஐயனே தந்தை தாயாரை இழந்து தனியாளாக வந்த எனக்கு உம்மையன்றி வேறு துணை யார்? பெருமானே! மாற்றாள் நாவழி வரும் பழிவார்த்தையை நீக்கியருள்க" என்று குறையிரந்து கண்ணீர் மல்க வேண்டினாள். அன்றிரவு உணவும் உறக்கமும் இன்றி பொற்றாமரைக் குளத்தில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானது சந்நிதியடைந்து பாதம் தொழுது முறைப்பாடு வைத்தாள். "அன்று என் தலைவனை வதுவை பூண்ட இடத்தில் சாட்சியாக நின்ற தாங்களும் கிணறும் வன்னிமரமும் அவ்வகையே இங்கு வந்து மாற்றாளின் வசைமொழியை நீக்கி எம்மானத்தைக் காத்தருளாவிடில் இறந்து விடுவேன்" என்று கண்ணீர் சிந்திக் கிடந்தாள். இது நோக்கிய கூடற்பெருமான் யாவரும் காணும்படி கற்புக்கரசி சொன்ன சான்றுகள் கோயிலின் வடகீழ்த் திசையில் வந்து தங்கின. அதிசயம் கண்டெழுந்த இளையாள் மூத்தாளைக் கூவிச் சோமசுந்தரப் பெருமானைப் பணிந்து சாட்சிகளைக் காட்டி நின்றாள். கண்டின்புற்ற வணிகர் மூத்தாளைப் பழித்தனர்.

"குற்றமற்ற குணவதியைப் புறம் கூறிக் குடிக்குற்றம் புரிந்தாய்; எனவே நீ என் மனைவியாக மாட்டாய்" என்று கணவனும் மூத்தாளைத் தள்ளி விட்டான். அப்போது இளையாள் கணவனை வணங்கி "ஐயனே! இவள் எனது கற்பை நிலைநாட்டி வைத்த தாய். ஆகையால் தாயற்ற எனக்கு இவளே தாய். இனி இவளும் நானும் பிரிவின்றி வாழ்வோம்" என்று கூறி ஒருவரையொருவர் தழுவி மகிழ்ந்தனர்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

## ஆன்மிகச் சிந்தனை

மனதை ஒருமுகப்படுத்துவதன்மூலம் புலன்களையும் மனதையும் அதிலிருந்து பிரிக்க முடியும். உலகம் நமக்கு நிலையான திருப்தியைத் தரமுடியாது. எனவே இறைவன்தான் நம் எல்லோருக்கும் ஒரே புகலிடம். நிலையான இன்பம் தரும் இறைவனை அடைவதற்காக அழியக்கூடிய சுகங்களைத் தரும் இந்த உலகத்தை விட்டு விடுவோம். அடைய முடியாதது போல தோன்றினாலும் மிகவும் உயர்ந்த ஆன்மிக இலட்சியத்தை அடைவதற்காகப் பாடுபடுவதை நாம் நிறுத்திவிடக்கூடாது. நமது இலட்சியமாக இறைவனை வைத்துக் கொண்டால், அந்த இலட்சியமே நம்மை மேல்நோக்கி இழுத்துச் செல்லும்.

*துன்பத்தால் ஏற்பட்ட துயரங்களைத் தன்னம்பிக்கையே போக்கவல்லது.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

தாழ்ந்தவர்களுக்கு பிழைப்பு இல்லாமல் போகுமே என்ற பயம்.

நடுத்தரமானவர்களுக்கு இறந்து போய்விடுவோமே என்ற பயம்.

மேலானவர்களுக்கு, அவமானம் வந்து விடுமே என்ற பயம் இருக்கிறது.

உடன் தோன்றியவையும், மனதை வெளியே தவறான பாதைகளில் இழுப்பவை களுமான ஐம்புலன்களின் கூட்டத்தினால் வசம் செய்யப்பட்ட மனிதனுக்கு வளர்பிறைச் சந்திரன் வளர்வதைப் போல ஆபத்துக்கள் வளர்கின்றன. எனவே புலன்கள் போன போக்கில் போவது கூடாது.

சூரியன் முதலான கிரகங்களால், நட்சத்திரங்கள் மறைக்கப்படுவது போல; மனிதனின் அடக்கப்படாத இந்திரியங்களாலே உலகம் கஷ்டத்தை அடைகின்றது. மனித உடம்பு தேர், புத்தி தேரை ஓட்டுபவன். மனிதனுடைய இந்திரியங்கள் தேரை இழுக்கும் குதிரைகள். இந்திரியங்கள் என்னும் அந்தக் குதிரைகளை புத்தியின்மூலம் அடக்கி, ஒழுங்காகத் தேரை ஓட்டினால் மனித உடம்பு என்னும் தேர் நேரான பாதையில் செல்லும். மனிதன் சந்தோஷ மாகவும், சுகமாகவும் வாழலாம். ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் எப்படி அடங்காத குதிரைகள் தாறுமாறாக ஓடித் தேருடன் அதை ஓட்டுபவனையும் அழிக்குமோ அது போல, மனிதனை, விடயங்களில் பிழையான செயற்பாடும் புலனடக்கம் இன்மையும் அழித்துவிடும். இந்திரியங்களை அடக்காததால், அர்த்தத்தை அனர்த்தமாகவும், அனர்த்தத்தை அர்த்தமாகவும் பார்ப்பவனாகி அறிவில்லாதவன் பெரும் துக்கத்தை சுகமாக நினைக்கின்றான்.

செல்வங்களுக்கு அதிகாரியாக இருந்தாலும் இந்திரியங்களை அடக்குபவனாக இல்லாத எந்த மனிதனும் செல்வங்களை இழக்கிறான். எந்த அரசன் தன் மனதை அடக்காமல் தன் மந்திரிகளின் மனதை அடக்க விரும்புகிறானோ; மந்திரிகளை அடக்காமல் விரோதிகளை அடக்க விரும்புகிறானோ அந்த அரசனை எல்லோரும் கைவிட்டு விடுகிறார்கள். அரசன் முதலில் இந்திரியங்களோடு கூடிய தன் மனதைத் தனக்கு விரோதியாக எண்ணி மனதை வெல்ல வேண்டும். அதன் பிறகே மந்திரிகளையும் பகைவர்களையும் வெல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்கு மாறாகச் செய்ய விரும்பக்கூடாது.

இந்திரியங்களை அடக்கியவன் மந்திரிகளை வசப்படுத்தியவன், விரோதிகளுக்கு உரிய தண்டனை அளிப்பவன், எந்தக் காரியத்தையும் ஆலோசித்துச் செய்பவன் - இப்படிப்பட்ட தீரனுக்குச் செல்வம் எப்போதும் சேரும்.

மனம், புத்தி, புலன்கள் முதலியவைகளை அடக்கித் தனக்குத்தானே ஆன்மாவை அறியவேண்டும். ஆன்மாவே, ஆன்மாவுக்கு உறவு. ஆன்மாவே ஆன்மாவுக்கு விரோதி, ஆன்மாவைத் தன் வசப்படுத்திய மனிதனுக்கு ஆன்மாவே உறவாகும்.

*துயரம் மனிதனைக் கிழவனாக்கி விடுகிறது.*

பலமில்லாத வலையினால் மூடப்பட்ட, இரண்டு பெரிய மீன்கள், அந்த வலையை அறுப்பது போலக் காமமும், குரோதமும் மனிதனின் சிறந்த அறிவை நாசம் செய்கின்றன.

உலகில் அறம், பொருள் முதலானவைகளை நன்றாக அறிந்துகொண்டு, வெற்றி அடைவதற்குரிய சாதனங்களை அடைபவன் எவனோ, அவன் முழுமையான சாதனங்களைக் கொண்டிருப்பதால், எப்போதும் சுகத்தையும் மேன்மையையும் அடைகிறான்.

எந்த மனிதன் தன் உள்ளே இருக்கும் மனதின் விகாரங்களை, ஐம்புலன்கள் என்னும் பகைவனை வெல்ல விரும்புகிறானோ, அந்த மனிதன் பகைவர்களை வென்று விடுவான். பாவம் செய்பவர்களை நீக்காததால், அவர்களுடன் சேர்ந்த நல்லவர்களுக்கு தண்டனை கிடைக்கிறது. காய்ந்த விறகுடன் சேர்ந்த ஈரமான விறகும் எரிக்கப்படுகின்றதல்லவா? அது போலவே தீயவர்களை விலத்தாத நல்லவர்கள் நிலையும் அமைந்து விடும்.

தனக்குள்ளே இருந்து வெளிக் கிளம்பி ஐந்து விதமான செயல்களுக்குரிய ஐந்து பகைவர்களை - புலன்களைத் தன் வசப்படுத்தாவிடின் மனிதன் ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

பொறாமை, கொள்ளாமை, நேர்மை, தூய்மையாய் இருப்பது, மகிழ்ச்சி, இனிமையான சொல், அடக்கம், உண்மை, சஞ்சலம் இல்லாமை என்பவை தீயவர்களுக்கு உண்டாகாது. ஆத்மஞானம், துயரம் இல்லாமை, பொறுமை, தர்மத்தை நிலையாகக் கொள்வது, அடக்கமான வார்த்தை, முதலியவை தீயவர்களிடம் இருக்காது. திட்டுவதாலும் வீணாக அபவாதம் சொல்வதாலும், மூடர்கள், கல்விமான்களுக்குத் துன்பம் செய்கிறார்கள். திட்டியவன், பாவத்தை அடைகிறான். பொறுப்பவன் பாவத்தில் இருந்து விடுபடுகிறான்.

தீயவர்களுக்குப் பலம், அடுத்தவரைத் துன்புறுத்துவது.

அரசனுக்குப் பலம், தீயவர்களைத் தண்டிப்பது.

பெண்களுக்குப் பலம், கணவனுக்குப் பணிவிடை செய்வது.

குணசாலிக்குப் பலம், பொறுமை.

வாயை அடக்கிப் பேசாமல் இருப்பது மிகவும் கடினமானது என ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அர்த்தத்துடனும், அழகாகவும் அதிகம் பேசமுடியாது. இனிமையாகச் சொல்லப்பட்ட வார்த்தையானது பலவிதமான நன்மையைக் கொடுக்கிறது. அந்த வார்த்தையே கடுமையாகச் சொல்லப்பட்டால் தீய விளைவை ஏற்படுத்துகிறது. அம்புகளால் உண்டான புண் ஆறிவிடுகின்றது. கோடரியால் வெட்டப்பட்ட மரமும் துளிர்க்கிறது. ஆனால் வாக்கினால் சொல்லப்பட்ட தீய வார்த்தைகள் உண்டாக்கும் புண்ணானது என்றும் ஆறுவதே இல்லை. உடம்பிலே பட்ட அம்புகளையும், ஆயுதங்களையும் உடம்பிலிருந்து பிடுங்கி எடுக்கிறார்கள். வாக்கு என்னும் ஆயுதமோ அப்படி எடுக்கக்கூடியதாக இல்லை. அது, இதயத்தில் ஊன்றிப் போய் விடுகின்றது. வார்த்தை அம்புகளால் அடிபட்டவன் இரவு பகலாகத் துக்கப்படுகிறான். வார்த்தை அம்புகள் மனதில் மட்டுமே விழுகின்றன. கல்விமான்கள் வார்த்தை அம்புகளை அடுத்தவன்மேல் விடக்கூடாது.

தேவர்கள், எந்த மனிதனுக்குத் தண்டனை தர நினைக்கிறார்களோ, அந்த மனிதனின் புத்தியைக் கெடுக்கிறார்கள். புத்திகெட்ட அந்த மனிதன் மட்டமான காரியங்களைச் செய்கிறான்.

*நல்லதும் பொல்லாததும் நாக்கிலே உள்ளது.*

புத்தி கலங்கி நாசம் உண்டான நேரத்தில், அநீதியானது நீதிக்கும் சமமாகி அவனது மனதை விட்டு விலகுவதில்லை. அநீதியானது நீதியாகவே தோன்றும்.

"திருதராஷ்டிர மன்னா! உங்கள் பிள்ளைகளுடைய அப்படிப்பட்ட புத்தியானது, பாண்டவர்களின்மேல் விரோதத்தினால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. இவர்களை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. தர்மபுத்திரன் எல்லாச் சிறப்புக்களும் பொருந்தியவன். மூன்று உலகங்களுக்கும் அரசனாகக் கூடியவன். உங்கள் பிள்ளைகள் எல்லோரிலும் மேம்பட்டவன். வல்லமை மிகுந்தவன், சிறந்த அறிவுள்ளவன், அறம் பொருள் என்பவற்றின் உண்மையை அறிந்தவன். தர்மங்களைக் கடைப்பிடிக்கின்றவர்களில் தலை சிறந்தவன். இப்படிப்பட்ட தர்மன், இரக்கத்தினாலும், குரூரத் தன்மை இல்லாததாலும், உங்களைக் குருவாக நினைப்பதாலும் நீங்கள் செய்த இவ்வளவு கொடுமைகளையும் பொறுத்துக் கொண்டிருக்கிறான். உங்கள் சீடனான தர்மனை அரசனாக்குங்கள்" என்றார் விதுரர்.

திருதராஷ்டிரன், "மகா புத்திமானான விதுரா! இந்த உலகில், நீ விசித்திரமான விடயங்களை எல்லாம் சொல்கிறாய். கேட்கும் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. மறுபடியும், தர்மத்துடன் கூடியவற்றைச் சொல்" என்றான்.

விதுரர், "மன்னா! எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடுவது, எல்லா உயிர்களிடத்தும் ஒரே தன்மையுடன் நேர்மையாக இருப்பது, என்னும் இரண்டும் சமமாகும். பார்க்கப் போனால், நேர்மை தீர்த்தங்களில் நீராடுவதைவிடச் சிறந்தது. பாண்டவர்கள் விடயத்தில் எப்போதும் நேர்மையைக் கடைப்பிடியுங்கள். அதனால் இந்த உலகில் சிறந்த புகழை அடைந்து மரணத்திற்குப் பின் சொர்க்கத்தையும் அடைவீர்கள்."

மன்னா! "எதுவரையில் மனிதனுடைய தூய்மையான புகழ் உலகத்தில் சொல்லப்படுகிறதோ, அதுவரையில் அவன் சொர்க்கத்தில் பூஜிக்கப்படுவான். இதுபற்றி ஒரு பழைய சரித்திரத்தைச் சொல்கிறேன் கேளுங்கள்."

ஒப்பற்ற அழகு படைத்தவளான "கேசினி" என்ற இராஜகுமாரிக்குச் சுயம்வரம் ஏற்பாடாகி இருந்தது. அப்போது பிரகலாதனின் மகனும், விரோசனன் என்ற பெயர் கொண்டவனுமான அசுரனும் அந்தச் சுயம்வரத்தில் கலந்துகொள்ள வந்தான். அசுர அரசனான அவன், கேசினியின் முன்னால் இருந்த தங்கமயமான ஆசனத்தில் உட்கார முயன்றான். அப்போது கேசினி அவனிடம், "விரோசனா! அந்தணர்கள் சிறந்தவர்களா? அசுரர்கள் சிறந்தவர்களா? அந்தணர்கள் சிறந்தவர்களாக இருந்தால், "சுதன்வா" என்ற அந்தணர் இந்தத் தங்க ஆசனத்தில் ஏன் உட்காரக் கூடாது?" என்று கேட்டாள்.

விரோசனன், "கேசினி! நாங்கள் காசியப் பிரஜாபதியின் வம்சத்தில் வந்தவர்கள்; நாங்களே சிறந்தவர்கள். தேவர்களுக்கோ, வேதியர்களுக்கோ என்ன மகிமை இருக்கிறது?" என்று பதில் சொன்னான்.

இதைக் கேட்ட கேசினி, "விரோசனா! என்னை அடைவதற்காக "சுதன்வா" நாளை காலையில் இங்கு வருவார். அப்போது இதற்கு முடிவு செய்யலாம்" என்றாள். விரோசனனும் "சரி" என்றான்.

(தொடரும்...

ஆடம்பரம் அந்திவரை நிலைப்பதில்லை.

# தானே வந்து வெளிப்படும்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

எது வெளிப்படும்?

யாருக்கு வெளிப்படும்?

ஆணவ இருளில் மூழ்கிய ஆன்மாவிடம் மறைந்துள்ள துர்க்குணங்களாகிய காமம், மோகம், கோபம், லோபம், மதம், மார்ச்சாரியம் ஆகிய பகைவர்களும், தன்வழியே இழுக்கும் புலன்களாகிய ஐந்து திருடர்களும் விடுபட்டால் திருவருளாகிய ஒளிவெள்ளம் ஆன்மாவில் வெளிப்படும்.

அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நாள், மாதம், வருடம் சென்றாலும் காணமுடியாது. சில நியதிகட்கு அமைவாக நடந்தால் மரணத்தறுவாயிலும் காணலாம். ஆலயங்கட்குச் சென்று பூசையில் ஈடுபடல், தோத்திரங்களைப் பக்தியுடன் பாடல், தேவார திருவாசகம், பெரியபுராணம், கந்தபுராணம், பகவத்கீதை, முருகனின் புகழ் கூறும் கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களை மனம் ஒன்றிப் படிக்கவேண்டும், உபந்நியாசங்கள், பஜனைகளில் கலந்து கொண்டு, தியானம், நாம ஜெபங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது அலைந்து திரியும் மனம் இறைவன்பால் ஈர்க்கப்படும். இவைகள் தவிர முருகனின் அருளைப் பெற அருணகிரிநாதர் நான்கு வழிகள் கூறுகிறார்.

1. மனதை அடக்கல்
2. கோபத்தை விடல்
3. தான தருமஞ் செய்தல்
4. இருந்தபடி இருத்தல் (மௌனம்)

**1. மனதை அடக்கல்:-**

மரத்துக்கு மரம் தாவும் குரங்கு போன்ற இயல்புடையது மனம். எந்நேரமும் ஏதாவது சிந்தித்தபடியிருக்கும். மனம் பொறிவழி செல்வதால் பல துன்பங்கள் நேரிடும். அந்த மனதை அடக்கி இறை சிந்தனையில் செலுத்தினால் சுகம் உண்டு. கலங்கிய நீரில் சூரிய சந்திரரைக் காணமுடியாது. மனமும் கலங்கியபடி பிறசிந்தனையிலிருந்தால் உள்ளத்தில் இறைவனைக் காணமுடியாது. ஐம்புலனையும் அடக்கி ஏகாந்தமாயிருக்க வேண்டும்.

**2. கோபத்தை விடல்:-**

கோபம் பொல்லாதது. பாவம் தரும்; மனிதனுக்கு பகைவன்; தீய பல காரியங்களைச் செய்விக்கத் தூண்டும். ஒருவன் துன்பங்களிலிருந்து தன்னைக் காக்கவேண்டுமாயின் கோபம் கொள்ளக் கூடாது.

*எச்சரிக்கை என்பதுதான் விவேகத்தின் தலைக்குழந்தை.*

"தன்னைத் தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

-வள்ளுவர் வாய்மொழி.

கோபம் பாவத்திற்கு அஞ்சாது. கோபம் வரும்போது தன்னை மறந்த நிலை; இரத்தம் கொதிக்கும். உடல் நலம் குறையும். மகா தபஷியான விஸ்வாமித்திரரே கோபத்தால் தந்நிலை தவறியவர்.

**3. தான தருமங்கள் செய்யுங்கள்:-**

தருமம் தலை காக்கும்.
தருமம் செய்க; தவறுள பாவம். (க.பு)
தருமம் செய்வதால் புண்ணியம் ஆகும்.
ஏற்பவர்க்கிட்டது எங்காயினும் வரும்.

மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் தருமம் செய்யலாம். இவ்வுலகில் நாம் வாழும் காலம் சொற்பமே. நமக்குக் கடவுள் தந்திருக்கிறார். இல்லை நம்மிடம் அதிக பணம் பொருள் இல்லை.

"நொய்யிற் பிளவளவேனும் பகிர்ந்துண்ணுங்கள்" வறியோர்க்கு ஒன்று ஈவதே ஈகை வெய்யிலுக்கு ஒதுங்க உதவாத தன் நிழல் போல நாம் தேடிய பொருள் மரணிக்கும்போது கூட வராது. நாம் செய்த புண்ணியமே கூடவரும். "கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே". ஆதலால் தாமதியாது தான தருமங்கள் செய்க.

"யாவர்க்கும் உண்ணும்போது ஒரு கைப்பிடி. யாவர்க்குமாம் ஒரு பசுவிற்கு ஓர் வாயுறை, யாவர்க்கும் பேசும்போது ஓர் இன்னுரை" எனத் திருமூலர் சொல்வதும் தருமங்களே. அன்னதானம், வித்தியாதானம், கன்னிகாதானம், வழி வழி கால் நடைகள் நீர் அருந்தத் தொட்டிகள், சாலையோரங்களில் நிழல் தரு மரங்கள் நாட்டல், ஊர் நடுவே கிணறு குளம் தோண்டல், ஆதரவற்றோர்க்கு உணவு, உடை, ஒதுங்க இடம் தரல் இப்படியான தருமச் செயல்கள் பலவுள. வசதிக்கேற்ப யாதாயினும் ஒரு புண்ணிய காரியம் செய்யுங்கள். நாம் போகிற வழி இலகுவாகும்.

"தானமும் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறக்குமே"

-ஔவையார்.

**4. இருந்தபடி இருங்கள் (மௌனம்):-**

புலன்கள் பொறிவழி செல்லாமல், நிர்ச்சிந்தையாய் மேலான பரம்பொருளை மனதில் கொண்டு சும்மா இருத்தல். (மௌன விரதம்) சும்மா என்ற சொல்லுக்குப் பொருள் இல்லை.

"சும்மா இரு அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலேன்"

-அநுபூதி.

*நாட்டின் நன்மை கருதி வாழ்வதுதான் நாட்டுப்பற்று.*

சொல்ல முடியாது என்று எல்லாம் இழந்த நிலை. மனம், வாக்கு, இரண்டையும் இழந்து சும்மா இருக்கும் நிலை வருமாயின் பேசா அநுபூதி கிடைக்கும். ஜனகாதி முனிவர் நால்வருக்கு கல்லால விருட்சத்தின்கீழ் மனம் வாக்குக் கடந்து பரிபூரணமாய், வேதங்களுக்கு அப்பாலாய், எல்லாமாய் அல்லவுமாய் இருந்தபடி இருந்து சின்முத்திரை காட்டி சொல்லாமல் சொல்லிய நிலையை நாம் அனுபவித்தாற்தான் உணரமுடியும்.

மேற்கூறிய நான்கு உபாயங்களின்படி மனதைத் தீயவழிகளில் செல்லவிடாது தடுத்தும், சிறிதேனும் கோபம் கொள்ளாமல், இயன்றளவு தான தருமங்கள் செய்து, மனம் வாக்காகிய திரிகரணங்களும் அடங்கி சும்மா இருக்கும் நிலை (மௌனம்) வருமாயின் முருகப் பெருமானின் அருள் தானே வந்து வெளிப்படும்.

"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படிஇருங் கோள்எழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்க வைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

-கந்தரலங்காரம்.



(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! 27.03.2015 இரவு 8.30க்கு வழமைபோல சந்நிதியான் ஆச்சிரமத்தில் இரவுச் சாப்பாட்டை முடித்து மலையகத்திற்கான பயணம் ஆரம்பமாகியது. இம்முறை சைவ மகா சபையினரும் தங்கள் பங்களிப்பாக கற்றலுக்குரிய கொப்பிகள், கணித உபகரணங்களுடன் 23 உறுப்பினர்கள் எங்களுடன் சேர்ந்து எமது பேருந்தில் வழமையான வழித்தடத்தினூடாக செல்கிறோம். மாங்குளம், ஓமந்தை, வவுனியா ஆகிய இடங்களில் நான்கு பேருமாக மொத்தம் 27 பேருடன் பயணந் தொடர்கிறது. இவர்களில் சைவ மகா சபையினர் சைவ மங்கையர் கழக இரு பெண்களும் அடங்குவர். 28.02 சனி அதிகாலை 6.30 மணியளவில் பதுளை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலய தங்குமிடத்தினை அடைந்தோம். அங்கு காலைக் கடன்களை முடித்து பதுளை மகளிர் இல்லத்திற்கான உதவிப் பொருட்களை வழங்குமுகமாகச் சென்றோம். அவர்களுக்குரிய பொருட்களை (பழவகைகள் உட்பட) வழங்கியபின் அவர்களின் அன்பான உபசரிப்பில் காலை உணவினை நிறைவு செய்தபின் தெமோதரை சௌதம் தமிழ் வித்தியாலயத்திற்குச் செல்வதற்காகப் புறப்படுகிறோம்.

அங்கே மாணவர்களும் ஆசிரியர்களுமாக எங்களை வரவேற்பதற்காக ஆவலுடன் காத்திருந்தனர். நேரம் 9.30 மணி. இன்று சனிக்கிழமை விடுமுறை தினமாக இருந்த பொழுதிலும் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் வந்திருந்து வரவேற்றது எமக்கு பெரு உற்சாகத்தையும் மனநிறைவையுந் தந்தது. முதலிலே அவர்கள் எங்களைத் தமது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். போகும்பொழுது அவர்களது பாடசாலையின் ஒழுங்கமைப்புக்களைக் காண முடிந்தது. சூழல் வெகு துப்பரவாகவும் தற்பொழுதைய 55 நடைமுறைகளைப் பின்பற்றி காட்சிப்படுத்தல் வழிகாட்டிகள் பெயர்ப் பதாதைகள் என்பன நேர்த்தியாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. அலுவலகத்தினுள் பிரவேசிக்குமுன் ஒரு வரவேற்பறையினுள் எம்மை அமர்த்தினர். அதிபர் அலுவலகம் மிக நேர்த்தியாக எமது பாடசாலைகளை விஞ்சும் வண்ணமாக ஆளணித் தரவுகள் பௌதிகவளத் தரவும் கற்றல் கற்பித்தல் அடைவுமட்டக் காட்சிப்படுத்தல்கள் மிக அற்புதமாக இருந்தன. ஓர் அதிபர் என்ற வகையில் எம்மால் அதனை உணரப்பட்டதுடன் அடைவு மட்டம்கூட அவர்களது அங்குள்ள சூழ்நிலைகளில் மிகவும் பாராட்டத்தக்கதாகவே இருந்ததனை வாசகர்களுடன் பகிர்கின்றேன்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள் எல்லோருஞ் சேர்ந்து எம்மை அலுவலகத்தில் அமர்த்தி அன்பாக உபசரித்ததுடன் அவர்களால் வழங்கப்பட்ட தேனீர் விருந்துபசாரத்தின் பின் எம்மை அவர்களது பிரார்த்தனை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். மிக நேர்த்தியான வசதியான மண்டபம். மண்டபம் நிறைந்த ஆசிரிய மாணவர், பெற்றோர் கூட்டத்துடன் விழா ஆரம்பமானது. இறை வணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் ஆரம்பமானது. மிக அற்புதமான ஆனந்தமான

*தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.*

வரவேற்புப் பாடலாக அமைந்ததுடன் பிள்ளைகளின் அபிநய முகபாவம் கைதேர்ந்த நாட்டிய தாரகைகள்போல அச்சிறுமிகள் ஆற்றுகையை நிறைவு செய்தமை முத்திரை பதித்த நிகழ்வாகியது. நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பதற்காக ஓர் ஆசிரியர் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தார்.

அதிபர் தமது உரையை நிகழ்த்தினார். நாம் பார்த்த பாடசாலைத் தரவுகளிற்கு மேலாக அவர் சில கருத்துக்களை முன் வைத்தார். அவரது பேச்சில் பிள்ளைகளின் வறுமைச் சூழல், பெற்றோரின் அக்கறையின்மை, பிள்ளைகள் கற்றலுக்கான வீட்டுச் சூழல், வசதியற்றிருத்தல் என்பன எம் மனங்களில் இவர்களது கற்றல் கற்பித்தலுக்கு உதவவேண்டிய கட்டாயத் தேவையை உணர்த்தியது. மிகவும் துடிப்பான பாடசாலையைக் கட்டியெழுப்ப வேண்டிய ஊக்கத்துடன் தொழிற்படுவதையும் உணரமுடிந்ததுடன் அதிபரைத் தொடர்ந்து பேசிய ஆசிரியர், இந்த அதிபர் வந்த பிற்பாடு ஏற்பட்ட பௌதிக, கற்றல் மேம்பாட்டு வளர்ச்சிகளைத் தகுந்த புள்ளிவிபரங்களுடன் குறிப்பிட்டிருந்தார். இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் ஒரு மாணவனின் பேச்சு எமது மனங்களைத் தொட்டு கண்களைப் பனிக்க வைத்தமையும் நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். இம் மாணவன் மலையக வலய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றமையும் பாராட்டத்தக்கது.

இதனைத் தொடர்ந்து பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு ஆரம்பமானது. ஒவ்வொரு பிள்ளைக்கும் 120 பக்க ஐந்து கொப்பிகளும் ஒரு நட்ராஜ் கணித உபகரண உலோகப் பெட்டியும் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்ல, ஒவ்வொரு கொப்பிகளின் முன் அட்டையும் சைவ மகா சபையினரின் முத்திரையுடன் சிவன் பார்வதி பிள்ளையார், முருகன் குடும்ப படந்தாங்கியிருந்துடன், வடக்கு கிழக்கு மலையக கிராமங்களில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு கைகொடுப்பதன் ஊடாக வளமான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவோம் என்ற மகுட வாசகத்தைத் தாங்கியதாகவும் பின் அட்டையில் வறிய மாணவப் பிள்ளைகளின் படத்துடன் "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை" என்ற திருமந்திரத்தைத் தாங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர்களது நிகழ்வுகளின்பின் எமது கருத்துப் பரிமாறும் நிகழ்வு நடைபெற்றது.

இவர்களது நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே எனது மனதில் இவர்களின் நடவடிக்கைகளைப் பாராட்ட வேண்டும் என்ற ஓர் எண்ணம் உதித்ததால் அவர்களிடமே ஓர் தாள் வாங்கி எனது மனக் கருத்தைப் பாடலாக்கி எழுதினேன். எனவே அதனை ஓர் இராக மாலிகையில் சமர்ப்பிக்கும் வாய்ப்பும் கிட்டியது. அதிபர், ஆசிரியர், மாணவர்கள், சபையோர் அனைவரும் மெய் மறந்து ரசித்துத் தங்களைத் தாங்களே உணர்ந்து கொண்டதுடன் அதிபரின் மேன்மையையும் உணர்ந்தனர். அதனை வீடியோ பதிவும் செய்தும் தம்வசம் வைத்திருக்கின்றனர். நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

ஆம்! அங்கு நடைபெற்ற நிகழ்வுகள் இதுவரை நாம் மலையகப் பாடசாலைகளில் பெற்ற அனுபவங்களிலிருந்து மாறுபட்டவையாக அமைந்திருந்ததுடன் மலைகளை உடைத்து ஓர் அழகான விளையாட்டிடத்தோடு கூடிய விஞ்ஞானகூடத் தொகுதியையும் அமைத்திருந்தனர். அதுவும் எம்மை வெகுவாகக் கவர்ந்தது. அவர்களின் அன்பு உபசரிப்பினைத் தொடர்ந்து றொசாட் தமிழ் வித்தியாலயத்தை நோக்கி எமது பயணந் தொடர்ந்தது.

(தொடரும்....

*கொடுக்கும்போது கனிவு இருத்தல் வேண்டும்.*

# யாழ்ப்பாணத்திலே நமக்குக் கிடைத்த முத்துக்களில் ஒன்று யோகர் சுவாமி அதுவும் விலைமதிப்பற்ற முத்து

– செல்வதியம்மா அவர்கள் –

மகிமை பொருந்திய மாவிட்டபுரத்திலே அம்பலவாணர் - சின்னாச்சியம்மை என்போரின் தவப்புதல்வனாக வைகாசி மாதம் 29ஆம் திகதி 1872ஆம் ஆண்டு அவிட்ட நட்சத்திர நாலாம் பாதத்திலே திங்கட்கிழமை காலையிலே இவ்வுலகிலே ஜனனமானார். ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே ஜனனித்த இவரது இயற்பெயர் சதாசிவம் என்பதாகும். இள வயதிலேயே தாயாரை இழந்து விட்டதால் தனது தாயாரின் சகோதரி முத்துப்பிள்ளை அம்மையாரால் வளர்க்கப்பட்டார்.

கொழும்புத்துறையிலே கத்தோலிக்க பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும் சம்பத்தரிசியார் கல்லூரியில் மேற்படிப்பும் பயின்ற இவர் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியக் காப்பாளராகப் பணியில் இணைந்து இரணைமடுக் குளத்திட்டத்தில் பணி புரிந்தார்.

பின்னர் எவற்றிலுமே விருப்பற்று மீண்டும் யாழ்ப்பாணத்திற்கே திரும்பிவிட்டார். அவரை எல்லோரும் ஒரு பைத்தியக்காரனாகவே நினைத்தனர். ஆனால் சித்தம் கடந்தவர்களின் நிலை இதுதான் என்பது பின் நாட்களிலேயே புரிந்தது. யோகர் சுவாமிகளுக்கு 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சுவாமி விவேகானந்தரது தரிசனம் கிடைத்தது. அப்போது சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வருகை தந்து உரையாற்றினார். இதுபற்றி பெருமிதமாக யோகர் சுவாமி பின் நாட்களில் கூறியதாகப் பதிவு.

இப் பெருமகனார் 1905ஆம் ஆண்டில் நல்லூர்த் தேரடியில் முதன் முதலாக செல்லப்பா சுவாமிகளைக் கண்டார். இவரைக் கண்டவுடன் செல்லப்பா சுவாமிகள் கேட்ட கேள்வி "யாரடா நீ" "ஒரு பொல்லாப்பும் இல்லையோ" என்றார் செல்லப்பா. சுவாமிகளினால் வசீகரிக் கப்பட்ட இவர் அவரைத் தனது குருவாக நினைந்து உருகி வணங்கினார். ஆனால் செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமியை ஏசுவார், கலைப்பார், அடிப்பார், தனது சீடனாக அனைத்துத் தகுதியும் இருக்கின்றதா எனப் பரிசீலித்தார்போலும். ஆனால் யோகர் சுவாமிகள் எதற்கும் தளரவில்லை. மீண்டும், மீண்டும் செல்லப்பா சுவாமிகளை நாடி வந்துகொண்டே தான் இருந்தார். பின் ஒருவழியாக சீடனாக ஏற்று சன்னியாச தீட்சையினையும் அளித்தார். ஒரு நாள் செல்லப்பா சுவாமிகள் கதிரவேலு என்பவரையும் யோகர் சுவாமியையும் எழுப்பி கலைத்து விட்டார். இரு யானைகள் ஒரு தறியில் கட்டப்படக்கூடாது என்றார். அப்போது பல்லு விளக்கிய குச்சியுடன் பொடி நடையாக நடந்து சென்று கதிர்காமத்தை அடைந்தவர் இது அவரது முதல் யாத்திரை இதன்போது பல இன்னல்களை அடைந்ததாக அவரே எழுதியிருந்தார்.

செல்லப்பா சுவாமிகள் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது யோகர் சுவாமிகள் காணச் சென்றார். "நில் அங்கே எதைப் பார்க்க வந்தாய் உன்னைச் சிந்தித்துப் பார்" என்றார். உடனே திரும்பி விட்டார்.

சுவாமிகள் சாதாரணமாக ஒரு கொட்டிலில்தான் தங்கியிருந்தார்.

சேர். துரைசுவாமி அவர்களது அனுபவப் பகிர்விலே இதுபற்றி அற்புதமாகக் கூறுகின்றார். அப்போது இவர் அரசாங்க சபைத் தலைவராக இருந்த காலம். 2ஆவது எலிசபெத் மகாராணியின் முடிசூட்டுவிழா அழைப்பு. அதனால் துரைசுவாமி அவர்களுக்கு சுகவீனம் எழுந்து நிற்கமுடியாத நிலை. சுவாமி வேலுப்பிள்ளையிடம் மருந்து வாங்கி வரச்செய்து தான் அவித்துக் குடித்தார். கடுமையான வாந்தி, வயிற்றுப்போக்கு. வேலுப்பிள்ளை அழுதார். சுவாமிகள் உப்புச் சோடாவும், எலுமிச்சம் பழமும் வாங்கிவரச் செய்து குடித்தார். பின் சொன்னார் துரைசாமி லண்டன் போகலாம் என்று அங்கேதான் சேர் பட்டம் பெற்றதாகக் கூறியமை எம்மைச் சிந்திக்க வைக்கிறது.

யோகர் சுவாமிகளுக்கு தேவாரப் பாராயணம் செய்வதில் அபார பிரியம். தனது கொட்டிலுக்கு வருபவர்களுக்கு சிவபுராணம் ஓதக் கற்றுக்கொடுத்தார். திரு துரையப்பா அவர்கள் பண்ணுடன் பதிகங்கள் பாடுவார். அப்போதுதான் தியான உச்சிக்கே சென்று விடுவேன் என யோகர் சுவாமிகள் சொல்லுவார். விவசாய விருத்தியினையும் மேற்கொண்டார். மது விலக்கினையும் கண்டித்தார்.

க.கி. நடராசன் அவர்களின் பத்திரிகை ஒன்று ஆரம்பிக்க யோகர் சுவாமியிடம் என்ன பெயர் வைக்க எனக் கேட்டாராம். ஆனால் பதில் கூறவில்லை. போய்விட்டார். மறுநாள் வந்து தொடங்கி விட்டாய் கவனமாய் நடத்து என்று கூறி சிவதொண்டன் என்று பெயரிடு என்றார். அதன்படியே இவ்விதழும் இயங்கியது.

நாயன்மார்கள் குறித்து பல பாடல்களைப் பாடியுள்ளார்கள். இங்கே திருவடிச் சிறப்புப் பற்றி அழகாகக் கூறுகின்றார்.

சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தினை அமைத்துப் பல கைங்கரியங்களை முன்னெடுத்தார். ஊரூராகச் சென்று அன்பர்களைக் காண்பது அவர்கள் வீட்டில் உண்பது என்பது யோகர் சுவாமியின் வழமை. எளிமையான தோற்றம். ஞானமே உருவான நிலை. இந்த உலகிற்கு அருள்மொழிகளை அருளிய உத்தமர்.

சுவாமிகளது நேரடிச் சீடர்களாக மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமி, செல்லத்துரை சுவாமி என்போர். 162ஆவது நந்திநாத பரம்பரை சற்குருவாக அமைந்த சிவாய் சுப்பிரமணிய சுவாமிகளும் யோகர் சுவாமியினது சீடரே. இவர்களைவிட கௌரிபாலா, பரிநரிக்குட்டி சுவாமி என்போரைக் கூறலாம். இவர்களை விட இன்னும் ஏராளமான பக்தர்கள் சுவாமிகளுக்கு இருந்தனர்.

1964ஆம் ஆண்டிலே பங்குனி மாதம் மாலை 3.30 மணியளவில் யோகர் சுவாமிகள் 91ஆவது வயது யாழ்ப்பாண சிவதொண்டன் நிலையத்தே சிவனோடு ஐக்கியமுற்றார். அங்கு அவர் இன்றும் அருளாசி புரிந்துகொண்டிருக்கிறார்.

*விலை உயர்ந்த பொருள் ஆசையின்மை.*

(கட்டுரைத்தொடர் - 19

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் வான்மீகர்

பழங்காலத்துப் பதினெண் சித்தர்களிலே வான்மீகரும் ஒருவராகக் கருதப்படுகிறார். தமிழிலே வான்மீகர் பெயரால் வழங்கப்படும் வைத்திய நூல்கள் பல காணப்படுகின்றன. இராமாயணம் பாடிய வான்மீகி முனிவர், முதற்சங்கப் புலவராயிருந்த வான்மீகியார், புறநானூற்றுப் பாடல் ஆசிரியராகிய வான்மீகியார் சித்தர்களில் ஒருவராகக் கொள்ளப்படும் வான்மீகியார் ஆகிய நால்வரும் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவருடைய பாடல்கள் சித்தர்களின் பாடல்களுக்கு ஒரு திறவுகோல் போல அமைந்துள்ளது. புத்தர் கூறிய விபாசன தியான முறையுடன் இவருடைய பாடல்கள் ஒத்துப்போவதைக் காணக் கூடியதாக உள்ளது.

மனிதனை மனிதனாக்குவதற்குச் சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றியமையாதவையாக உள்ளன. அந்தப் பயிற்சிகளை மனித சமுதாயத்திற்கு வழங்கி மனிதர்களைப் புனிதர்களாக்கிப் பின் அவர்களை வானவர்களாக உயர்த்துகின்ற உயர்ந்த நோக்கிலே எழுந்த பேரிலக்கியங்களாகவே தமிழ் மொழியில் உள்ள சித்தர் பாடல்கள் காணப்படுகின்றன. சித்தர் இலக்கியங்கள் மனித யாக்கையில் வாழுகின்ற மாக்களை மனிதப் பண்புள்ள மக்களாக மாற்றி, பின்னர் அவர்களுக்கு அமரநிலை தரவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் எழுந்தவையாகும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற திருமூலருடைய பாடல் வரிகள் இந்த உண்மையைத் தெளிவாக விளக்குகிறது.

சித்தர்களுடைய பாடல்கள் சித்தர்கள் வழங்கியுள்ள பிற அறிவியல் விளக்கங்கள், சித்தர்களின் அறிவியல் உரைகள் ஆகிய அனைத்துமே மனிதனிடம் உள்ள தெய்வீகத்தை மலரச் செய்யும் நோக்குடன் எழுந்தவையே ஆகும். மனித உடம்பிலே தெய்வ பக்தியின் துணையுடன் அருட் சக்தியை வளர்த்து, ஆன்ம பரிணாமத்தில் மக்களிடையே வானவர் களாகவும், மனித தெய்வங்களாகவும் உலவி அருள் வாழ்வு வாழ்ந்து அருளை வழங்கி வருகிற பெரியோர்களே, மகான்களே சித்தர்கள் ஆவார்கள்.

யோக சமாதியை உகந்தவர் யாரோ அவரே சித்தர் என்று வரையறை செய்கிறார் திருமூலர். இந்த உடம்பிலே தெய்வ சக்தியைக் கலந்து கூடுகிற தவயோகமே சித்தர்களுடைய தவநெறியாகும் என்கிறார். மனித உடம்பும், மனித வாழ்வுமே தெய்வத்தைக் காணுவதற்குரிய ஒப்பற்ற சாதனங்கள் என்பது திருமூலரின் சிந்தனையாகும். இந்த உடற் கோயிலைப் பக்குவமாகப் பாதுகாத்து இறைவனுக்குரிய இடமாகப் பரிசுத்த நிலையில் பேணி, யோக சமாதி உகந்தவர்களே மெய்யான சித்தர்கள். அவர்கள் பெற்றுள்ள தெய்வீக ஆற்றல்கள் உலகையே உய்விக்கின்ற பெரிய ஆற்றல்கள் ஆகும்.

*மனதை ஒருநிலைப்படுத்துதலே வெற்றிக்கு அடிப்படை.*

யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே.

எனத் திருமந்திரம் இதனைக் குறிப்பிடுகிறது.

சிந்தை தெளிந்திருப்பவன் சித்தன். தன் உடம்பில் இறைவனைக் கண்டதால் தானே சிவமாகியிருப்பவன். அவன் செகமெல்லாம் சிவன் என்று அறிந்திருப்பவன் "நீயே அதுவாக இருக்கிறாய்" (தத்வமஸி) என்ற உபநிடத மகாவாக்கியத்தின் பொருளை உணர்ந்தவன் எனச் சித்தர்களின் தன்மையை வான்மீகர் தனது பாடலின் ஊடாக விளக்குகிறார்.

மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி உலகில் பலர் வயிறு வளர்ப்பதற்காகப் பல வேடங்களைப் போடுவார்கள். சிவ சின்னங்களைக் கவசமாக அணிந்துகொண்டு மக்களை ஏமாற்றுவார்கள். தனக்குத்தானே பட்டம் சூட்டுவார்கள். மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைப் போதிப்பதற்காக வந்த ஞானகுரு தானே என்பார்கள். மக்களுக்குத் தீட்சை செய்கிறேன் என்பார்கள். இறைவனின் பிரதிநிதியாகவே தான் வந்திருக்கிறேன் என்பார்கள். காடெல்லாம் சுற்றித் திரிவார்கள். எல்லாவற்றிற்கும் மூலமாக உள்ள இறைவனை அறியாமல் இறைவனின் நாமத்தை வாயால் உச்சரிப்பார்கள். இவர்கள் மிகக் கீழ்மையான கசடர்கள் ஆவார்கள் என்று வான்மீகியார் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

சுற்றுவார் பெரு நூலைப் பார்த்துப் பார்த்துத்
துடிப்பா ருலகத்தில் சிற்சில் லோர்கள்
தெற்றுவாரவர் பிழைக்க அனேக வேடம்
தேகத்திலணிந்து கொண்டு திரிகுவார்கள்
பற்றுவார் குருக்களென்பார் சீடரென்பார்
பையவே தீட்சை வைப்பார் தீமையென்பார்
கத்துவார் திரிமூர்த்தி தாமேயென்று
காரணத்தை யறியாத கசடர்தானே.

வால்மீகர் ஞானம் என்ற இவர் அருளிய நூலில் சித்தன் யார் என்பதற்கான விளக்கத்தைத் தந்துள்ளார். நிச்சல சித்தம் பெற்றவனே சித்தன். உலகம் முழுமையினையும் சிவமாகக் காணும் அகண்ட வியாபக ஞானம் பெற்றவனே சித்தன் என்பது வால்மீகரின் கருத்தாகும்.

"சிந்தை தெளிந்திருப்பவன் ஆர்? அவனே சித்தன்!
செகம் எல்லாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன்"

எனச் சித்தர்களின் தன்மையை வான்மீகர் தனது பாடலில் விளக்குகின்றார்.

வாலைச் சாமி என்னும் சித்தர்
"ஏகப் பெருவெளி பட்டணமாம் - அதில்
எவனோ சித்தன் ஒருவன் உண்டாம்"

என்று சித்தர் முடிவாக அடையும் பெரும் பதத்தினைக் கூறியுள்ளார். பெருவெளி, வெட்டவெளி என்ற பரம சத்தியத்தினை அடைந்தவனே சித்தன் என்பது இவருடைய கருத்தாகும். சும்மா இருத்தல் எனப்படும் ஞான வரம்பாகிய மோன நிலையினை அடைந்தவரே

சித்தர் என அகத்தியர் கூறுகின்றார். மாயையின் காரியமாகிய காமம், வெகுளி, மயக்கம் என்ற மூவகைக் குற்றங்களையும் நீங்கியவரே சித்தர் என்று இயம்புகின்றார். வேடதாரிகளையும், போலிச் சித்தர்களையும் சித்தபுருஷர்கள் தமது பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

உள்ளம் உருகிச் செய்ய வேண்டிய பக்திநெறி காலப்போக்கில் வியாபார மயமாக, வெற்றுப் புறச் சடங்குகளின் புகலிடமாக மாறிவிட்டது. பொருள் பறிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் சடங்குகள் ஏற்பட்டன. காலம் செல்லச் செல்ல சடங்குகளின் எண்ணிக்கை கூடியது. இறைவனைத் திரைபோட்டு மறைத்து எப்போது திரை விலகும் என்று பக்தனை ஏங்க விட்டனர். உணர்வால் அணுக்கமான ஏழை பக்தர்கள் தூரத்தே நிறுத்தப்பட்டனர். பணமும் பகட்டும் பதவியும் உள்ளவர்கள் ஆலயத்தில் இறைவன் உருவிடம் அருகே அழைக்கப்பட்டனர். பக்தியை உதறிவிட்டுப் பணத்திற்கு முதன்மை தந்த இடைத் தரகர்கள் அன்பையும், பக்தியையும் குப்பைகளாக்கி ஆலயத்தின் ஒதுக்குப் புறத்தில் தள்ளினர். பணமும் பதவியும் உள்ளவர்களை ஆலயத்தின் அந்தப்புரம் வரை அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு சமயம் என்ற போர்வையில் நடமாடித் திரியும் வேடதாரிகளைச் சித்தர்கள் சாடினார்கள். ஆணவம் பிடித்த சிலர் சடை வளர்த்துக் காவி கட்டி உருத்திராக்க மாலைகளை ஒன்றுக்குப் பலவாக அடுக்கிக் கொண்டு தங்களைச் சிவனடியார்களாகக் காட்டிச் சாதாரண மக்களை ஏமாற்றுவார்கள். உடம்பு முழுவதும் வெண்ணீற்றைப் பூசி தாங்கள் சிவயோகிகள், சிவஞானிகள் என்று கூறிக்கொள்வார்கள். சிவபூசை செய்கின்றோம்; சிவதீட்சை செய்து வைப்போம் என்பார்கள்; திருமாலாகிய கடவுளைக் கண்ணால் கண்டோம் என்பார்கள். உண்மைக் காரணத்தை அறியாமல் இவர்கள் இப்படிக் கதறித் திரிவார்கள் என்று வேட தாரிகளை வான்மீகர் தனது பின்வரும் பாடலின் ஊடாகச் சாடுகின்றார்.

தான் என்ற உலகத்தில் சிறிது பேர்கள்
சடை புலித்தோல் காஷாயம் வடங்கள் பூண்டு
ஊன் என்ற உடம்பெல்லாம் சாம்பல்பூசி
உலகத்தில் யோகி என்பார்; ஞானி என்பார்
தேன் என்ற சிவபூசை தீட்சை என்பார்;
திருமாலைக் கண்ணாலே கண்டோம் என்பார்;
கான் என்ற காட்டுக்குள் அலைவார் தேடி
காரணத்தை அறியாமல் கதறுவாரே.

இத்தகைய வேடதாரிகளின் பேச்சையும் நம்பாமல், மூட நம்பிக்கைகளை வளர்க்கும் புராணக் கதைகளையும் ஏற்காமல் தள்ள வேண்டும் என்பது சித்த புருஷராகிய வான்மீகரின் கருத்தாகும். மூச்சைத் தன்வசப்படுத்தி யோக நிலையில் வாழத் தெரியாதவர்கள் வெறும் சண்டிகள். வீண் வார்த்தைகளால் பிறரை மயங்கச் செய்வார்கள். புருவ மத்தியிலே சிவ ஒளியைக் காண்பவர்களே தெய்வத் தன்மை பெறுவார்கள். நான்முகன், திருமால், சிவன் என்னும் மும்மூர்த்தியும் சேர்ந்த ஒரு மூர்த்தியாக நிற்பர். படைத்துக் காத்து அழிக்கும் ஆற்றல் பெற்றிருப்பர். ஆதலால் யோக மார்க்கத்தில் நின்று சித்தி பெறுங்கள் என்று வான்மீகர் தனது பின்வரும் பாடலிலே குறிப்பிடுகின்றார்.

வாசிதனை அறியாத சண்டி மாக்கள்
வார்த்தையினால் மருட்டி வைப்பார்;
நாசி நுனி தனி நடுவில் சிவத்தைக் கண்டோர்
நான்முகனும் திருமாலும் சிவனும் தாமே.

பெரும்பாலான சித்தர்கள் தியான யோகப் பயிற்சியையே கடைப்பிடித்தார்கள். ஆனால் சாதாரண பொது மக்கள் ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்காக தங்கள் நூல்களிலே நான்கு வகையான வழிபாட்டு முறைகளைக் கூறியுள்ளார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன அவை ஆகும். திருமூலர் தமது திருமந்திரத்திலே இந்த நான்கு நெறிகளையும் வரையறை செய்து அவற்றுக்குரிய இலக்கணங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். தொண்டு நெறியாகிய சரியை நெறியைத் தாசமார்க்கம் என்றும், நன்மகவு நெறியாகிய கிரியை நெறியைச் சற்புத்திர மார்க்கம் என்றும், நட்பு நெறியாகிய யோக நெறியைச் சகமார்க்கம் என்றும், பேரறிவு நெறியாகிய ஞான மார்க்கத்தைச் சன்மார்க்கம் என்றும் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

ஆலய வழிபாடு, சிவாலயத் தொண்டு செய்யும் சரியை வழியில் நிற்போர் பக்தர்கள் ஆவார்கள். சிவ சாதனங்கள் அணிந்து சிவவேடம் தாங்கிச் சிவபூசை செய்து வழிபடுவோர் கிரியை நெறியில் நிற்பவர்கள். இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புக்களை உணர்ந்து அவ்வழியில் நிற்போர் யோகியர் ஆவர். சீவன் முத்தர்களாகிய சித்தர்கள் சிவத்தைத் தம்மிற்கண்டு அதனுடன் ஒன்றி நிற்பார்கள். இவர்கள் ஞானிகள் என்று அழைக்கப்படுவார்கள்.

பக்தர் சரியை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத்து ஆகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்று எய்துவோர்களே.

எனச் சைவ நாற்பாத நெறியில் நிற்போரைத் திருமந்திரம் விளக்குகிறது.

வழிபாட்டு நெறிகள் வெறும் நடிப்பாக மாறக்கூடாது. திரிகரண சுத்தியுடன் செய்யப்படல் வேண்டும். இறைவன் சந்நிதானத்தில் செய்யப்படுவன எல்லாம் தொண்டாகவே இருக்கவேண்டும். பலன் கருதிச் செய்வன யாவும் தொழிலாகவே மாறிவிடும். மனமும், சினமும் அடங்கிய நிலையில் செய்யப்படும் செயல்களாலேயே இறை அருளைப் பெற முடியும்.

சைவ நாற்பாத நெறியில் ஒன்றில் நின்று இறையருளைப் பெற முயற்சிக்கின்றோம் எனப் பலர் கூறிச் செயற்படுகின்றார்கள். அவர்களுடைய செயற்பாடுகளில் உளப் பக்குவமும் இல்லை; உறுதிப்பாடும் இல்லை. வெறும் வெளி வேஷமாகவே, நடிப்பாகவே எல்லாம் நடைபெறுகிறது. பெரிய நூல்களைக் கற்றவர்கள் பலர் தாங்கள் செய்வதையெல்லாம் சரியைத் தொண்டு என்று சொல்வார்கள். கல்லாலானவற்றையும், செம்பாலானவற்றையும் தெய்வமென்று மனம் உருகிப் பாடுவார்கள், பூசிப்பார்கள். அதனைக் கிரியை என்பார்கள். யோகம் செய்கிறேன் என்று பழங்களை உண்பார்கள். மௌன விரதம் என்று பேசாமலிருப் பார்கள். ஞானம் அடைந்தேன் என்று மிருகம்போல ஊர்களைச் சுற்றி வருவார்கள். இவ்வாறு மனப்பக்குவம் இல்லாது செய்யப்படும் வழிபாட்டு நெறிகளை வான்மீகர் கண்டிக்கிறார்.

*உயர்ந்த நோக்கங்கள் உயர்ந்த உள்ளங்களை அடைகின்றன.*

ஆமப்பாவுலகத்தில் பெருநூல் பார்த்தோர்
அவரவர் கண்டதையெல்லாம் சரிதையென்பார்
ஓமப்பா கல்செம்பைத் தெய்வமென்றே
உருகுவார் பூசிப்பார் கிரியையென்பார்
வாமப்பா யோகமென்று கனிகாய் தின்று
வாய்பேசா வூமையைப் போல் திரிகுவார்கள்
காமப்பா ஞானமென விண்டு மேலும்
காக்கைப் பித்தன் மிருகம் போலச் சுற்றுவாரே.

சிவானந்த அனுபவத்தை அகத்திலே கண்டு அனுபவித்தல் வேண்டும். முகத்தில் அமையப்பெற்றுள்ள இரண்டு கண்களால் இறைவனைக் கண்டறிய முடியாது. நமது உடம்பில் உள்ள ஊனக் கண்களுக்கு இறைவன் அகப்படமாட்டான். ஞானக் கண்கொண்டு அவனைக் கண்டறிய முயல வேண்டும். உள்முகமாகப் பார்வையைச் செலுத்தி உணர்வு நிலையில் தரிசனம் செய்வதுதான் ஞானானந்தம். அறிவுக் கண்கொண்டு இறைவனைக் காண்பதுதான் உண்மையான சிவானந்தமாகும்.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்
அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்"

என்றே திருமந்திரம் குறிப்பிடுகிறது.

(தொடரும்...

## பட்டதெல்லாம் போதும் இனிநீயே துணைமுருகா

அறியாத செயல் பலதில் இறங்கி - முருகா
அவமானப் பட்டதினிப் போதும் போதும்.

குறியாக உனைப் பற்றிக் கொண்டேனே, வேல் முருகா
குமரேசா எமைஆள வாரும் வாரும்

தவியாது தவித்தேனே அப்போது அப்போது
தமிழ் குருவே மயிலழகா பாரும் பாரும்

கவிபாடி உனைத் துதித்தேனே நாளும் நாளும்
சிலை வடிவான குருவே வினை தீரும் தீரும்.

-சி. தனபாலசிங்கம்-

*திறமையும் அவசியமும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் வாழ்கின்றன.*

# கடவுளும் நானும்


– திரு மு. கணபதிப்பிள்ளை (மூணாக்காணா) அவர்கள் –

மண்ணிலே தான்பிறந்த மனிதர் படுந்துயரம்
எண்ணியே நான்வருந்தி இதற்கென்ன காரணமோ?
என்று நினைத்து இறைவனிடம் கேட்பமென்று
சென்றேன் திருலோகம் தெய்வத்தைக் கண்டு விட்டேன்.
ஆழ்ந்த அமைதியுடன் ஆண்டவனார் வீற்றிருந்தார்.
ஆண்டவனே! என்மனதில் ஐயமொன்று உள்ளதென
காண்டீபம் போல் வளைந்து கையெடுத்துக் கும்பிட்டேன்.
விண்ணில் இருந்து எங்கள் வேதனையைப் பார்ப்பதற்கோ
மண்ணில் எமைப் படைத்தாய் மனிதர் படுந்துயரம்
என்ன வென்று சொல்லி எடுத்துரைப்பேன் உங்களிடம்
சொன்னால் கண்ணீர் சொரியும் தூயவரே உங்களுக்கும்
அன்னை இலாப் பிள்ளைகள் போல் அழுது தவிக்கின்றோம்.
பஞ்சம் பசிகளவு பட்டினியும் பொய் கொலையும்
மிஞ்சும் புதுநோய்கள் வேதனைகள் சோதனைகள்
சூறாவளி வெள்ளம் சுனாமியோடு மண்சரிவு
ஆறாத வெப்பம் அனர்த்தம் நில நடுக்கம்
உயிரிழப்போ பல இலட்சம் உடைமைகளோ பல கோடி
மயிரிழையில் நான் தப்பி வந்து இங்கே நிற்கின்றேன்.
எம்மை இந்தத் துன்பங்கள் ஏன் வருத்துகின்ற தென்று
இந்த மடையனிடம் இயம்பு மென்று கேட்டு நின்றேன்.
என் நிலையைக் கண்ட இறைவன் மனமிரங்கி
புன் முறுவல் பூத்து புனிதவாய் தான் திறந்து
மானிடனே! நானுமுன்னை மறு உயிருக்கும் மேலாக
ஆறாம் அறிவு தந்து அவனியிலே நான் படைத்தேன்.
ஐம் புலனும் அகமனமும் அதர்ம வழி போகாமல்
அடக்கித் திருப்புதற்கு ஆறாம் அறிவு என்னும்
அங்குசத்தைத் தந்திருந்தும் அதைநீ பயன்படுத்தி
நன்நெறியில் வாழாமல் நாசமாய்ப் போனபின்பு
இங்குவந்து நிற்கின்றாய் இதற்கு நான் என்ன செய்வேன்
நான் படைத்த உயிர்களது நலன்காக்க இயற்கைகளாம்
காற்று வான் நீர்மலைகள் கடல்ஆறு சோலைகளும்


ஊற்று ஒளி நன்னிலமும் உனக்காகப் படைத்திருந்தும்
விஞ்ஞான மாயையிலே வீழ்ந்து பழுதாகிவிட்டு
அழுது புலம்புவது அது எந்தன் குற்றமல்ல.
ஆபத்தைத் தருமென்று அறிந்து நான் மறைத்து வைத்த
மூலப் பொருட்களை நல் வாழ்வுக்குத் திருப்பாமல்
அணுகுண்டு வரையும் நீ ஆபத்தைத் தேடிவிட்டாய்
வாழ்வுக்கு வழிகாட்ட வையகத்தில் பல படைத்தேன்
அகவாழ்வின் ஒற்றுமைக்கு அன்றில் பறவையையும்
அடக்கம் தற்காப்புக்கு ஆமைகளை நான் படைத்தேன்
நல்லதையே தேர்ந்தெடுக்க நான் படைத்தேன் அன்னத்தை
இன்பதுன்பம் உண்டென்று இரவுபகல் மாறவைத்தேன்
என்னென்ன நல்லறிவை எல்லாம்நான் தந்திருந்தும்
உன்னாலே நீ கெட்டாய் உண்மைகளைப் போதிக்க
புத்தரொடு யேசுநபி போன்ற எந்தன் தூதர்களை
சித்தர்களை முத்தர்களை முனிவரொடு யோகிகளை
எத்தனையோ ஞானிகளை அங்கே அனுப்பி வைத்தும்
பித்தர்கள் போல் வாழ்ந்துவிட்டு பேதலித்து நிற்கின்றாய்
அவர்கள் வழி வாழாமல் உன் வழியில் நீ வாழ்ந்தாய்
பேதை மனந்தெளிய பெரிய தர்ம சாத்திரங்கள்
கீதை குறளுனக்கு கிடைக்க வைத்தேன் மானிடனே!
இறப்பும் பிறப்பும் என் பொறுப்பு ஆதலினால்
இடைக்காலந் தன்னில் நீ இவை உணர்ந்து வாழாமல்
என்னை மறந்து என் படைப்பின் தத்துவங்கள்
தன்னை மறந்து தலைகீழாய் நீ நடந்து
நொந்து அழுது வந்தால் இதற்கு நான் என்ன செய்வேன்
அடிப்பதுவும் நீதானே அழுவதுவும் நீதானே
தடுக்கி வழி நடந்து தவிப்பதனால் என்ன பயன்
உண்மைகளை நீஉணர்ந்து ஒழுங்காய் நடந்திருந்தால்
என்னை நீ தேடி இங்கு வரத் தேவையில்லை
ஆதலினால் மானிடனே அயர்ந்து நீ போகாமல்
உன்னுடைய உள்ளத்தில் உள்ளேநீ சிந்தித்தால்
என் படைப்பின் நோக்கமெல்லாம் எளிதில் புரிந்துவிடும்
சென்று வா என்மகனே! திருந்தி நீ வாழ்ந்திடுக!
என்று சொல்லி என் தெய்வம் எனக்கு விடை தந்ததுவே!

மனத் தூய்மை இல்லாமல் ஒரு காரியத்தையும் சாதிக்க முடியாது.


# படங்கள் தரும் பதிவுகள்



பங்குனிமாத வெளியீட்டின்போது வெளியீட்டுரை. மதிப்பீட்டுரையாளருடன்
சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



ஒருவர் லட்சியத்தில் கொண்டிருக்கும் உறுதியே, அவரது வெற்றியின் ரகசியம்.




சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



எந்த வேலையானாலும் அதனுடன் ஒன்றிச் செய்தால் மட்டுமே பயன் விளையும்.

# முற்றிப் பழுத்த முதுமைக்கனி

– திருமதி ப. நடராஜா அவர்கள் –

நம் வாழ்வில் பருவங்கள் மாறும்போது உடலிலும் உள்ளத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றது. இதனால் எமது மனம் பாதிக்கப்படாது என்றும் ஆனந்தமாயிருக்க வேண்டும். அதற்கு வழி அந்தந்தப் பருவத்தில் செய்யவேண்டியவற்றைத் திருப்தியாகவும் அறநெறிக்கமை யவும் செய்யவேண்டும். நமது பருவங்கள்; குழந்தைப் பருவம். மாணவப் பருவமாகிய இளமைப் பருவம், வாலிபப் பருவம், தாய் தந்தையாக முற்றிய பருவம், பாட்டன் பாட்டியாகக் கனிந்த பருவம் இவ்வாறாக மாறுகின்றன.

குழந்தைப் பருவம் குதூகலம் நிறைந்தது. பாட்டும் கூத்தும், விளையாட்டுமாகக் கழிகின்ற பருவம். இக்காலத்தில் கதை, பாட்டு, கூத்துமூலமாக இறை பக்தியையும் இறை நம்பிக்கையையும் ஊட்டுவதோடு செய்யத்தக்கவை, செய்யத்தகாதவை என்பவற்றையும் புரியவைப்பது பெற்றோர்களின் கடமையாகும். இக்காலத்தில் சொல்வதைச் செய்து காட்டினால் தான் குழந்தைகட்குப் புரியும். சொல்வதொன்று செய்வதொன்றாக இருந்தால் குழந்தைகளுக்குக் குழப்பம்தான் உண்டாகும். ஆகவே நல்லவற்றைச் செயலில் தம் வாழ்வுமூலம் பெற்றோர் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். இதனால்த்தான் “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என ஔவையார் அன்று சொல்லி வைத்தார்.

இதன்பின் மாணவப்பருவம். பாடசாலைக் கல்வி இங்கே ஆசிரியராக இருப்பவர்கள் பிள்ளைகளுக்கு நன்நெறியையும் நற்பண்பையும் வளர்க்கும் குரு ஆவர். இவர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுத்தரும் நற்பண்புகளை போதிப்பதோடு நின்றுவிடாமல் தமது செயல், நடத்தைகள்மூலம் வெளிப்படுத்த வேண்டும். இதனால் குருபக்தியும் குருவிடம் மதிப்பும் உண்டாகும். மனத்தை ஒருநிலைப்படுத்தி கற்கவேண்டியவற்றை முழுமையாகக் கற்றுத் தேறுவதற்குப் புலனடக்கம் தேவை. இக்காலத்தில் புலனிச்சைகளைத் தூண்டாதிருக்கும் உணவுகளை உண்பதோடு பிரமச்சரிய விரதத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். யோகாசனப் பயிற்சி யோகாப்பியாசமும் மாணவர்களுக்கு மிகவும் அவசியமானதாகும். பாடசாலைப் படிப்பும் ஆசிரியர்களும் பாடசாலைச் சூழலும் மனதைக் கவரத்தக்கதாக இருந்தால் கல்வி கற்பதும் கரும்பைச் சுவைப்பதுபோல் ஆனந்தமாக அமையும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்னும் குறள் மொழிக்கிணங்க கற்பவற்றை ஐயந்திரிபற அதாவது சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாக உணர்ந்தபின் அதன்படி செயலாற்ற வேண்டும். கற்றதன்படி வாழ வேண்டும். அப்போதுதான் கல்வியின் பயன் முழுமைபெறும். வெறும் ஏட்டுக் கல்வியால் பயனேதும் இல்லை. இதனால்த்தான் “ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது” என்று சொல்லி வைத்தார்கள் அன்று.

**இறைவனுக்காகத் துன்பப்படும் அளவுக்கு உனக்கு இன்பம் கிடைக்கும்.**

இதன்பின் வாழ்வில் பொருளீட்ட வேண்டிய கடமையுள்ளது. இதற்காக அவரவர் இயல்புக்கேற்பத் தொழிற்கல்வியை முறையாகப் பயின்று தொழிலில் ஈடுபட்டபின் இல்லறம் என்னும் நல்லறத்தில் ஈடுபட்டு நன் மக்களைப் பெற்றெடுத்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய நற்கிரியைகளை ஒழுங்காகச் செய்வதோடு அவை ஏன்? எதற்காகச் செய்யப்படுகின்றன என்பதையும் அவர்களுக்குத் தெளிவுபட எடுத்துக்கூற வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க அறநெறிப் பாடங்களை அமுதமாக்கிப் பிள்ளைகளுக்கு உணவுடன் சேர்த்து ஊட்ட வேண்டும். இல்லறத்திற்குரிய பொருளை அறவழியில் ஈட்டவேண்டும். செய்யும் தொழிலே தெய்வமெனச் சிரத்தையோடு செய்யவேண்டும். தாய் தந்தை சுற்றத்தாரைப் பேணவேண்டும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படாது கவனிக்க வேண்டும். நோய், பிணி, வறுமையால் வாடுவோர்க்கு இயன்றவரை உதவி செய்ய வேண்டும். இவ்வாறு வாழ்வில் நாம் செய்யும் கருமங்கள், கடமைகள், அனுபவங்கள் நம்மைப் பக்குவப் படுத்துகின்றன. வாழ்வில் எத்தனை தோல்விகள் இன்னல்கள் ஏற்பட்டாலும் மனம் தளராது வாழ்க்கைப் பாதையில் நன்னெறி தவறாது நம்பிக்கையுடன் தொடர்ந்து செல்ல உதவுவது இறை பக்தியும் இறை நம்பிக்கையுமே. இந்நம்பிக்கையே வாழ்வின் முதுகெலும்பு.

இந்த நம்பிக்கையே வாழ்வின் அத்திவாரம். அத்திவாரம் பலமானால் அதன்மேல் கட்டப்பட்ட கட்டிடம் எந்நிலையிலும் ஆட்டம்காணாது. எத்தகைய இடி, மின்னல், புயலையும் தாங்கி அசையாது நிற்கும். இத்தகைய கடமைகளை ஒழுங்காகச் செய்த நிம்மதி மனத்தை லேசாக்குகின்றது. இதனால் வயது முதிர முதிர ஆனந்தமும் அமைதியும் உண்டாகின்றது. இதையே ஔவையார் விநாயகர் அகவலில், "கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி" எனக் கூறியுள்ளார்.

இறைவன் வகுத்த நன்னெறியில் நாம் வாழ்ந்தால் மொட்டிலே கருகாமல் பூவிலே வாடாமல் காயிலே வதங்கி வெதும்பிப் போகாமல் முற்றிப் பழுத்த கனியாகிப் பேரானந்தமான அமைதியைப் பெற்று வாழலாம். இந்தத் தெய்வீகக் கனியைப் பெற இறை நம்பிக்கையும் அறநெறி புகட்டும் உலக நீதிக் கதைகளுமே அத்திவாரமாகும். ஆகவே ஆரம்பக் கல்வியில் பிள்ளைகட்கு இதை ஊட்டுவது பெற்றோர், ஆசிரியர், கல்வி அதிகாரிகளின் கடமையாகும்.

உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊட்டமளிக்கும் உயர்கல்வி எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | 02 | சித்திரை | 19 | திங்கள் | திருநாவுக்கரசர் |
| மே | 06 | சித்திரை | 23 | வெள்ளி | சிறுத்தொண்டர் |
| மே | 08 | சித்திரை | 25 | ஞாயிறு | மங்கையற்கரசியார் |
| மே | 24 | வைகாசி | 11 | செவ்வாய் | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 08 | வைகாசி | 26 | புதன் | நமிநந்தியடிகள் |
| | | | | | சேக்கிழார் |

*எழுத்திற்கு அகரமும் உலகிற்கு இறைவனும் முதலாகும்.*

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருப்பறியலூர்

– வல்வையூர் அப்பாண்ணா –

இறைவன் நிகழ்த்திய வீரச் செயல்கள் எட்டும் நிகழ்ந்த ஸ்தலங்கள் "வீரட்டானம்" எனப்படுகிறது. குறித்த வீரட்டானத் தலங்களையும் நிகழ்ந்த வீரச் செயல்களையும் குறிக்கும் தனிப்பாடல் இது:

பூமன் சிரம்கண்டி; அந்தகன் கோவல்; புரம் அதிகை;
மாமன் பறியல்; சலந்திரன் விற்குடி; மா வழுவூர்;
காமன் குறுக்கை; இயமன் கடவூர்; இக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.

பிரமன் தலையைக் கண்டியூரிலும், அந்தகனைக் கோவலூரிலும், முப்புராதிகளைத் திரு அதிகையிலும், தக்கனைத் திருப்பறியலிலும், சலந்தரனை விற்குடியிலும், யானையை வழுவூரிலும், காமனைக் குறுக்கையிலும், இயமனைக் கடவூரிலும் இறைவன் சம்ஹாரம் செய்தார் என மேற்குறித்த பாடல் கூறுகிறது. அப்பர் சுவாமிகள் இந்த வீரட்டானங்களை இவ்வாறு கூறியருளுகின்றார்.

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர் வீரட்டானம் காமருசீர் அதிகை
மேவிய வீரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக்கு இடமாம்
கோவல் நகர் வீரட்டம் குறுக்கை வீரட்டம்
கோத்திட்டைக் குடிவீரட்டான மிவைகூறி
நாவில் நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன் தமரும்சிவன் தமரென்று அகல்வர் நன்கே.

உமாதேவியை மகளாகப் பெற்று, சிவபெருமானுக்கு மணஞ்செய்து கொடுத்து, அப்பெருமானை மருமகனாகப் பெற்றான் தக்கன். சிவபெருமானைப் புறக்கணித்து அவியை விஷ்ணுவுக்குத் தந்து ஒரு பெரு வேள்வியை நடாத்த எண்ணினான் தக்கன். காவேரியின் தென்கரை வேதங்கள் தோன்றிய பூமியாதலாலும், வேத மந்திரங்களை நன்கு கற்றுணர்ந்த பிராமணர்கள் இருக்குமிடமாகிய "தட்சண நெய்மிசாரண்யம்" எனப் பெயர் பெற்ற இடமாகையினாலும்- நாரத முனிவரோடு கலந்து ஆலோசித்து- திருப்பறியலூரில் யாகசாலை அமைத்து வேள்வியைத் தொடங்கினான் தக்கன். பிரம்மா, விஷ்ணு, இந்திரன், சந்திரன், சூரியன் உட்பட அனைத்துத் தேவர்களும் வேள்விக்கு வந்திருந்தனர். யாகசாலைக்கு வந்த உமையம்மை தக்கன் கூறிய சிவ நிந்தனையைக் கேட்டு வருந்தினாள். அவமானப் பட்டாள். வேள்வியும் - வேள்வி செய்யும் தக்கனும் அழியுமாறு சாபமிட்டுக் கையிலை திரும்பினாள்.

ஆக்கவும் அருந்தவும் உதவுவதே மழைநீர்.

எம்பெருமான் வீரபத்திரக் கடவுளை ஏவி வேள்வியை அழித்துவிடுமாறு பணித்தார். வேள்வியில் கலந்துகொண்ட தேவர்கள் அனைவருக்கும் தண்டனையளித்ததுடன் தக்கனையும் அழித்தார். தக்கனின் மனைவி வேதவல்லி இறைவனை வேண்டுதல் செய்ய, தக்கனின் தலையில்லா உடலுக்கு ஆட்டுத்தலையைப் பொருத்தி எழச் செய்தார் இறைவன். ஏனைய தேவர்களும் தண்டனையிலிருந்து மீண்டனர். தேவர்களின் வேண்டுதலின்படி பெருமான் இலிங்கத் திருமேனியோடு இத்தலத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நர்ரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம்புலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே.

என்று தக்கன் வேள்வியைத் தகர்த்த இறைவனது வீரச் செயலை அப்பரடிகள் அருளியுள்ளார்.

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் பாடியுள்ளார். சேக்கிழார் ஞானசம்பந்தர் புராணத்தில் **"பறியலூர் மேவும் தோடுலாமலர் இதழியும் தும்பையும் கடம்பும் காடு கொண்ட செஞ்சடைக் கடவுளர் கருது நீடுவீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர்"** என்று அருளிச் செய்கிறார். கந்தபுராணத்தில், **"தண்ணியல் மஞ்ஞையாடும் தண்டுறைப் பறியலூர்"** எனவும், திருவிளையாடற் புராணத்தில் **"மேழகச் சென்னிதன்னை மங்கல மாமறக்கீந்த மருமகனார் இருக்கை"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழ நாட்டின் தென்கரைத் தலம் "திருப்பறியலூர்" சாதாரணமாக "கீழ்ப் பரசலூர்" என்று வழங்கப்பட்டாலும், "வீரட்டேஸ்வரர் கோவில்" என்று கேட்டால் மட்டுமே மக்கள் இலகுவாக வழி காட்டுகின்றனர். இந்தக் கோவிலுக்குச் செல்லும் வழி சற்றே சிரமமானது. (1) மயிலாடுதுறை - தரங்கம்பாடி பாதையில் (2) செம்பொன்னார் கோவிலை அடைந்து (3) பிரதான சாலையில் "நல்லாடை" என்றுள்ள கைகாட்டிப் பாதையில் வலது புறமாகச் சிறிது தூரம் சென்று (4) "பரசலூர்" எனக் கைகாட்டியுள்ள இடத்தில் பிரியும் சாலையில் வலதுபுறம் திரும்பி 2km தூரம் சென்றால் இத் திருக்கோவிலை அடையலாம்.

தக்கன் யாகம் செய்த ஸ்தலமாகையால் "தட்சபுரம்" என்றும், "பறியலூர்" என்றும் பெயர்களுண்டு. சிறிய கிராமம். மேற்கு நோக்கிய சிறிய கோவில். கோவில் எதிரில் சாலையின் மறுபக்கத்தில் விநாயகர் கோவில் உள்ளது. சிறிய கொடி மரம் - நந்தி-பலிபீடம் உண்டு. இங்கிருந்து பார்த்தாலே மூலவர் சந்நிதி தெரிகிறது. உட்பிரகாரத்தினுள் நுழைந்தால் விநாயகர், விசுவநாதர், பைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன. நர்த்தன விநாயகர், தெட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை கோஷ்ட மூர்த்தங்களாக உள்ளனர். சண்டிகேஸ்வரர் சந்நிதி தனியாக உண்டு. கருவறையின் தென்பக்கச் சுவரில் உள்ள ஒரு கல்லில் தக்கன் சிவலிங்கத்தைப் பூசிக்கும் சிற்பம் உள்ளது.

பிரகார மூர்த்தங்களையும் கோஷ்ட மூர்த்தங்களையும் வணங்கிக் கருவறைக்கு முன்பாக உள்ள மண்டபத்தினுள் நுழைந்தால் நமக்கு இடது பக்கமாக உள்ள "தக்ஷசம்ஹார மூர்த்தி"யைத் தரிசிக்கலாம். சூலம், தண்டு, வாள், மணி, கபாலம், உடுக்கு முதலிய ஏந்திய ஆறு திருக்கரங்களுடன் இம்மூர்த்தி (உற்சவத் திருமேனி) காட்சி தருகிறார். சம்ஹார மூர்த்தியின் கீழ்ப்புறமான பீடத்தில் இம்மூர்த்தியின் திருவடியில் தக்கன் வீழ்ந்து

நமது கொள்கை கடவுளிடம் நம்பிக்கை வைப்பது.

கிடப்பதைப் போன்று சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இதனை, தக்கன் யாகம் செய்வது போன்று வடிவமைத்துள்ள ஒரு செப்புத் தகட்டினால் மூடி வைத்துள்ளனர். சிவாச்சாரியார்மூலம் இத்தகட்டினை நீக்கிப் பார்த்தால்- அவர் காட்டும் தீப ஒளியில்- பீடத்தில் செதுக்கப்பட்டுள்ள சிற்பம் துலாம்பரமாகத் தெரிகிறது.

சம்ஹார மூர்த்திக்குப் பக்கத்தில் நடராஜர் சபையுள்ளது. மூலவர் பெரிய திருமேனி- சுயம்பு- சதுர ஆவுடையார். அளவான அலங்காரத்துடன் அருள் பாலிக்கிறார். "வீரட்டேஸ்வரர்" "தக்ஷபுரீஸ்வரர்" என்பது மூலவரின் இன்னொரு திருநாமம். வழமைபோலன்றி கோமுகம் எதிர்த் திசையில் உள்ளது. மண்டபத்தில் உற்சவத் திருமேனிகள் உள்ளன. சோமஸ்கந்தர், விநாயகர், பிரதோஷ நாயகர் என உள்ள உற்சவ மூர்த்தங்களில் மயில்மீது ஒரு காலூன்றி நிற்கும் முருகன் சிலை அற்புதமானது.

வெளி முன் மண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியபடி உள்ளது. அம்பிகை "இளம்கொம்பனையாள்" நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் அருள் பாலிக்கிறார். இக் கோவிலில் நவக்கிரகங்கள் இல்லை. சூரியன் மட்டுமே உண்டு. இங்கு வைரவருக்கு நடைபெறும் அர்த்தசாம வழிபாடு விசேடமானது. வீரட்டேஸ்வரரின் நிறைவான தரிசனம் கண்ட மனநிறைவோடு திருப்பறியலூரை விட்டு வெளியே வருகிறோம்.

"விளங்கொள் மலர்மேல் அயன் ஓதவண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத் தழலாய் நின்றான்
இளங் கொம்பனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப் பறியல் வீரட்டத்தானே"

-சம்பந்தர்-

## குருபக்தி

ஏகநாதன் என்ற பக்தர், தனது குருவான மகான் ஜனார்தனரிடம் மிகவும் பக்தியோடு இருந்தார். குரு சேவையே தன் உலகம் என்று, குரு என்ன நினைக்கிறாரோ அதைச் சொல்லாமலேயே செய்து முடிப்பார். அவர் தன்மீது கொண்டிருந்த பக்தியைப் பார்த்து மகான் ஜனார்தனர், தான் பூஜிக்கும் "தத்தாத்ரேயரிடம்" தன் சிஷ்யன் ஏகநாதனுக்கு காட்சி கொடுத்து அருள்பாலிக்கும்படி பிரார்த்தித்தார். அப்படியே ஒருநாள், ஏகநாதன் தன் குரு சேவையை முடித்துக்கொண்டு காட்டு வழியே வரும்பொழுது ஒரு மரத்தினடியில் மும்மூர்த்தியர் வடிவாக தத்தாத்ரேயர் அவனுக்குக் காட்சி கொடுத்தார். அவரைக் கண்ட ஏகநாதன் ஒரு நிமிடம் நின்று வணங்கிவிட்டுச் சென்று விட்டான். மறுநாள் வழக்கம் போல் குரு சேவை செய்ய ஆரம்பித்தான். மகான் ஜனார்தனர், பகவானைக் கண்டதைப் பற்றி அவன் தன்னிடம் சொல்வான்; சந்தோஷப்படுவான் என எதிர்பார்த்தார். அவன் ஏதும் சொல்லாததால், தானே அவனிடம் "பகவானைப் பார்த்தாயா? அவரிடம் உனக்கு வேண்டியதைக் கேட்டாயா?" என்று கேட்டார். அதற்கு ஏகநாதன், "குருவே, உமக்கு சேவை செய்வது, உமது உபதேசத்தைக் கேட்பது தவிர வேறு எதிலுமே எனக்கு சந்தோஷம் இல்லை. எனவே பகவானைப் பார்த்து நமஸ்கரித்தேனே தவிர அவரிடம் வேண்டிக்கொள்ள எனக்கு எதுவுமே இல்லை!" என்றான். நெகிழ்ந்துபோன மகான் அவனை ஆரத்தழுவி ஆசீர்வதித்தார்.

-பக்தி-

தாகத்துக்கு முன்பே கிணற்றைத் தோண்டு.

உ

# ஞானச்சுடர் 2016 சித்திரைமலர்

## வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**06.05.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "இந்து சமயத்தில் விஞ்ஞானம்"

வழங்குபவர் :- செல்வன் க. கலைவாணன் அவர்கள்

[விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்]

---

**13.05.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "வில்லுப்பாட்டு"

வழங்குபவர் :- கலைமாமணி S.S. சர்மா அவர்கள்

(குருஜீ வில்லிசைக் குழுவினர்)

---

**20.05.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**வைகாசிப் பெருவிழா**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**27.05.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்

[இளை. கிராம உத்தியோகத்தர் - பொலிகண்டி]

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி]

**221ஆவது மலர்**

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

